காஞ்சி முனிவர் கடந்த பல ஆண்டுகளாக மௌன நிலையிலேயே உள்ளார். காஞ்சி முனிவரின் தவத்தால் காஞ்சிமடம் - பீடம் பெருமை பெறுகின்றது. பாரதமாதா மகிமை அடைகிறாள். அந்தக் காஞ்சி முனிவர்; பெரியவர் பரமாச்சார்யார்தான்;

சந்திரசேகர இந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்:

காஞ்சி முனிவர் 100 ஆண்டுகளை நிறைவு செய்யும் இவ்வேளையில், இலங்கை சுங்கத் திணைக்கள இந்து ஊழியர் சங்கம் தனது 25 ஆவது ஆண்டினை நிறைவு செய்கின்றது.

ஓம் திரு மூலேஸ்டராய நம:

உமாசங்கரானந்த சரஸ்வதி ஷிஒம்ஷர் சுவாமி

மௌன மடம், கொழும்பு. இலங்கை.

SUPUN TRADERS

86, SECOND CROSS STREET,
COLOMBO 11
SRI LANKA.

With Compliments

NIROMI TRADE CENTER

H -3, ALVITTIGALA FLATS
COLOMBO 08,
SRI LANKA

TELEPHONE : 685357

சுவாமி விவேகானந்தரின் நூறாண்டு காணும் சிகாகோ சிறப்பொழிவு

வரவேற்புக்கு மறுமொழி

(1893 செப்டம்பர் 11 ஆம் நாள் சிகாகோ நகரத்தில் கூடிய அனைத்துலகச் சமயப் பெருமன்றத்தில் நிகழ்த்திய உரை)

அமெரிக்க நாட்டுச் சகோதரிகளே!

சகோதரர்களே!

இன்பமும் இதமும் கனிந்த உங்கள் வரவேற்புக்கு மறுமொழி கூற, இப்பொழுதுஉங்கள் முன் நிற்கிறேன். என் இதயத்தில் மகிழ்ச்சி பொங்குகிறது. அதனை வெளியிட வார்த்தைகள் இல்லை. உலகத்தின் மிகப் பழமை வாய்ந்த துறவியர் பரம்பரையின் பெயரால் உங்களுக்கு நன்றி கூறுகிறேன். அனைத்துச் சமயங்களின். அன்னையின் பெயரால் நன்றி கூறுகிறேன். பல்வேறு இனங்களையும் பிரிவுகளையும் சார்ந்த கோடிக்கணக்கான இந்துப் பெருமக்களின் பெயரால் நன்றி கூறுகிறேன்.

இம்மேடையில் அமர்ந்துள்ள பேச்சாளர்களில் கீழ்திசை நாடுகளிலிருந்து வந்துள்ள பிரதிநிதிகளைப் பற்றிக் குறிப்பிடும் போது வேற்றுச் சமய நெறிகளை வெறுக்காத பண்பினைப் பல நாடுகளுக்கு எடுத்துச் சென்ற பெருமை தொலைவிலுள்ள நாடுகளிலிருந்து வந்துள்ள இவர்களைத்தான் சாரும், என்று உங்களுக்குக் கூறினார்கள். அவர்களுக்கும் என் நன்றி. பிற சமயக் கொள்கைகளை வெறுக்காது மதித்தல், அவற்றை எல்லோரும் ஏற்றுக்கொள்ளுதல், ஆகிய இரு பண்புகளை உலகத்திற்குப் புகட்டிய சமயத்துக்குரியவன் என்பது குறித்து நான் பெருமை அடைகிறேன். எதையும் வெறுக்காது மதிக்கவேண்டும். என்கிற கொள்கையை நாங்கள் நம்புவதோடு, எல்லாச் சமயங்களும் உண்மையானவையே என்று ஒப்புக் கொள்கிறோம்.

உலகிலுள்ள அனைத்து நாடுகளாலும் அனைத்துச் சமயங்களாலும் கொடுமைப்படுத்தப்பட்டவர்களுக்கும், நாட்டை விட்டு விரட்டியடிக்கப்பட்டவர்களுக்கும் புகலிடமளித்த நாட்டைச் சேர்ந்தவன் என்பதில் பெருமையடைகிறேன். உரோமானியரின் கொடுமையால், தாங்கள் புனிதத் திருக்கோயில் சிதைந்து சீரழிந்த அதே வருடமே தென்னிந்தியாவுக்கு வந்து எங்களிடம் தஞ்சமடைந்த அந்தக் கலப்பற்ற இஸ்ரேல் மரபினர்களில் எஞ்சி நின்றவர்களை இதயமாரத் தழுவிக் கொண்டவர்கள் நாங்கள் என்று கூறிக்கொள்வதில் பெருமைப்படுகிறேன். சிறந்த சொராஸ் திரிய சமயத்தினரில் எஞ்சியிருந்தோருக்கு அடைக்கலமளித்து, இன்னும் பேணிக்காத்து வருகிற சமயத்துக்கு உரியவன் என்று பெருமை கொள்கிறேன்.

என் அருமைச் சகோதரர்களே! எனது பிள்ளைப் பருவத்திலிருந்தே நான் பாடிப் பயின்று வருவதும், கோடிக்கணக்கான மக்களால் நாள்தோறும் இன்றும் தொடர்ந்து ஓதப்பட்டு வருவதுமான கீதத்தின் ஒரு சில வரிகளை இங்கு, உங்கள் முன் குறிப்பிட விரும்புகிறேன்.

எங்கெங்கோ தோன்றுகின்ற ஓடையெல்லாம்
இறுதியிலே கடலில் சென்று
சங்கமாம் பான்மையினைப் போன்றுலகோர்
பின்பற்றும் தன்மை யாலே
துங்குமிகு நெறிபலவாய் நேராயும்
வளைவாயும் தோன்றி வாழும்
அங்கு அவைதாம் எம்பெரு! ஈற்றில் உனை
அடைகின்ற ஆறே யன்றோ!

இதுவரை நடந்துள்ள மாநாடுகளில், மிக மிகச் சிறந்ததாகக் கருதக் கூடிய இப்பேரவை, கீதையில் உபதேசிக்கப்பட்டுள்ள பின்வரும் அற்புதமான ஓர் உண்மையை உலகத்துக்குப் பிரகடனம் செய்துள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ''யார் எவ்வழியைப் பின்பற்றி என்னையடைய முயன்றாலும், நான் அவர்களை அடைவேன். பலரும் பல வழிகளில் முயல்கிறார்கள், எல்லா வழிகளும் இறுதியில் என்னையே அடைகின்றன.''

அளவுக்கு மீறிய மதப்பற்று, மூடபக்தி, இவற்றிலிருந்து தோன்றிய மதவெறி, இவை இந்த அழகிய உலகை நெடுநாளாக இறுகப் பற்றியுள்ளன; வன்முறையை நிரப்பியுள்ளன; அடுத்தடுத்து உலகை உதிரப்பெருக்கில் மூழ்கடித்து நாகரிகத்தை அழித்து, எத்தனையோ சமுதாயங்களை நம்பிக்கை இழக்கச் செய்துவிட்டன. அந்தப் பயங்கரப் பைசாசக் கொடூரச் செயல்கள் தோன்றாதிருப் பின் மனித சமுதாயம் இன்றிருப்பதை விடப் பன்மடங்கு உயர்நிலை எய்திருக்கும்!

ஆனால், அவற்றுக்கு அழிவு காலம் நெருங்கிவிட்டது. இன்று காலையில் இந்தப் பேரவையின் தொடக்கத்தைக் குறிப்பிட ஒலித்த மங்கல மணி, எல்லா மத வெறிகளுக்கும், வாளாலும் எழுதுகோலாலும் நடைபெறுகின்ற கொடுமைகளுக்கும், ஒரே குறிகோளை அடையப் பல்வேறு வழிகளில் சென்று கொண்டிருக்கும் மக்களிடையே நிலவும் இரக்கமற்ற உணர்ச்சிகளுக்கும் சாவு மணியாகட்டும் என்று நான் ஆர்வமுடன் வேண்டுகிறேன்.

With Compliments

READYWEAR INDUSTRIES LTD.

75, M/S, MEZZANIANE FLOOR,
HEMAS BUILDING
YORK STREET
COLOMBO 01
SRI LANKA.

T. PHONE : 438160-9
TELEX : 21317 A/B DRESMEN CE, 22821 A/B READY CE
FAX : 445432, 448604

SWAMI VIVEKANANDA'S
CHICAGO ADDRESS CENTINERY

RESPONSE TO WELCOME

At the World's Parliament of Religious Chicago, 11th September 1893

Sisters and Brothers of America,

It fills my heart with joy unspeakbale to rise in response to the warm and cordial welcome which you have given us. I thank you in the name of the most ancient order of monks in the world; I thank you in the n ame of the mother of religions; and I thank you in the name of the millions and millions of Hindu people of all classes and sects.

My thanks, also, to some of the speakers on this platform who, referring to the delegates from the Orient, have told you that these men from far-off nations may well claim the honour of bearing to different lands the idea of toleration. I am proud to belong to a religion which has thought the world both tolerance and universal acceptance. We belive not only in univarsal toleration, but we accept all religions as true. I am proud to belong to nations of the earth. I am proud to tell you that we have gathered in our bosom the purest remnant of the Israelites, who came to southern India and took refuge with us in the very year in which holy temple was shattered to pieces by Roman tyranny. I am proud to belong to the religion which has sheltered and is still fostering the remnant of the grand Zoroastrian nation. I will quote to you, brethren, a few lines from a hymn which I remember to have repeated from my earliest boyhood, which is every day repeated by millions of human beings: "As the different streams having their sources in different streams having their water in the sea, so O Lord, the different paths which men take through different tendencies, various though they appear, crooked or straight, all lead to Thee.'

The present convention, which is one of the most august assemblies ever held, is in itself a vindication, a declaration to the world, of the wonderful doctrine preached in the Gita: "Whatsoever comes to Me, through whatsoever from, I reach him; all men are struggling through paths which in the end lead to Me' Sectrarianism, bigotry, and its horrible descendant, fanaticism, have long possesed, this beautiful earth. They have filled the earth with violence, drenched it often and often with human blood, destroyed civilization, and sent whole nations to despair. Had it not been for these horrible demons, human society would be far more advanced than it is now. But their time is come; and I fervently hope that the bell that tolled this morning in honour of this convention may be the death-knell of all fanaticism, of all persecutions with the sword or with the pen, and of all uncharitable feelings between persons wending their way to the same goal.

மணமகனாக மகாகணபதி

மங்கள பேரிகை, மத்தளம், சங்கு முதலான பல வித இன்னிசைக் கருவிகளும் முழக்கமிட, தேவர் முனிவர் முதலானவரெல்லாம் பெரும் உற்சாகத்தோடு கரகோஷம் செய்து 'ஜெய! ஜெய! போற்றிட, தேவேந்திரன் திக்கு பாலகர் முதலானவரெல்லாம் மங்கள வாழ்த்துக்கள் கூறிட, அத்திரி முதலான தவமகரிஷிகளெல்லாம் வேதங்களால் துதித்திட, தேவதுந்துபிகள் வானில் கணகணவென்று பேரொலி செய்ய, ஜனக முனிவர் மணமக்களுக்கு நவக்கிரக ஓமம் முதலானவற்றையெல்லாம் செய்து ஓமத் தீயிலிருந்து எடுத்த மைக் குழம்பை விநாயகரின் நெற்றியில் இட்டுப் பிறகு விநாயகரைக் கொண்டே மணப்பெண்களின் நெற்றியிலும் அதை இடச் செய்து மணச் சடங்குகளையெல்லாம் முறைப்படி செய்து முடித்தார்.

பிறகு, மகாகணபதிக்கு மகாவிஷ்ணுவே மாப்பிள்ளைத் தோழராக இருந்து கை கொடுத்து அவரை ஆசனத்திலிருந்து எழுப்பியதும் மணப் பெண்களான சித்தி புத்தியின் விரல்களைப் பற்றிக் கொண்டு மும்முறை தீவலம் வந்து மணப் பெண்களின் பாதங்களைத் தன் கைகளால் தூக்கி நிலத்திலிட்டு பிறகு அம்மியின் மீது வைத்து அருந்ததி பார்த்தார். இவ்வாறு சகல தேவர்களின் சாட்சியாகத் திருமணச் சடங்குகள் அனைத்தும் முறையாக முடிந்ததும் விநாயகர் தம் புத்திளம் மனைவிகளோடு தம் பெற்றோரான பார்வதி பரமேஸ்வரரின் திருவடிகளில் விழுந்து வணங்கினார். அவரையும் மருமகள்களையும் பார்வதியும் பரமசிவனும் ஆசீர்வாதம் செய்து மனம் பூரித்துவிட்டுத் திருமாலைப் பார்த்தார்கள். திருமால் அனைவருக்கும் முறைப்படி தாம்பூலங்கள் கொடுத்தார். கற்பகத்தரு முதலானவையும் எல்லோருக்கும் வேண்டியதையெல்லாம் வாரி வழங்கின. விரிசடையில் பிறைசூடிய சிவபெருமான் எல்லோருக்கும் வேண்டிய வரங்களைக் கொடுத்துவிட்டுத் தம் தேவியோடு மற்றொரு இடத்திற்குச் சென்று அமர்ந்தார்.

- விநாயகர் புராணத்திலிருந்து

M. W. M. ALI WAFFA

"HILL HOUSE"

45, CHINAFORT,
BERUWELA,
SRI LANKA.

25 ஆண்டுகட்கு முன் எமது விழா மலரில் பிரசுரிக்கப்பட்ட கவிதை.

வாணி வரந்தருவாய்

புலவர் மேலவ்வையூர் ஆ. பொன்னையா
சுங்க அத்தியட்சகர்

அறிவினாலே உலகமெல்லாம் ஆளுகின்றவள். அக
ஒளியினாலே உணர்வுதனில் மூளுகின்றவள்
செறியுமின்பத் தமிழினோடு சேர்ந்து நிற்பவள்- தெய்வச்
சிந்தனையில் எண்ணங்களில் சிதறிநிற்பவள்

ஆயகலைகள் வாணியுருவாய் அமைந்திருப்பவள்-அன்பு
அகத்தில்சூழ வடங்கிநின்று வீணைசொல்பவள்
மேயவெங்கள் அறிவுகண்டு ஆணைசெய்பவள்- நாளும்
மேன்மைசக்தி வடிவிலெங்கும் வீற்றிருப்பவள்.

கற்பனையில் கவிதைகளில் மேவிநிற்பவள்- எழிற்
கருத்துதிரும் நாவலரின் நாவினிற்பவள்
அற்புதமாய்ச் சொற்றிறங்கள் தாங்கிநிற்பவள்- பெரும்
அல்லல்வந் தெதிர்ப்பினவை அழித்து நிற்பவள்.

வீரம் அன்பு காதல்செல்வம் விளங்க நிற்பவள்-உண்மை.
விளக்கித்தீமை விலக்கிநன்மை தந்திருப்பவள்
சோர்வு நீக்கி சுறுசுறுப்பு ஊட்டி நிற்பவள்- இங்கு
சொர்க்க வாழ்வு தமிழிலென்று சொல்லி நிற்பவள்.

குழந்தை சொல்லும் மழலைதன்னில் குழைந்துநிற்பவள்-குரல்
இனிமை கொண்ட மாதர்பாட்டில் கலந்திருப்பவள்
பழைய் தமிழர் கலையையுண்டு பருத்திருப்பவள்-பண்
பாடப்பாடப் புதுமைக்கோலம் உருத்தரிப்பவள்.

ஊனினோடும் உயிரினோடும் ஒன்றுசேர்பவள்-உயிர்
உணர்விலொன்றிக் கலந்து இன்ப உலகையாள்பவள்
வானினோடும் மண்ணினோடும் மறைந்து நிற்பவள்-கவிதை
வாழ்வினுக்கு உயிர் கொடுத்து அழகுசெய்பவள்.

குயிலினின்பக் கானமாகக் குரல்கொடுப்பவள்- எழிற்
கோலமயில் ஆடலாகக் கூத்தெடுப்பவள்
வெயிலின் வெற்றிஒளியதாக விளங்கிநிற்பவள்-வீர
சுதந்திரத்தில் வீறு ஊட்டி வெற்றிதருபவள்,

வாணிபெயர் வாழ்த்திநிற்க வாழ்வுவருகுது-இந்த
வையகத்தில் ஆன்மஇன்பம் நாளும்பெருகுது
ஏனிஇந்த வாழ்விற்கன்னை வாணியல்லவோ-அண்ணே
இதுவிளங்கா மனிதன்ஞானச் குனியல்லவோ.

★ 1968 ம் ஆண்டு சுங்கத் திணைக்கள முதல் கலைமகள் மலரில் வெளிவந்தது.

புகழுரை.

இ.வா.ஜகந்நாதன்
கலைமகள் ஆசிரியர்

உ

முருகன் துணை

தண்டமிழறினான் கவிபடைத் துவக்கும்
தகைமையோன் பொன்னையா என் போன்
மண்டிய அன்பின் அவ்வப்போ தினிலே
வரைந்தபல் கவிகளைத் தொகுத்துக்
கண்தரு வனப்பிற் பொன்மலர் எனனும்
கவின் பெயர் தாங்கிய நூலாய்
மண்டலம் கலைக்க வழங்கினன்; ஈது
மலிபுகழ் உறப்பர வுகவே.

1976 ஆம் ஆண்டு பொன்மலர்கள் என்ற கவிதைத் தொகுதியை திரு ஆ. பொன்னையா அவர்கள் வெளியிட்ட போது அதற்கெனக் கிடைத்த புகழுரை. இந்நூலின் விற்பனை வருமானமும் பிரசுர உரிமையும் சுங்கத் திணைக்கள இந்து ஊழியர் சங்கத்துக்கு அளிக்கப்பட்டது என்பது மகிழ்ச்சியுடன் நினைவுகூரத்தக்க விடயமாகும்.

- ஆசிரியர்.

NISOL

SRI LANKA.

THE NEED OF THE HOUR

K. Kumarasingham

God is one and Sages call Him by different names and forms. The essence of all religions is same. The Avatars and Prophets who came on earth preached the same ideals - Sathyam, Dharmam, Shanthi, Prema and Ahimsa. Jesus Christ was the incarnation of pure Love and Compassion. He taught men the way of cultivating virtues like charity, tolerance, justice and love towards all men and other living beings, preaching the Brotherhood of man and the Fatherhood of God. Rama, Krishna, Buddha, Mohamed and Zaroaster were Avatars and Prophets who came down to earth to elevate man from his low depths to that of Divinity. They have given us Holy Scriptures to be taught and practised in our day to day life. Today again the light has come down in human form of Sai with all it's Divine power and brightness to Light the hearts of every human with that spark of Love and to instil in the minds of men the need to transform mankind through Love, Seva and Spiritual Sadhana.

The children of today are going to be the pillars of the Nation. They are a gift of God and the treasures of the country. They should be moulded and brought up in the proper way to ensure future years of peace and happiness in the family, society and the nation. This is the need of the hour.

Let us look around us-let us look at our children. How many of them are getting spoilt by the absence of love from their parents? Absence of discipline born out of pure love both mental and spiritual. Lack of company of good friends and holy men, lack of knowledge of the lives of saints who have by their experience showed mankind the way to lead a meaningful life. Lack of faith in God. Lack of capacity to love and respect parents, teachers and elders deterioration of character and discipline. Above all they have forgotten the tradition and culture of their own. These are symtoms of a deadly disease which if not checked and treated properly at the correct time will have serious consequences in the family, the society and the whole nation.

Who are to be blamed for this situation? It is not the fault of the children. It is the fault of the parents and teachers. It is our negligence or lack of courage to say No' at the proper time or out of fear to displease them. All sorts of trash is available in books and films where sensuality is portrayed as the ideal of life. What can we expect of the weak and tender minds of the children when we give them these sensual attractions as food?

Today children at the tender age of three are sent to classes where they only learn. Ba Ba Black Sheep Have You Any Wool' and Ding dong bell pussy is in the well' but not God is Love', Love all Serve all', Do good, see good and be good'. They are sent to elocution classes but not to Sunday school where they are taught Human Values like Sathya, Dharma, Shanthi, Prema and Non violence. The children who attend elocution classes may get a few marks more at school but the children who attend the Sunday shool will definitely do better in their life by leading a more meaningful life.

As parents and teachers what are our responsibilities towards our children? We should discipline them through love. The children follow the footsteps of their parents. Therefore the parents must serve as examples for the children by leading a righteous life - attitude in appearance and character and rid of all faults. A parent who drinks and smoke cannot ask the son to refrain from doing it. There should be harmony and peace at home. Just as charity begins at home, the family should be the very first school and the parents should instil in the minds of the children through their own example, the values of prayer, humility, love for all living beings, virtues, compassion, tolerance, respect for elders and selfless service to the poor, sick and the needy. They should demonstrate in their own lives how love can confer peace and joy; How all Faiths lead to the same goal and how all men are brothers of one another, not to inflict pain on any living being and not do unto others what you dont like others do unto you.

Sunday classes conducted by the spiritual organisations like the Vivekananda Society, the Ramakrishna Mission and the Sathya Sai organisations where children are taught Human values - Truth, right conduct, peace, love and non violence, teachings of Divine Teachers of all faiths and great men will help to mould the character of the children and give them the proper guard against ups and downs of life.

Unless these qualities are implanted in the minds of the children when they are young it will not be possible when they grow up. If a plant is good when it is small, it will grow upto into a straight and good tree but if the plant becomes crooked even when it is small, the entire tree will be crooked. The Tamil proverb **ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா** 'will bear good testimony

இளைப் பாறிய சுங்க அத்தியட்சகரான திரு.கே.குமாரசிங்கம் அவர்கள் சங்கத்தின் முன்னாள் பொருளாளரும் சமயத் தொண்டருமாவார். இன்னாள் குழந்தைகளிடையே சமய அறிவு குறைந்து காணப் படுவதைக் கண்டு, மனம் நொந்து, இவ்விடயத்தில் பெற்றோர், ஆசிரியர்கள் ஆற்ற வேண்டிய பணிபற்றி இங்கு ஆங்கிலத்தில் உரைக்கிறார்.

ஆசிரியர்.

ORIENTAL TRADING COMPANY

265, SEA STREET
COLOMBO 11
SRI LANKA.

T. PHONE : 431913 - 5
FAX : 54151

With Best Compliments

From

ST. ANTHONY'S CONSOLIDATED LTD.

516, SRI SANGARAJA MAWATTA,
COLOMBO 10,
SRI LANKA.

Tel : 24261 (5 Lines)
Fax : 546554

Cables : "SANITSHIP"
Telex : 22687 SANCON CE

BEST COMPLIMENTS

FROM

EURO ASIA GARMENTS (PVT) LTD.

407/1, SRIMAVO BANDARANAYAKE MAWATHA,
COLOMBO - 14,
SRI LANKA.

Telephone : 432923

BEST COMPLIMENTS

FROM

S. R. SONS

4/1A, HAMERS AVENUE,
WELLAWATTA,
COLOMBO 06.
SRI LANKA.

Telephone : 500701

WITH BEST COMPLIMENTS

FROM

ISHARA TRADERS

No. 438, HAVALOCK ROAD,
COLOMBO 6,
SRI LANKA.

WITH BEST COMPLIMENTS

FROM

NAVAVI

Dealers in Imported & Local Textile Suitings, Shirtings, Shirts, Trousers, Tee Shirts, Readymade Suits, Children Garments, Frocks, Sarees, Tights, Etc , for Ladies, Gents, Children.

CUSTOM TAILORS FOR LADIES & GENTS

NAVAVI
525, GALLE ROAD,
BAMBALAPITIYA,
COLOMBO - 4.
SRI LANKA.

Telephone : 501085, 588485

BEST COMPLIMENTS

FROM

Kannan Clearing & Forwarding Agency

(CUSTOMS HOUSE AGENTS)

MULTI PLAZA COMPLEX
93 - 2/10 - 12, Main Street,
COLOMBO 11,

Telephone : 421967
Fax : 448673

Residence :
65/111, Crow island, Mattakkuliya Rd,
Colombo 15.

BEST COMPLIMENTS

FROM

WAHLS SHOPPING CENTRE

Dealers in T. V., Radio, Watches and Luxury Goods

152, BANKSHALL STREET,
COLOMBO 11,
SRI LANKA.

Telephone: 546028

BEST COMPLIMENTS

FROM

METRO METALS (PVT) LTD.

No; 37, Quarry Road,
Colombo-12
Sri Lanka

Phone : 440954, 440956

WITH BEST COMPLIMENT

FROM

NANDA TRADING COMPANY

CONVERTORS OF PAPER & BOARDS
PAPER MERCHANTS & STATIONERS
STOCKIST: CHINESE & INDIAN PRINTING, CUTTING, MACHINERIES

No. 110, New Moor Street,
Colombo-12

Phone : 25066, 434165, 438901
Fax : 94-1-449942
Telex ; 23054 Royal CE
T' Grams : "Goldmari"

WITH BEST COMPLIMENTS

OF

TRANSLANKA APPARELS LTD.

46, RATNAPITIYA ROAD,
BORALESGAMUWA,
SRI LANKA.

WITH BEST COMPLIMENTS

OF

ORIENTAL TRADING COMPANY

265, SEA STREET,
COLOMBO - 11,
SRI LANKA.

Telephone : 431913 - 5
Fax : 541516

WITH BEST COMPLIMENTS

FROM

Kellogg's

THE WORLD'S FAVOURITE

BREAKFAST CEREAL

Sole Agents :

STASSEN FOODS

BEST COMPLIMENTS

FROM

ARAFATH TRADERS

Importers, Dealers in Textiles Readymade Garments,
Electrical Goods and Stationery.

A. S. M. CASSIM
(PARTNER)

Lucky Paradise Super Market,
53 - 1/43, 1st Foor,
Keyzer Street,
Colombo - 10
Sri Lanka.

Phone : 324323

BEST COMPLIMENTS

FROM

A. M. L. FERNANDO

MARY STORES

214, BANKSHALL STREET,
COLOMBO 11,
SRI LANKA

பூசைகளும் அபிஷேகங்களும்

தொகுப்பு : திரு. ம. புவிகரன்
சுங்க அத்தியட்சகர்

தமிழர் வாழ்வு திருக்கோயில்களை மையமாகக் கொண்டுள்ளது. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றும், ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்றும் தமிழர் கருதினர். பண்டைக் காலந் தொடக்கம் தமிழர் கடவுள் வழிபாடும் பற்றும் கொண்டிருந்தார்கள். இதைப் பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியம் கூறுகிறது. ''கடவுள் வாழ்த்தோடு கண்ணியவரும'' இது அத்தொடராகும். வழிபாடு என்பது பூசைசெய்தலாகும். பூசை செய்யும்போது அபிஷேகமும் இடம்பெறும். இவை இரண்டும் நீரில் நிழல் போல ஒன்றோடொன்று தொடர்பும் பிரியாமையும் உடையன. சங்ககாலத்து தமிழர்கள் இறைவழிபாடு செய்த முறையைப் பரிபாடல் என்றும் பழைய நூல் குறிக்கின்றது. ''வேண்டுநர் வேண்டியங்கு ஏய்தினர் வழிபட '' என்று திருமுருகாற்றுப்படை என்றும் சங்கநூல் கூறுகின்றது.

வழிபாடுஎன்றால் ஒரு முகமாக ஒருவழியில் செல்லல் என்பது கருத்து. இதுவே பூசையாகும். பூசை செய்பவன் பூசை செய்யும் முறை என்பன சிறப்பாக அமைய வேண்டும். முழுமுதல் பெருமானிடம் செலுத்தும் பணியே பூசையாகும். பூசைக்கு முன்னர் அபிஷேகம் இடம்பெறும். இவை இரண்டிற்கும் நாம் செய்யும் விண்ணப்பங்களும் கிரியைகளும் இடம் பெறும். இங்கே நாம் வணங்கும் தெய்வத்திடம் வேண்டும் போது அவனையிட்டுப் புகழவேண்டும். இது மனித இயற்கை. ஒருவரிடத்தில் நாம் பெற்றுக் கொள்வது பெரிதாயினும் சிறியதாயினும் இருக்கலாம். ஆனால் பெறுபவனையிட்டு புகழ்வது இயற்கையாகும். இதுவே திருமுறைகள், புராணங்கள் இதிகாசங்கள் கூறும் வழிகளாகும்.

மனிதன் எதனோடு தொடர்பு வைக்கின்றானோ அதன் இயல்பு அவனுக்கு உண்டாகின்றது, உரிதாகின்றது. ஆகையால் இறைவனிடம் தங்களை ஒப்படைப்பதற்கு முதல் படியாக பூசை செய்கின்றான். பூசை செய்வதற்கு முன் அபிஷேகம் இடம்பெறுகின்றது. மனிதனும் இவ்வாறே தனது வாழ்க்கையை முதலில் தொடங்கும் போது காலை எழுந்து காலைக் கடன் முடித்து ஸ்நானஞ் செய்துதன்னைத் தூய்மைப்படுத்தி கொண்டே தொடங்குகின்றான்.

இவ்வாறு நம்மைச் சுத்தி செய்வதுபோல கடவுளையும் அதாவது நாம் தினமும் தியானிப்பவரை அபிஷேகிக்க வேண்டும். இது பலவகையாகப் பெயர் பெற்று பல கிரிகைகளையுடையதாக இருக்கிறது. நாம் பூசை செய்யும் போது இதன் முறைகளும் கிரிகைகளும் வேறுபாடுடையவனவாக இருக்கும்.

ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்யோசாதம், அதோதம்-, ஆறு முகங்களையும் கொண்ட ஆண்டவன் ஒவ்வொரு முகத்திற்கும் உரிய வேறுபட்ட பூசையைப் பெறுகிறார். இதனால் கிரிகைகளும் அபேதமாக மறைமுகமாக வேறுபட்ட அபிஷேடங்களை உடையதாக இருக்கும். நாம் பூசை செய்யும் முழுமுதற் கடவுளாகிய விநாயகரை வழிப்படும்போது பின்வருவனவற்றைக் கவனிக்க வேண்டும். சிவபெருமான் எங்கும் வியாபகமாக இருப்பினும் சிவலிங்கம் முதலிய திருமேனியும், குருவும், சங்கமமும் இடமாகக் கொண்டு நின்றும் அகத்தே உயிரிடமாக் கொண்டும் நின்றும் ஆன்மாக்கள் செய்யும் வழிப்பாட்டை கொண்டருளுவர். சிவபெருமான் இவ்விடங்களில் தயிரில் நெய் போலவும் எள்ளில் எண்ணெய் போலவும் விளங்கி நிற்பர். மற்ற விடயங்களில் பாலில் நெய் போல வெளிப்படாது நிற்பர். ஆதலினாலே ஆன்மாக்கள் பரம பதியான சிவபெருமானை குரு, லிங்க, சங்கமம் ஆகிய இடங்களிலே விதிப்படி சிரத்தையோடு வழிபட வேண்டும். வழிபாடு என்பது பூசை என ஏலவே கூறினோம்.

இவ்வழிபாடு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்றும் நான்கு மார்க்கத்தாலும் செயற்பாலதே ஆகும். மலம் நீங்கிய சிவஞானிகளும் பூர்வ மலவாசனை தாக்காமையின் பொருட்டும் மேன் மேலும் சிவனாந்தம் வளருவதற் பொருட்டும் சிவலிங்கம் முதலிய திருமேனியை வழிபடுவர். ஆன்மாக்களை முக்கியமாக கரையில் ஏற்றும் காரணமாகவே மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றுவடிவாச் சிவபெருமான் விளங்குகின்றார். பூசை வழிப்பாட்டு முறையான தொடங்கி குறிக்கப்பட்ட நாளை முடித்த பின்னர் நடப்பது தீர்த்தம், ஆகவே கோயில் அமைப்பில் தீர்த்தமும் அமைந்திருக்க வேண்டும்.

''மூர்த்தி தலம் தீர்த்த முறையாற் றொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலசற் குருவும் வாய்க்கும் பராபரமே''

என்றார் தாயுமான சுவாமிகள்.

பிறவிகளுள் சிறந்த மானுட ஜன்மத்தை முற்பிறப்பில் செய்த புண்ணிய மேலீட்டினால் அடைந்த யாவரும் பசுபதியாகவும், உலகிற்கு கர்த்தவாயுமுள்ள சிவபெருமானைப் பூசிக்க வேண்டும். அந்த பூசையானது ஆன்மார்த்த பூசை, பரார்த்த பூசை என இருவகைப்படும். ஆசாரியரால் தீஷை செய்விக்கப்பட்டு அந்தத் தீஷா குருவால் கொடுக்கப்பட்ட மண்டலம், சஷணிகம், ஸ்படிகம், முதலான லிங்கங்களில் ஆன்ம நலம் கருதிச் செய்யப்படுவது ஆன்மார்த்தமாகும். பரார்த்த பூசை என்பது சிவாலயங்களில் தனக்கும் பிறருக்கும் அருள் பாலிக்கும் பொருட்டு சிவாலயங்களில் விளங்கும் சுயாம்புவம், தேவிகம், திர்யம், மானுஷம், ஆர்ஷம், பாணம் என்ற எழு வித லிங்கங்களுள் ஒரு லிங்கத்தில் ஆதி சைவர்கள் எனப்படும் சிவாசாரியாரைக் கொண்டு செய்விக்கப்படும் பூசையாகும்.

எல்லாக் காரியங்களையும் நிறைவு செய்தலும் ஆன்மாவுக்கு ஞானத்தை அளிப்பதாலும் சிவ பூசை எனப் பெயர் பெறுகிறது. அச்சிவ பூசை செய்பவன் விஸ்தாரமான ராச்சியத்தையும் அக்கினி காரியங்களினால் சம்பத்தையும் ஜபத்தினால் பாபநிக்கிரகத்தையும் தியானத்தினால் ஞானத்தையும் பெறுவான். இவனுடைய வீடு சகல பாக்கியங்களும் நிறைவுற்றதாய் இருக்கும் தினந்தோறும் நடைபெறும் கிரியைகள் நித்திய கிரியைகள் எனப்படும். மக்கள் இதனை நித்திய பூசை என வழங்குவர். இப் பூசை முறை அவ்வக் கோயில்களின் தன்மைகளுக்கும், மரபுகளுக்கும் ஏற்ற வகையில் நடைபெறும். காலை, மாலை, இரு வேளைகளிலும் உச்சியையும் சேர்த்து மூன்று வேளைகளிலும் பூசை நடைபெறுவதுமுண்டு. ஆறு காலப் பூசை, பன்னிரண்டு காலப் பூசை திருக் கோயில்களில் நடைபெறுகின்றன. இவைகளில் நடைபெறும்

With Compliments

M. S. HEBTUALBHOY & CO. LTD.,

257, GRANDPASS ROAD,
COLOMBO 14,
SRI LANKA.

T. PHONE : 421841 / 2 / 3
TELEX : 21309 TELHEBS CE
22644 SHAIKH CE
FAX : 94 1 440915

கிரிகைகளைக் கொண்டே, ஆலயம். கோயில், திருக்கோயில், தேவஸ்தானம் எனப் பல பெயர்கள் உள்ளன.

பூசை செய்யும் போது பின்வருமாறு பிரித்துக் கொள்ளுதல் நல்லது. சூரியன் உதயம் தொடங்கி ஏழரை நாழிகாலம் காலச் சாதிபூசைக் காலம் முதலில் சூரியனை பூசித்த பின்பு கணபதியை பூசிக்க வேண்டும். அதன் பிறகு மகேஸ்வர பேதங்களுக்கும் மூல விக்கிரகத்திற்கும் பரிவார மூர்த்திகளுக்கும் அபிஷேகம் அலங்காரஞ் செய்தல் வேண்டும். நை வைத்தியம் செய்யும் பொழுது கணபதியைப் பூசித்த பின்னரே மற்றையவற்றைக் கவனிக்க வேண்டும். பூசைகள் 33/4, 71/2, 111/4 ஆகிய நாளிகைகளில் இடம் பெறும். அதற்கு ஒவ்வொன்றுக்குமிடையில் அபிஷேகம் இடம் பெறவேண்டும். ஸ்நபனம், பஞ்சகவ்வியம், வைத்து பூசை செய்து கொண்டு லிங்கச் சுத்தியுடன் சுவாமிக்கு முறையாக அபிஷேகம் செய்து போகாங்கம் வரையில் பூசித்து தேவிக்கு அபிஷேகம் சந்தனம், புஷ்பம் முதலியவற்றால் அல்ங்காரஞ் செய்து கடைசியில் சண்டேஸ்வரருக்கு பூசை செய்தல் வேண்டும்.

யாவர்க்குமாம் இறைவாக்கு ஒரு பச்சிலை என்று திருமூலர் அருளியவண்ணம் பூசை செய்யும் போது பச்சிலையாவது நாம் கொண்டு செல்ல வேண்டும். இயலுமானால். பூக்கள் நீர்ப்பூ, நிலப்பூ, கோட்டுப்பூ, இவற்றில் ஒன்றாவது இறைவனுக்கு பூசிக்கக் கொண்டு போக வேண்டும்.

பூசை செய்வதின் பெருமையையிட்டு பலப்பல ஞானிகள். ஆசாரியார்கள். மகான்கள் வியந்து கூறியுள்ளார்கள். தாயுமான சுவாமிகள்

''காலையும் மாலையும் கால் பெயர்த்திடுவதுன்
ஆலயம் வலம் வருவதற்கே
சால்பினில் கைகொடு சயிற்றுதேய நின்னது
கோயில் பல்பணி குறித்தே''

என்றார்.

சாதாரண பூசை செய்யும் போதும் திருவிழாக்கள் எடுக்கும் போது அபிஷேகம் செய்வது மாறுபடும். அபிஷேகம் என்பது மனதினால் பூசித்த இறைவனை சிவலிங்கத்தில் எழுத்தருளுமாறு வேண்டி உபசாரங்கள் மூலம் செய்யப்படும் கிரிகைகள். (அபிஷேகமாக அமையும்) மந்திர உபசரிப்பால் தூய்மை பெற்ற நீரே அபிஷேகத் தீர்த்தமாகும். குளிர்ச்சியும் நறுமணமும் அடையும் பொருட்டு இத்தீர்த்தத்துள் நறுமணமுள்ள திரவியங்களும் தாமரை, வாதுளை, அலரி சண்பகம் முதலிய பூக்களும் இடப்படும்.

ஆலயங்களின் சுற்றாடலுக்கும், அங்குள்ளவர்களின் பொருட் செறிவுக்கும் ஏற்ப கூடியும் குறைந்தும் அபிஷேகம் செய்யப்படும். இதன் பாகுபாடு, தகைமையும் கும்ப நீரைக் கொண்டது. ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று ஆகிய கும்பங்கள் காட்டும். கும்பம், குடம், அதனுள் நீர், உள் இரத்தினங்கள் குடத்தைச் சுற்றிய நூல், செபிக்கும் மந்திரம், சூர்ச்சம், மாவிலை, தேங்காய், வஸ்திரம் என்பன சேர்ந்ததாகும்.

குடம்-தசை, நீர்-குருதி, இரத்தினம் அல்லது நாணயம்-எலும்பு, மந்திரம்- உயிர், கூச்சம் -தலைமயிர், மாவிலை -சடை, தேங்காய்-தலை, வஸ்திரம்-தோல், இவைகள் இறைவனைக் குறிக்கும், இதனால் இறைவனை ஆவாகனஞ் செய்து தர்ப்பையால் தொட்டு குடத்தைச் சுற்றியுள்ள நூல் நாடிகளை எழுப்பி உயிர்பெறச் செய்வது. இந்த தீர்த்தம் அபிஷேகத்திற்குப் பிரதானமானது அபிஷேகப் பொருள்கள் தூயநீர், மலரிட்டநீர், வாசனைத்திரவியம், சந்தனம், பால், தயிர், நெய், தேன், கருப்பஞ்சாறு, சர்க்கரை, வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம், தாமரத்தம்பழம், மாதுளம்பழம், நாரத்தம்பழம், தேங்காய்ப்பூ, இளநீர், கோரோசனை, பச்சைக்கற்பூரம், கஸ்தூரி, பன்னீர், அன்னம், மாக்காப்பு, மஞ்சட்காப்பு, பஞ்ச கவ்வியம், பஞ்சாமிர்தம் என்பன, இத்திரவியங்கள் எடுக்கக்கூடியளவு எடுத்து ஆகக் குறைந்தது 5 ஆவது இருக்க வேண்டும்.

இவைகட்கு மேலாக சங்காபிஷேகம் இடம்பெறும். இது கூடியது ஆயிரத்து ஈட்டு சங்குகளில் அர்ச்சித்த தூய நீர் நிரப்பி அவற்றால் அபிஷேப்பது. சந்தனக்காப்பு முக்கிய இடம்பெறுவதும் உண்டு. பெருமானை சந்தனத்தால் மூடி மறைத்து அபிஷேகிப்பது, விபூதி அபிஷேகம், பஞ்சாமிர்த அபிஷேகம் என்பனவும் இடம்பெறும், நாம் இவ்விடத்தில் கும்பாபிவேஷகம் என்று கும்பத்திலுள்ள தூய நீரினால் அபிஷேகிப்பதைக் கூறினோம். கும்பாபிஷேகம் என்பது குட முழுக்கு என்றும் பெயர் பெறுகின்றது.

நம் நாட்டு முறைகளுக்கேற்ப கும்பாபிஷேகம் குடமுழுக்கு என்பது இடம் பெறுகிறது. இக்கிரியை சம்பிரதாயத்தைப் பொறுத்தது. அனாதிமல சித்துருவாகிய பரம் பொருள் கற்பனைக் கடந்த சோதியாயினும் அனாதி மல பெத்தர்களாகிய ஆன்மாக்கள் வணங்கிய போக, மோஷங்களை அடைய ஆலயத்தில் நிறுவப்படும் சிவலிங்கத் திருவுருவில் கருணைவுருவாகிக் கொண்டு பிராத்தித்து அபிஷேகித்தலே கும்பாபிஷேகம், பூசை, அபிஷேகம். இவற்றை முறையாகச் செய்வதற்கு ஆலயம் வேண்டும் ஆகவே ஆலயத்திற்குக் கும்பாபிஷேகம் செய்யவேண்டும். இதை பிரதிஷ்டை என்று கூறுவர். ஏனெனில் கும்பாபிஷேகத்துக்கு முன் பிரதிட்டை இடம் பெறவேண்டும்.

இது ஆவர்த்தம், அனவர்த்தம், புனரவர்த்தம், அந்தரீகம். என நான்கு வகையாக்கலாம்.

ஆவர்த்தம்:- புதிதான ஓர் இடத்தில் சிவலிங்கம் வைத்துப் பாலப்பிரதிஷ்டை செய்து பூசித்து புதிதாக் கோயில் கட்டி பாலாலயமூர்த்தயைக் கும்பத்தில் எடுத்து பின்னர் மூலஸ்தானத்தில் இருக்கும் மூர்த்தியில் சேர்த்து அபிஷேகம் செய்வதாம்.

அனுவர்த்தம்:- வெகு காலத்துக்கு முன் கோயில் கட்டிபூசையில்லாமல் அழிய விட்டும் சீர்குலைந்து இருந்து முன்போல அவைகளைத் திருத்தி ஆலயம் ஸ்தாபித்து (கற்பித்து) கும்பாபிஷேம் செய்தலாம்.

புரனராவர்த்தம்:- கர்ப்பக்கிரகம், விமானம், பிரகாரம், கோபுரம், பலிபீடம் முதலியவைகளில் பழுது ஏற்பட்டாலும் அட்டபந்தனத் தினத்தில், பழுது உண்டானாலும் விமானத்தில் உள்ள விக்கிரகங்களில் பழுது நிகழ்ந்தாலும் வர்ணம் அழிந்து இருந்தாலும், பாலாலயம் செய்து ஆலயத்தைப் மூலஸ்தானத்தில் பிரசிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்தலாம்.

அந்தரீதம்:- ஆலயத்தில் சோரன், சண்டாளன், நாய் முதலியன உட்சென்று தீண்டியதின் காரணமாக மூர்த்தியின் பிரத்தியங்கம் உபாங்கம், போன்றவைகளில் ஏதாவது பழுது ஏற்பட்டால் அவைகளைத் திருத்தி உடனே செய்வதாகும். இதில் அந்தரீதப் பிரதிஷ்டைக்கு நாள் நட்சத்திரம் பார்க்க வேண்டியதில்லை. பொருட் பொதிக்கு ஏற்றதாக உடனே செய்து முடிக்கலாம்.

திருச்சிற்றம்பலம்

With Compliments

THE OSSIANIC TRADERS

F 41, PEOPLE'S PARK COMPLEX,
GAS WORKS STREET,
COLOMBO 11
SRI LANKA.

T. PHONE : 445745
FAX : 941-445745
TELEX : 22993 ROJAIR CE

சுவிஸில் ராசாத்தி கல்யாணம்

சுவிஸில் ராசாத்தி கல்யாணம் எனும் நகைச்சுவை இசைக் கதம்பத்தில் பங்கேற்கும் சுங்க அதிகாரிகள்

இடமிருந்து வலம்:

எஸ்.சபாநாதன், எஸ்.பேரின்பநாயகம், ஜே.பி.போல், பி.யோகநாதன், பி.எஸ்.ஆனந்தேஸ்வரன்,எம்.ஆர்.ராஜ்மோகன், எஸ்.ஆர்.யோகானந்தன்.

MEEWELLA (PVT) LIMITED

IMPORTERS OF BRAND NEW & RECONDITIONED VEHICLES

169, HIGH LEVAL ROAD,
COLOMBO 06.
SRI LANKA

TELEPHONE : 512031
FAX : 573310

With Compliments

SAN FASHION LTD.

752 / 1, BASELINE ROAD,
COLOMBO 09,
SRI LANKA.

நிகழ்ச்சி முன்னேட்டம்

மரபுவழி இசை

கலாசூரி. என்.கே. பத்மநாதன் குழுவினர்

விநோத விருந்து

(சங்கத்தின் 25 ஆண்டு சமய சேவையைக் குறிக்குமுகமாக 25 வினைகள் கிழைத்தேய மேலைத்தேய வாத்தியக் கருவிகளுடன் இசைக்கும் நிகழ்ச்சி).

இசையமைப்பு, பயிற்சி, நெறியாள்கை } 'சங்கீத கலாநிதி கலாசூரி' ஸ்ரீமதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன்

தபேலா, டிரம்ஸ் – 'அப்சராஸ்' புகழ் எஸ். ரங்கன்.

முதற் பரிசு உரைகள்

"ஆலயந் தொழுவது சாலவும் நன்று"

"சைவ சமய மறு மலர்ச்சி

அறிவியல் துணுக்குகளும்

(வினோத உடைப் போட்டி)

சுங்க அதிகாரிகளின் பிள்ளைகள் கலந்து கொள்கிறார்கள்.

வேடங்கள்: ராமர், பிள்ளையார், முருகன், சூரன், ஆண்டாள், மீரா, காஞ்சி காம கோடி, பாரதியார், சரஸ்வதி, திருஞான சம்பந்தர்.

நிகழ்ச்சி வடிவமைப்பு : எம்.ஆர். ராஜ்மோகன்

இசை : எம். மோகன் ராஜ்

தயாரிப்பு : பி.எஸ்.ஆனந்தேஸ்வரன்

(போட்டி நடனம்)

கங்கா சங்கமி

சொர்க்கத்திலே ஒரு நாள் கங்கையும் துர்க்கையும்
தர்க்கத்திலே இறங்கிவிட்டார்.
சொக்கனின் மீதுரிமை
மிக்கவர் எவரெனும்
சிக்கலில் இறங்கிவிட்டார்.

கங்கை – ஸ்ரீமதி வசந்தகுமாரி சூரிய குமாரன்
(கண்டி 'பரத ஷேத்திரா நாட்டியாலய' கல்லூரி அதிபர்)

சங்கரி – செல்வி நிருத்த சொரூபி சிவபாதம்
(கொழும்பு 'நிருத்தியக்ஷேத்ரா' கல்லூரி அதிபர்)

புதிய விதமாக மேடையின் இரு மருங்கிலும் இரு வாத்தியக் குழுவினர் அமர்ந்திருக்க பல்வேறு வாத்தியக் கருவிகளின் பின்னணியில் இப்போட்டி நடனம் இடம் பெறும்.

நடன அமைப்பு, நட்டுவாங்கம் : ஸ்ரீமதி அனுஷா தர்மராஜா

இசை அமைப்பு : 'விவித கலா வினோதன்' எஸ்.கே.பரராஜசிங்கம்

பிரதியாக்கம் : சில்லையூர் செல்வராசன்

நிகழ்ச்சி வடிவமைப்பு, தயாரிப்பு : எம்.ஆர். ராஜ்மோகன்

பிரதம அதிதி உரை

"சமயமும் வாழ்க்கையும்"
பேராசிரியர் டாக்டர்.பொ. பூலோகசிங்கம் அவர்கள்.

சுவிஸில் ராசாத்தி கல்யாணம்

(நகைச்சுவை இசைக் கதம்பம்)
சங்க அதிகாரிகளின் நிகழ்ச்சி
எழுதி, தயாரித்து அளிப்பவர் : பூ.யோகநாதன்
கதை சொல்பவர் : எம்.ஆர். ராஜ்மோகன்
உடன் இசைப்பவர்கள் : செ. பேரின்பநாயகம், ஜே.பி.போல்,
பி.எஸ்.ஆனந்தேஸ்வரன்

குறை ஆயுளுடன் முடிய வேண்டிய ஜாதகமுடைய ராசாத்திக்கு வெளிநாட்டிலுள்ள சகோதரர்கள் சுவிஸில் மாப்பிள்ளை பார்த்திருக்க, ராசாத்தி தனியே மாப்பிள்ளையைத் தேடி சுவிஸ் செல்கிறாள்.

யம கிங்கரர்களும் கிளாலி, கொழும்பு தாண்டி சுவிஸுக்கும் ராசாத்தியின் உயிரைக் கவர்ந்து வரச் செல்கிறார்கள்.

சுவிஸில் ராசாத்தி கல்யாணம் நடை பெற்றதா?

சுப்பிரமணியத்துக்கும் ராசாத்திக்கும் உள்ள சம்பந்தம் என்ன?

புலிகள் [illegible] எப்படி?

பரிசளிப்பு வைபவம்

அகில இலங்கை ரீதியிலான போட்டிகளுக்கான பரிசுகள்
கொழும்பு இந்து பாடசாலைப் போட்டிகளுக்கான பரிசுகள்
சங்க அங்கத்தினர் பிள்ளைகளுக்கிடையிலான போட்டிகளுக்கான பரிசுகள்

ஓம் நமசிவாய நாட்டிய நாடகம்

நடன அமைப்பு, நட்டுவாங்கம் : 'கலாசூரி' ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரன்.
இதர இசைக் கலைஞர்களுடன்
பின்னணி இசை வழங்குபவர்கள் : 'அப்சராஸ்' புகழ் மோகன்ராஜ், எஸ். ரங்கன்

இங்கு ஓம் நமசிவாய என்ற தலைப்பில் ஆடல் அரசனின் அற்புத இயக்கங்கள் கலைப்படைப்பாகின்றன. சைவ சமயத்தவரின் முழு முதற் கடவுளாகிய சிவ பெருமானை வாழ்த்தி வழிபடும் விதத்திலும் இந்த நிகழ்ச்சி அமைய விருக்கிறது. சிவனை உமையவள் வீழிபடுதல், சிவன் சக்தி நடனம், தேவர்கள் பாற்கடலை அடையும்போது விஷம் தோன்ற,அதை சிவன் உண்ண,உமையவள் அதனை சிவனின் கழுத்துடனேயே நிற்க வைக்க,சிவன் நீலகண்டன் எனப் பெயர் பெறுதல், சகல உலகங்களிலும் உள்ள அடியார்கள் ஆதிநாயகனைப்போற்றி வழிபடல் ஆகியவற்றை சிறப்புற இந்நாட்டிய நாடகம் சித்தரிக்கிறது.

கௌரவ அறிவிப்பாளர்கள் : திரு. வி.என். மதியழகன், திரு. எஸ். விஸ்வநாதன்
திரு. அருணா செல்லத்துரை திருமதி. புவனலோஜனி
திருமதி. ஜரீன் பஸ்தியாம்பிள்ளை

With Compliments

Anura Diesel House

97, K CYRIL C PERERA MAWATHA,
COLOMBO 13
SRI LANKA.

வீணா பிருந்தா (25வீணைகளின் இசை) நிகழ்ச்சியில் பங்குபற்றுவோரில் ஒரு பகுதியினர்.

இடமிருந்து வலம் :

அருந்ததி அருளானந்தம், துளசி கனகசபை, வித்யா இராமச்சந்திரன்,ஆனந்தி அருளானந்தம், சோபிதா தாமோதரம்பிள்ளை, காயத்திரி தாமோதரம்பிள்ளை.

WITH BEST COMPLIMENTS

FROM

SAREE MUSEUM

Specialists for Sarees and Blouse Materials

" ORCHARD SHOPPING COMPLEX "
7 - 8/3, GALLE ROAD,
WELLAWATTE,
COLOMBO 6,
SRI LANKA.

Telephone : 587072

WITH BEST COMPLIMENTS

From

ARUL DRY FISH STORES

222, BANKSHALL STREET,
COLOMBO - 11,
SRI LANKA.

Telephone : 439520

WITH BEST COMPLIMENTS

FROM

SOOSEY MARIYAN FERNANDO & SONS.,

83, 85, Fourth Cross Street,
Colombo-11
Sri Lanka.

Telephone : 440872

BEST COMPLIMENTS

FROM

C. W. Mackie & Company Limited.

– 92 years of undisputed success the world over in the Export Trade

C. W. MACKIE & CO. LTD.
Export of Crepe Rubber & Sheet Rubber

RUBBER CONVERTER LIMITED.
Manufacture and exports of plantation Sole Crepe & industrial Sole Crepe,

SUBSIDIARY COMPANIES :

C. W MACKIE (NTP) LIMITED.
Export of non - Traditional Products.

C. W. Mackie (Coconut Products) Ltd.
Export of Desicated Coconut, Coconut Oil & other Coconut Products.

CEYMAC RUBBER CO, LTD.
Manufacture and export of Technically Specified Rubber

MACKGRAINS LIMITED.
Imported and Distribution of Pure Refined Sugar.

KOREA CEYLON FOOTWEAR MFG. CO, LTD.
Manufacture and Export of Canvas Footwear.

36, D. R. WIJEWARDANE MAWATHA,
COLOMBO 10,
SRI LANKA.

Telephone : 423554 - 63
Telex : 21209 A B MACKIES CE
22497 A/B CEYMAC CE

Facsimile : 440228

WITH BEST COMPLIMENTS

FROM

RANSIRI TRANSPORTERS LIMITED

Transports, Clearing & Forwarding Agents

18, Lillie Street,
Colombo - 02,
Sri Lanka.

Telephone : 20495, 448926

With Best Compliments

From

MARCO CEYLON ENTERPRISE

S 34. 2nd Floor,
Colombo Central Super Market,
Colombo - 11.
Sri Lanka

Telephone : 430210

WITH BEST COMPLIMENTS

FROM

SABREEN TEX,

242, 2nd CROSS STREET,
COLOMBO 11,
SRI LANKA.

WITH BEST COMPLIMENTS

FROM

SABREEN VIDEO VISION,

67/1, KAYZER STREET,
COLOMBO 11.
SRI LANKA.

WITH BEST COMPLIMENTS

FROM

P. S. SUNDARAM & SONS (PVT) LTD.,

75, BARBER STREET,
COLOMBO 13.
SRI LANKA

T'phone : 328549

- கவிஞர் கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம் - 10 பாகங்கள்
- பாரதியார் கவிதைகள், பாடல்கள், வாழ்க்கைக்குறிப்புகள்
- பாரதி தாசன் கவிதைகள்.
- பரிமேலழகர் எழுதிய திருக்குறள் விளக்கவுரை.
- இராஜேந்திரன் எழுதிய திருக்குறள் தெளிவுரை
- கிருபானந்த வாரியாரின் திருப்புகழ் - பக்தி நூல்கள்
- ஜோதிட சாஸ்திர நூல்கள்
- வைத்திய குறிப்புகள்
- யோகாசன பயிற்சி விளக்கம்
- ரமணிசந்திரனின் நாவல்கள் சிறுகதைகள்

மற்றும் பல அறிஞர்களின் சமய, பக்தி நூல்களும்
பாடசாலைப் புத்தகங்களும் பெற்றுக்கொள்ள
விஜயம் செய்யுங்கள்

இறக்குமதியாளர்களும், ஏகவிநியோகஸ்தர்களும்

பி. எஸ். சுந்தரம் அன் சன்ஸ் (பிரைவட்) லிமிடெட்

75, பாபர் வீதி
கொழும்பு - 13.

தொலைபேசி. *328549*

இன்பமே எந்நாளும் துன்பமில்லை

திருமதி செல்வம் கல்யாணசுந்தரம்

எத்தனையோ கோடி ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்து எண்ணற்ற இன்னல்களை அனுபவித்த, முற்றுமுணர்ந்த முழுஞானக் குன்றான அப்பர் சுவாமிகள் அறுதியிட்டு முழங்கிய முத்தான வாக்கே இக்கட்டுரையின் தலைப்பாகும். இந்த மூன்று சொற்கள் கொண்ட அற்புத வாக்கு, மனித வாழ்வின் குறிக்கோள்களையும், சைவத்தின் உள்நோக்கத்தையும் பறைசாற்றுகின்றது. இன்பம் மனிதனின் இயல்பு. அதைத் தேடி அலைவதும் மனித இயல்பு. இன்பத்தைத் தேடி அலையும் மனிதகுலம் பெரும்பாலும் துன்பத்தையே சந்திக்கின்றது. எனவே இவ்வுலகம் துன்பக்கேணி, கண்ணீரின் பள்ளத்தாக்கு என்று பலரும் பரவலாக எண்ணுகின்றனர். அப்படியிருக்கையில் அப்பர் பெருமான் 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை'' என்று எப்படி எக்காளமிட்டார்? எமக்கும் அது கைவரக் கூடிய சாத்தியமுண்டா? என்ற கேள்விகள் எழுகின்றன. அவற்றுக்கு விடை காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழும் வழியை நமது முன்னோர்கள் வகுத்து வைத்து, வாழ்ந்து காட்டிச் சென்றுள்ளனர். வாழையடி வாழையாக ஞானகுரு பரம்பரை நம்மைச் சூழ்ந்து சுற்றி வந்து கொண்டிருக்கின்றது. ஆனால் நாம் எங்கு செல்கிறோம்? என்ன செய்கிறோம்? எதைக் கற்கிறோம் என்பதைப் பொறுத்தே வாழ்வு துன்பத்தின் தொடர்கதையா அல்லது இன்பத்தின் இருப்பிடமா என்பது தங்கியிருக்கின்றது. பிராரத்துவ கர்மவினையை நாம் அனுபவித்தே ஆக வேண்டும் என்பது பொது விதி. 'வென்றிடலாகும் விதிவழி தன்னையும்' என்பது விதி விலக்கு. நமது கர்மவினைக் கேற்ப நமது பிறவி அமைகிறது. இன்னும் எத்தனையோ பிறவிகள் தொடர இருக்கின்றன. இதற்கு முன்னும் எத்தனையோ பிறவிகள் எடுத்திருக்கின்றோம். அனுபூதிமானான மாணிக்கவாசக சுவாமிகள் தான் எடுத்த பிறவிகளையெல்லாம் எடுத்துக்கூறி 'செல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம் பெருமான் ' என்று கழிவிரக்கம் கொள்கிறார். நாம் முன்செய்த வினைக்கேற்ப பிறவி ஏற்றமும், இறக்கமும் கிடைக்கிறது. நமது நல்வினைக்கேற்ப மேல் ஏழு உலகங்களில் (பூர், புவ, சுவ, மக, தப, ஜன, சத்திய) நல்ல பிறவியும், நமது தீவினைக்கேற்ப கீழ் ஏழு உலகங்களில் (அதல, சுதல, விதல, தராதல, மகாதல.... பாதாளம்) கீழ்பிறவிகளும் கிடைக்கின்றன. இந்த உலகத்திலேயே நமது வினைக்கேற்ப நல்ல பிறவியும், நலமற்ற கீழ் பிறவியும் நமக்கு வாய்க்கின்றது. இந்த மாறாத சுழற்சியின்றும் விடுபடாதவரை, எம்மைத் துன்பம் சூழ்ந்து கொண்டே இருக்கும். இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ என்று ஞானிகள் ஏங்கி அழுதார்கள். 'அரிது, அரிது, மானிடராதல் அரிது' என்றார் நமது ஔவைப் பிராட்டியார். இம்மானிடப் பிறவி மிக உன்னதமானது. ஏனெனில் இப்பிறவியில்தான் நாம் எமது விடுதலையைத் தேடிக் கொள்ள முடியும். மேலுலகங்களில் நல்வினைப் பயனை அனுபவித்தபின் இங்குதான் திரும்பி வரவேண்டும். கீழ் உலகங்களில் தீவினைப் பயனை அனுபவித்து முடிந்த பின்னும் இங்குதான் வரவேண்டும். ஆகவே இங்கு நாம் செய்ய வேண்டியது என்ன என்ற ஆதங்கம் எழுகின்றது. நமது இந்து மதம் அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றை இங்கே அனுபவித்து விட்டு விடுதலை அடை என்கிறது. பிரமச்சாரியம், கிருகஸ்தம், வானப் பிரஸ்தம், சன்னியாசம் என்ற கால வரையறைகளை வகுத்திருக்கின்றது. அந்தந்தக் காலத்தில் அந்தந்தக் கடமைகளைச் செய்து முடித்தால் பிறவிச்சுமை குறைகிறது. இந்த விதமான காலவரைக் கடமைகளைச் செய்யத் தவறும் போதே வாழ்வு துன்பச் சுமையாகிறது - பிரமச்சரிய காலம் வாழ்வுக்கு அத்திவாரமாய் அமைகிறது- கல்வி, கட்டுப்பாடு கடைப்பிடிக்க வேண்டிய காலம், கற்பவை கசடறக் கற்க வேண்டிய காலம் பிரமச்சரிய ஒழுக்கம் பேணவேண்டிய காலம் - அறம் என்பது தவம் எனப் பொருள்படும் (Discipline of the mind and body) இல்லற வாழ்வுக் காலம் பெரும் பொறுப்புக்களைச் சுமக்கும் காலமாகும் - நல்ல வழியில் பொருள் ஈட்டி குடும்ப நலம் பேணி நல்ல வழியில் பொருளைச் செலவு செய்து, நன் மக்களைப் பெற்று வளர்த்துப் படிப்பித்து உருவாக்கிச் சமுதாயத்துக்கு உதவும் காலமாகும். இல்லறத்தான், தென்புலத்தார், தெய்வம் விருந்து என்ற மூவரையும் பேணக் கடமைப்பட்டுள்ளான். இவன் தினந்தோறும் ஐவகை யாகங்களை இயன்றவரை செய்தல் வேண்டும். அவையாவன பூத யாகம், பித்துயாகம், மனித யாகம், ரிஷி யாகம், தெய்வ யாகம் என்பனவாம். பூதயாகம் என்பது ஜீவன, பறப்பன முதலிய ஐந்துகளைக் கவனித்தல். பாம்புப் புற்றில் அரிசிக் குறுணி போடல், பட்சிசாலங்களுக்கு உணவு போடல், கால் நடைகளைக் கவனித்தல் முதலியனவாம். அரிசிமாக்கோலம் போடல் பூத யாகத்திலொன்றாகும். பித்துரு யாகமென்பது இறந்தவர்களுக்காகச் செய்யும் நற்கருமங்களாகும். மனித யாகம் என்பது உதவி யாசிக்கும் மனிதர்களுக்குதவுதல். ரிஷி யாகம் என்பது ரிஷிகள் நம்மைவிட்டுச் சென்ற ஆத்மீக விஷயங்களைப் பரப்புதல். தெய்வ யாகம் என்பது தேவத்தில் கூறப்பட்ட கருமகாண்டங்களில் இயன்றதைச் செய்தல். சமுதாய நலன் பெரும்பாலும் இல்லறத்தானிலேயே தங்கியிருக்கின்றது. எனவே அவன் நாளாந்தம் தன்னால் இயன்வரை மேற்படி ஐந்து யாகங்களையும் செய்ய வேண்டுமென்று இந்து மதம் விதித்திருக்கின்றது. இந்த அவசர யுகத்தில் இது சாத்தியமா என்று அங்கலாய்க்க வேண்டியதில்லை. எவரும்

With Compliments

from

SHIRAN GARMENTS (PVT) LTD.

118, MAITHRI BODHIRAJA MAWATHA,
COLOMBO 12,
SRI LANKA.

TELEPHONE : 578273, 578258.

செய்யக்கூடியதும் இலகுவானதும் ஆனவற்றை எவரும் செய்யலாம். பிள்ளைகள் வளர்ந்து திருமணமானதும் இல்லறத்தானின் இல்லறக் கடமைகள் முடிவடைகின்றன. பேரப் பிள்ளைகளைப் பார்ப்பது இல்லறத்தான் கடமையல்ல. இல்லறக் கடமைகள் முடிந்ததும் கணவனும் மனைவியும் ஆத்மீகத்தில் ஈடுபடுவதே வானப் பிரஸ்தமாகும். உலகப் பற்றுவிட்ட நிலை சன்னியாசமாகும்.

மேலும் இந்து மதம் அவனவன் சுய குணத்திற்கேற்ற தொழிலையே செய்யச் சொல்கின்றது. ஒருவனது சுய குணத்திற்கேற்ற தொழில் கிடைக்காத போதும், கிடைத்ததும் அதைச் செய்ய முடியாதபோதும், அல்லது செய்ய முடிந்தும் அதைச் செய்யாதபோதும் துன்பம் விளைகின்றது. இப்படிப்பட்டவர்களைத் திருமூலர்

'கல்லாமனிதர், கயவர், உலகினில்
பொல்லா வினைத்துயர் போகம் செய்யாதே'

என்று வைகிறார். துன்பம் மனிதனைப் பக்குவப்படுத்தி, வாழ்க்கை நிலையாமையை அவனுக்குணர்த்தி வாழ்வின் இலக்கை நோக்கி அவனை வேகமாக முன்னேற வைக்கின்றது. ஆனால் கவலை மனித மனத்தையும், உடல் வளத்தையும், நாடி நரம்புகள் யாவற்றையும் நாசமாக்கி விடுகின்றது. துன்பத்தையும் கவலையையும் இனங்காணத் தெரிய வேண்டும். அன்று மாவீரன் அருச்சுனனுக்கு குருஷேத்திரத்தில் தோன்றிய மனக்குழப்பமும் சஞ்சலமும் இன்று எம் அனைவருக்கும் தினசரி வாழ்வில் ஏற்படுகின்றது. வாழ்வுச் சூழ்நிலைகளை மாற்ற எம்மால் முடிவதில்லை. கணத்துக்குக் கணம் குழப்பமும் துயரமும் மலிகின்றன. தேவைகள் பெருகுகின்றன. எல்லோரும் எம்வசமிழந்து எங்கோ தள்ளுண்டு தடுமாறுகின்றோம். அப்பரடிகள் வாக்குக்கு எதிர்மாறாக துன்பமே எந்நாளும் இன்பமில்லை என்று எண்ணத் தோன்றுகின்றது. இந்த இக்கட்டான நிலையில் நாம் செய்யவேண்டியது என்ன? நமது ஓடும் மனத்தை ஒழுங்கு பண்ணி நமக்குள் இருக்கும் ஆத்மாவுடன் இணைக்க வேண்டும்.

அன்று கீதைநாயகன் மனம் குழம்பிய அருச்சுனனுக்கு எழுநூறு சுலோகங்களால் பகவத் கீதை என்னும் அமுத சுரபியை அளித்து மனித குலத்தை ஆட்கொண்டருளினான். எண்ணாயிரம் ஆண்டுகட்டுமுன் வாழ்ந்த திருமூல நாயனார் மூவாயிரம் திருமந்திரங்களை அருளி எம்மைக் கரைசேர்க்க முற்பட்டார். இந்த இரு நூல்களும் (பகவத் கீதை, திருமந்திரம்) உடலின் தன்மை, ஆத்மாவின் தன்மை, மனதின் தன்மை முதலியவற்றை விளக்கி 'நான்' 'எனது' என்ற எண்ணமே மனக் குழப்பத்திற்குக் காரணம். அவற்றை அகற்றி, ஒருவன் தனது கடமையைப் பற்றில்லாமலும், செய்பவற்றின் பலனின் பற்றில்லாமலும் செய்ய வேண்டும் என்பதை ஆணித்தரமாகக் கூறுகின்றன. மேற்கூறிய நூல்களிலிருந்து ஒரு சுலோகத்தை அல்லது ஒரு செய்யுளை நாம் அறிந்து, சாதனை மூலம் உணருவோமேயானால் 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்பதை அனுபவமாயிலாக உணருவோம். உதாரணமாக, ஸ்ரீமத் பகவத்கீதையின் சூடாமணியெனக் கருதப்படும் கீழ்க்கண்ட சுலோகத்தைச் சாதனை செய்வது சாலச் சிறந்ததாகும்.

''சாவதர்மான் பரித்தியஜ்ஜ மாமேகம்
சரணம் விரஜ
அகம்துவா சர்வ பாபேப்யோ மோக்ஷரிஸ்யாமி
மாசுஜ

இதன் பொருள் 'எல்லாக் கருமங்களையும் எனக்கர்ப்பணித்துவிட்டு என்னைச் சரணடை நான் உனது பாவங்கள் அனைத்தையும் போக்கி உனக்கு முக்தியளிக்கின்றேன். இதனைப் போன்று திருமந்திரத்தில் ஏதேனும் ஒரு பாடலைச் சாதனை செய்யின் பிறவிப் பயன்கிட்டும்.

''நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான்பற்றிநின்ற மறைபொருள் சொல்லுவன்
பற்றிநின்ற உணர்வுறு மந்திரம்
பற்றப் பற்றத் தலைப்படும் தானே

பொருள்: வான் பற்றி நின்ற மறைபொருளும், நமது ஊனைப் (உடம்பைப்) பற்றி நிற்கும் உணர்வுறு மந்திரமும் 'ஓம்' எனும் பிரணவப் பொருளான ஐந்தெழுத்து மந்திரமாகும். 'ஓம்' என்ற மந்திரம் (Vibratory Life Force) அகார, இகார, உகார, ஓங்கார, மகாரமாகிய ஐந்தெழுத்துக்களைக் கொண்டது. அது சகல உயிர்களிலும் சக்கரமாக ஒடிக்கொண்டிருக்கின்றது. இது ஆத்ம சக்கரம் என்றழைக்கப்படுகின்றது. இந்த ஐந்தெழுத்துக்களாலேயே, பஞ்ச பூதங்களும் (நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்) உயிர்வர்க்கங்களும் உண்டாக்கப்பட்டதாகக் கீழ்வரும் திருமந்திரம் கூறுகின்றது

ஐந்து பூதம் படைத்தனன்
பலயோனி படைத்தனன்
இவ் அகலிடம் தாங்கினன்
அமர்ந்திருந்தானே

எனவே நமக்கு உள்ளும், புறமும் நீக்கமற நிறைந்து, சடைச்சுப் பரந்துபட்டு நிற்பது ஐந்தெழுத்து மந்திரமாகும். 'எமது மனத்தை அந்த உணர்வுறு மந்திரத்தில், உயிர்க்கும் மந்திரத்தில் உயிராய் இயங்கும் மந்திரத்தில் பதித்துப் பழக்கி அதனுடன் அல்லும் பகலும், அனைவரதமும் ஒன்றி இருந்தால் எப்போதும் இன்பம் பெருகும். 'மனத்தை அடக்குவது காற்றைப் பிடிக்கும் கதையல்லவா? அது எப்படி முடியும்'' என்று அருச்சுனன் கிருஷ்ண பரமாத்மாவிடம் பிரலாபித்தபோது, 'அப்பியாசத்தாலும், வைராக்கியத்தாலும் அதைச் செய்ய முடியும்' என்று பகவான் உறுதியளித்தான். அருச்சுனனின் நிலையிலுள்ள நாமும், தீர்க்கமான வைராக்கியத்துடன் சாதனை செய்தால் மனம் அடங்கி, ஒடுங்கி, ஆத்மாவில் லயித்துவிடும். அப்போது நாமும் அப்பரடிகளுடன் சேர்ந்து

துளங்கிலென் மண் கம்பமாகிலென்
தானம் துளங்கித் தலைதடுமாறிலென்''

என்று இறுமாந்திருக்கவும் இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்ற எக்காளமிடவும் முடியும்.

வாழ்த்து

சுங்கத்திணைக்களத்(து) இந்து மன்றம் பல
சுத்த நல் ஆக்கங்கள் கண்டு மேலும்
கலை வெள்ளிவிழா ஓங்க
அருள் பொங்குகவே.

பிள்ளையார் சுழி (உ)

ப்ரதமம் பிந்து ஸம்யுக்தம்
த்விதீயம் தண்ட முச்யதே''

முதலில் சிறுவட்டமாக ஒரு புள்ளியை எழுதி, இரண்டாவதாக அதன் கீழ் ஒரு கோட்டை இழுத்தல் என்பது இதன் பொருள்.

எந்தக் காரியத்தை முன்னிட்டு எழுதும் போதும், அது விக்னம் இல்லாமல் நிறைவேறும் பொருட்டு விக்னேஸ்வரனான ஸ்ரீ விநாயகர் பெருமானை வழிபட்டுப் பிள்ளையார் சுழி போட்டு எழுதத் தொடங்குவது நல்லது.

P. L. A. GUNAWARDANA

29, GALHENA ROAD,
NUGEGODA,
SRI LANKA.

WITH BEST COMPLIMENTS

FROM

SASCON KNITTING CO., (PVT) LTD.,

MANUFACTURERS OF

HARRODS

FINE KNIT CASUAL WEAR

FOR

GENTS, LADIES & CHILDREN

Showrooms

654, GALLE ROAD,
COLOMBO 01.
Telephone : 500932

2 36 1st FLOOR,
" MAJESTIC CITY "
COLOMBO - 04.
Telephone : 508901

Y. M. B. A. BUILDING,
COLOMBO - 01.
Telephone : 422949

76/2, MINUWANGODA ROAD,
EKALA
JA-ELA.

BEST COMPLIMENTS

FROM

MORDERN CHEMICALS

157, Forth Cross Street,
Colombo - 10
Sri Lanka.

WITH BEST COMPLIMENTS

FROM

M. MUZAMMIL,

ARMOUR STREET,
COLOMBO - 13.
SRI LANKA.

வெள்ளி விழாப் போட்டிகள்

பாடசாலைப் போட்டிகளில்

முதல் பரிசு பெற்றோர்

கிழ்ப்பிரிவு

மேற்பிரிவு

செல்வி ஜானகி செல்வத்துரை

நாவன்மைப் போட்டி

செல்வி தனலிங்கி கதிர்காமநாதன்

செல்வி கல்யாணி இராசலிங்கம்

திருமுறை மனனப் போட்டி

செல்வன் சுப்பிரமணிய சர்மா இராஜினி பிரசாந்

பண்ணிசைப் போட்டி

செல்வன் நீலகண்டன் சரவணன்

BEST COMPLIMENTS

FROM

FAWMY TRADERS

Importers & Dealers of New & Reconditioned Vehicles

337, D. S. SENANAYAKE VEEDIYA,
KANDY,
SRI LANKA.

Telephone: 08-32294

Fax: 94832294

BEST COMPLIMENTS

FROM

DUMINDA ENTERPRISES

IMPORTS & DISTRIBUTORS OF HARDWARE

349, OLD MOOR STREET,
COLOMBO 12,
SRI LANKA.

Telephone : 423620, 20195

WITH BEST COMPLIMENTS

FROM

PALAYAHAT TRADING CO.

IMPORTS OF NEW & RECONDITIONED VEHICLES

76, COLOMBO STREET,
KANDY,
SRI LANKA.

Telephone : 08 - 23654
Fax : 94-08-32554

WITH BEST COMPLIMENTS

FROM

NEW CINTA TRADING CO.,

IMPORTERS OF ELECTRONIC SPARE PARTS FOR T. V., VIDEO, RADIO AND AUDIO ETC.

65, FIRST CROSS STREET,
COLOMBO 11,
SRI LANKA.

Tel : 432184

WITH BEST COMPLIMENTS

FROM

WICKRAMARATNES (PVT) LTD.

GOVERNMENT CONTRACTORS, SUPPLIERS, TRANSPORT AGENTS IMPORTERS AND EXPORTERS
WE ALSO PROVIDE COOL ROOM FACILITIES AND BUILDING MATERIALS SERVICES

THROUGH OUR COMPLEX AT
PELIYAGODA.

Office:
No. 231, Dam Street,
Colombo 12.

Telephone : 436097, 432803, 435648
Fax : 432986

Branch :
427 A, Negombo Road,
Peliyagoda.
Telephone : 531028

WITH BEST COMPLIMENTS

FROM

NAVO-VINO TRADERS.

IMPORTERS OF MOTOR VEHICLES AND CUSTOMS HOUSE AGENTS

OFFICE :
SRI LANKA EX SERVICEMENS BLD.,
No. 29/1, BRISTOL STREET,
COLOMBO 01.
Telephone : 422347

Residence :
87/2, Y. R. De SILVA GARDENS
ALEN AVENUE, DEHIWELA.
Telephone : 727008

With Best Compliments

From

BOBBY TRAVELS AND TOURS

TICKETING AGENT
AND AIRPORT TRANSPORTING
(Including Telecommunication Facilities)

443 C, GALLE ROAD,
BAMBALAPITIYA,
COLOMBO 04,
SRI LANKA.

WITH BEST COMPLIMENTS

OF

ROTAX LTD.

(IMPORTERS & DISTRIBUTORS FOR ELECTRICAL EQUIPMENTS)

No. 332, Galle Road,
Colombo 4.

Telephone : 502095, 502096, 580825
Fax : 587286

WITH BEST COMPLIMENTS

FROM

BANI TRADERS (PRIVATE) LIMITED

General Hardware Merchants and Importers, Suppliers
of Plywood Sheets all Sizes, Hard Boards, & M. S. Angles Etc.

No. 378, Old Moor Street,
Colombo 12.

Telephone : 445413

BEST COMPLIMENTS

FROM

OCEANICK IMPEX

EXPORTERS, IMPORTERS OF TEXTILES & GROCERIES

133/1/1, KEYZER STREET,
COLOMBO - 11.
SRI LANKA

AUTHORISED SOLE AGENTS IN SRI LANKA FOR :

KIBS LUNGIES & HOSIERIES

Telephone: 449583, 326386
Fax : 26961

WITH BEST COMPLIMENTS

FROM

DURO PIPE INDUSTRIES LTD.

MANUFACTURERS OF DURO PVC PIPES & FITTINGS

No. 311, (Second Floor),
Old Moor Street,
Colombo 12.

Telephone : 440759, 440760, 446781

WITH BEST COMPLIMENTS

FROM

M. I. M. MUNEER DYE WORKS LTD.

No. 255, Main Street,
Colombo 11.
Sri Lanka

Telephone Off : 435350, 435689
Telephone Res : 589889
Fax : 586992, 445123
Telex : 22349 Muneer CE

சைவ சமயநெறியில் ஒரு கண்ணோட்டம்

திரு. எஸ்.ஆர். யோகாநந்தன்

சுங்க அத்தியட்சகர்

மக்கள் செம்மையான முறையில் சமூக உணர்வுடன் வாழ்வாங்கு வாழவேண்டும். படிப்படியாகப் பக்குவப்பட்டு உண்மைநெறி உணர்ந்து தெய்வீக நிலை அடையவேண்டும். இந்நிலைக்கு இட்டுச் செல்லும் வழி- பண்டைத் தமிழர் கொள்கைகளால் ஆன பழம் பெரு நெறி, சைவ நெறி. இஃது நிலையான ஒரு நீதி நெறி முறை. இதனால் ''சனாதன தர்மம்'' என அழைக்கப்படுகிறது. இந்து மதத்தின் ஒரு பிரிவான சைவம், உலகிலுள்ள சமயங்களிலே தொன்மையானது. சிந்து வெளி சிவலிங்க வழிபாட்டை நாம் அறியத்தக்கதாக ஆய்வுகளின் முடிவுகள் வெளியானது அறிந்ததே.

இத்தன்மைச் சிறப்புடைய சைவ சமயத்தின் உள்ளடக்கங்களின் அளவு சமுத்திர நீரினளவுக்கு ஒப்பானது. வேதம், ஆகமம், வேதாங்கம், சூத்திரம், இதிகாசம், புராணம், உபபுராணங்கள், தர்மசாஸ்திரங்கள், திருமுறை என நமது கடவுளியற் கொள்கை, அனுட்டானங்கள், கிரியைகளைக் கூறும் நூல்கள் ஒரு தொகை. இவையாவற்றையும் கற்றுத்தேர்வதென்பது அவ்வளவு கலபமான காரியமல்ல. இதனால் சில அடிப்படை வழிபாட்டு முறைகள், அனுட்டானங்கள் என்பவற்றிலேயே பூரண விளக்கமின்றி எம்மிடையே பலர் உள்ளோம். ஏதோ ஒரு கிரம முறையிலும், மற்றவர் செய்வதைப் பார்த்தும், தான்தோன்றித்தனமாகவும் நமது வழிபாடுகளைச் செய்து வருகிறோம். இதனால் தான் நமது வழிபாடுகளும், அனுட்டானங்களும் அடிக்கடி வன்மையான விமரிசனங்களுக்கு உள்ளாகிவிடுகின்றன.

வெறும் நம்பிக்கைகளாக மட்டுமல்லாது காரண காரியமுடன் அறிவியல் ரீதியில் அமைக்கப்பட்டுள்ள சமய அடிப்படைகளையும், கடப்பாடுகளையும் இதுவரை அறியாது ''நாம் சைவர்'' என்று பறைசாற்றிக் கொள்ளலாகாது.

தீட்சை:-

சிவனை அடைவதற்கான வழியே சைவம். இவ்வழி நிற்பவரே சைவர். ஆனால் சிவபெருமானைத் தரிசித்து விதிப்படி வழிப்படுவதற்கு நாம் சில தகுதிகள் பெறவேண்டும். அத்தகுதி பெற்று சிவனை வழிபடுபவரே நூறுவீதம் சைவராகிறார். இத்தகுதியே ''சிவதீட்சை''. ''தீஷா'' என்பது ஞானத்தைக் கொடுத்து மலத்தைக் கெடுப்பது எனப் பொருள்படும். இஃது சமயதீட்சை, விஷேடதீட்சை, நிர்வாணதீட்சை, ஆசார்ய அபிடேகம் எனத் தகுதிகளை உயர்த்தி இறைவனுக்கு அண்மையில் இட்டுச் செல்கிறது. தீட்சை பெற்றவர் குறித்த அனுட்டானங்களையும் நியமங்களையும் மேற்கொள்ளக் கடமைப்பட்டவர். கொள்ளாமை, கள்ளாமை, விரதம், பிறன்மனை நயவாமை போன்ற நியமங்களும், நீராடல் சந்தியாவந்தனம், ஜெபம் போன்ற அனுட்டானங்களுமே அவை.

> *சிறந்த சமயத் தொண்டரான, சங்க உப செயலாளர் திரு எஸ்.ஆர். யோகானந்தன் அவர்கள் சங்கத்தில் நீண்டகாலம் பொதுச் செயலாளராகக் கடமையாற்றிய பெருமையைப் பெற்றவர். நம்மவரில் சிலர் தான்தோன்றித் தனமாக வழிபாடுகளைச் செய்து வருவது கண்டு அவர்கட்கு அடிப்படை வழிபாட்டு முறைகள், அனுட்டானங்கள் பற்றி சிறு விளக்கமொன்றை இங்கு தருகிறார். - ஆசிரியர்*

இந்நியம அனுட்டானங்கள், மனப்பக்குவத்தையும் உறுதியையும் அளிக்கவல்லன. மானிடப் பிறப்பிற் பெறத்தக்க பெரும்பேற்றைப் பெறவழி செய்யும் தீட்சையைப் பெற்று சமய ஒழுங்குகளைக் கடைப்பிடித்தல் சைவர் என்று கூறும் ஒவ்வொருவரின் கடமையாகும்.

வழிபாடு :-

இவ்வழிபாட்டு விதிமுறைகள் பல. திருக்கோயில் வழிபாடு, உருவ வழிபாடு, குருலிங்க சங்கம வழிபாடு, திருவிளக்கு வழிபாடு என்பவை சிவாகமம் காட்டும் முறைகள்.வேள்வி, தவம், தீர்த்தம், தோத்திரம், தியானம், விரதம், பூசை என்பன இதிகாசப் புராணங்கள் காட்டும் வழிகள்.

ஆயினும் இறைவன் குடியிருக்கும் இல்லம் (கோ+இல்) சென்று தரிசித்தலே சிறந்தது. எனவே தான் திருக் கோயில் வழிபாடு ஒரு சிறப்பு அத்தியாயமாக சைவர்களிடத்தே மிளிர்கிறது.

கோயில்:-

நன்கு செழித்து வளர்ந்த மரங்களின் கீழ் நல்ல பொதுக் காரியங்களைச் செய்து வந்த நம் முன்னோர் தம் கடவுளரின் திருவுருவையும் மரங்களின் கீழே வைத்துப் போற்றினர். இவ்வுருவுக்கு மழை வெய்யில்களிலிருந்து பாதுகாப்புத்தேடி கட்டிடம் அமைத்தனர். முதல் ஆலயம் இவ்வாறு தான் உருவாகியது. மண்ணாலும், மரங்களாலும் கட்டப்பட்டு வந்த கோயில்கள் பல்லவ மன்னர்களால் கற்றளியாக்கப்பட்டன. அதன் தூண்களிலும் புராணக் கதைகள் ஓவிய, சிற்பங்களாக எழுதப்பட்டன. இதனால் சைவத் திருக்கோயில் பக்திக்கு மட்டுமின்றி கலைக்கும் பிறப்பிடமாக விளங்கியது. இதனாற்தான் ''கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்'' என்று சொல்லப்பட்டது போலும்.

உண்மையில் திருக்கோயினுள் நுழைந்து மேற்போந்த கலையம் சங்களையும் தெய்வ விக்கிரகங்களையும், மணிகளின் நாதம் கற்பூரவாசனை, மந்திர ஒலி என்பவற்றையும் நுகர்பவர் மனதில் பக்தி ஊற்றெடுக்கப் பெறாரெனின், அவர் வேறும் ஜடம் என்பதில் ஐயமில்லை. ஆகவே தான் இறைவழிபாட்டுக்கு திருக் கோயில் வழிபாடு உரிய வழி என்கிறோம்.

தத்துவம்:-

திருக் கோயில் வழிபாடு செய்யும் நாம் அவ்வழிப்பாடு உணர்த்தும் தத்துவத்தை அறிதல் இன்றியமையாதது. கோயில் அமைப்பு மனித உடலை ஒத்த அமைப்பு உடையது. குண்டலினி சக்தி உறங்கிக் கிடக்கும் மூலாதாரம் கொடிமரமாகவும், கொடிமரத்தின் முப்பத்திரண்டு வளையங்களும் முறையே முள்ளந்தண்டு எலும்புகளையும் கொடிமரக்கயிறுகள், இடைகலை, பிங்கலை நாடிகளையும் குறிக்கும், எண்ணங்களின் பிறப்பிடமாக விளங்கும் ''கொப்புள்'' ஸ்தானத்தின் நந்தியை, பிரதிஷ்டை செய்து எண்ணங்கள் மனதில் அடங்கி தூய்மையாதல் வேண்டும் என்பது உணர்த்தப்படும். பலிபீடம், அறுவகை, உட்பகை, ஆசை என்பன பலிகொடுக்கப்படும் இடமாகும். புருவ மத்தியில் ஆன்ம ஒளி உன்டாதலை ஒத்ததாக, இலிங்கப் பிரதிஷ்டை அமைகிறது.

வழிபாட்டு முறை :-

திருக் கோயில் வழிபாடு விதிப்படியே மேற் கொள்ளத்தக்கது. இதற்கு கொல்லாமை, புலாலுண்ணாமை, கள்ளுண்ணாமை, பிறன்மனை நோக்காமை, விலைமாதரை விரும்பான்மை என்பன அங்கங்கள். இத்தன்மையில்லாது செய்யும் ஆலய வழிபாடு பலனில்லாதது என்பது உண்மை.

திருக்கோயிலுக்குச் செல்கையில் ஸ்நானம் செய்து, தோய்த்துலர்ந்த ஆடை தரித்து, பூசைப் பொருட்களுடன் இறை சிந்தனையுடன் செல்லவேண்டும். அதைவிடுத்து திருவிழா உற்சவம் என்று கிளம்புகையில் கோயில் வீதியிலுள்ள கடைத்தெருக்களும், சனக்கூட்டமுமே ஞாபகத்தில் வர ஒரு களியாட்ட விழாவிற்குச் செல்லும் பிரமையுடன் செல்வதனால் திருக்கோயில் சென்று பாவத்தைக் கூட்டிக் கொண்டதாகவே முடியும்.

With Compliments

from

GEMINI ELECTRONIC (PVT) LTD.,
GEMINI STORES (PVT) LTD.,
GEMINI STORES (KANDY)

63, BANKSHALL STREET,
COLOMBO 11
SRI LANKA.
T' PHONE :321938, 541216
TELEX : 22626 GEMINI CE
FAX : 546603

சைவ சமய நெறியில் ஒரு கண்ணோட்டம்

கோயிலை அடைந்தவுடன் கால்களைக் கழுவி இராஜகோபுரத்தை வணங்கிய பின்னரே உட்செல்ல வேண்டும். இதனால் பாவம் நீங்கப்படுவதாகக் கொள்ளப்படும். உள்நுழைந்தவுடன் தூவாரபாலகரையும், திருநந்தி தேவரையும் வணங்கி விநாயகப் பெருமானை வழிப்படல் வேண்டும். விநாயகரை மும்முறை குட்டி, தோப்புக்கரணமிட்டு வணங்குதல் வேண்டும். பின் அங்குள்ள மூர்த்தங்களையும், பரிவார தெய்வங்களையும் வணங்கி இறுதியாக சண்டேசுவரரை வணங்குதல் வேண்டும். சண்டேசுவரர் தியானித்திருப்பதால் மும்முறை கைகளை இலேசாகத்தட்டி கும்பிடுவது வழக்கம். பின்னர் வலப்பக்கமாக வந்து சிவலிங்கப் பெருமானை தரிசித்து, பலிபீடத்துக்கு இப்பால் மும்முறை வழிபாடு செய்து எழுந்து அமைதியாக ஓரிடத்தில் அமர்ந்து, பஞ்சாட்சரஜெபம் செய்துபின் வீடு திரும்ப வேண்டும்.

வலம்வரல்:-

திருக்கோயில் சுவாமியை வலம் வந்து கும்பிடுகிறோம். அவ்வாறு வலம் வருகையில் விநாயகரை ஒருதரமும் முருகனை மூன்றுதரமும், சிவனை மூன்று, ஐந்து, ஏழு முறைகளிலும் சக்தியையும், விஷ்ணுவையும் நான்கு தரமும், சூரியனை இரண்டு தரமும் ஏனைய கடவுளரை மூன்றுதரமும் வலம் வரவேண்டும். காலையில், நண்பகலில், மாலையில் அர்த்தஜாமத்தில் வலம் வர முறையே நோய் நீக்கப்பெற்றும், வேண்டுவன பெற்றும் பாவம் நீங்கியும் மோட்சமும் பலன்களாகக்கிடைக்கும். ஆகவே சைவர் தினந்தோறும், காலத்தில் திருக்கோயில் வழிபாடு செய்தல் வேண்டுமென நமது சாஸ்திரங்கள் வலியுறுத்துகின்றன.

நமஸ்காரம்:-

இறைவனை நமஸ்கரிக்க ஏகாங்கம் துவியாங்கம், திரியாங்கம், பஞ்சாங்கமும், அட்டாங்கம்என ஐந்து வகையான முறைகள் உள்ளன. ஆண்கள் ஆட்டாங்கமும் பெண்கள் பாஞ்சாங்கமும் நமஸ்காரமாக கொடிமரத்தின் முன் செய்யப்படல் வேண்டும். அவ்வேளைகளில் கால்களை மேற்கு அல்லது தெற்குப்பக்கமாக நீட்டல் வேண்டும். ஆனால் சங்கிராந்தி, நண்பகல், சூரிய கிரகண நாளில் மேற்கில் கால் நீட்டலாகாது. கொடி மரத்தைக்கடந்து எந்த இடத்திலும் விழுந்து நமஸ்கரிக்கலாகாது.

வடக்கு நோக்கிய கோயில்களில் திரியாங்கமே பொருந்தும்.(அஃது சிரசில் இரு கரங்களையும் குவித்து வணங்குதல்)

செய்யத்தகாதவை:-

திருக்கோயிலில் சிரித்துப் பேசி, குசலம் விசாரித்தல், விக்கிரகங்களைத் தொடல், அபிஷேக காலத்திலும், நிவேதன காலத்திலும் வணங்கல் சுவாமி உற்சவம் கொண்டருளும் போது அவ்விடத்தை விட்டு உள்ளே போய் வணங்குதல் என்பன பாவங்களாகக் கருதப்படும். இவற்றைத் தெரிந்து செய்பவர் நரக வேதனைக்குள்ளாவர்.

விரதம்:-

இதிகாச புராணங்காட்டும் இவ்வழிபாடு இன்று எம்மால் திருக்கோயில் வழிபாட்டுடன் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

விரதம் என்றால் பட்டினி கிடத்தல் என்ற ஒரு தவறான எண்ணம் பலரிடத்தில் நிலவுகின்றது. மனம் பொறிவழி செல்லாது சித்தத்தை ஒருமுகப்படுத்தி, உணவைச் சுருக்கி அல்லதுவிடுத்து இறைவனை சிறப்பாக ஒரு மனப்படுத்தி வழிபடுதலே விரதம். சைவர் வருடம் முழுவதும் பலவிதமான விரதங்களை அனுஷ்டிக்கின்றனர். இவை மனித வாழ்வை மேம்படுத்தி இறையன்பை நோக்கி வழி நடத்துகின்றன. பல் துலக்கல் தூம்பூலம் தரித்தல், புகைபிடித்தல் பகல் நித்திரை, சிற்றின்பம் என்பன விரதகாலங்களில் தவிர்க்கப்பட்டு உடல் உள்ளம் இரண்டையும் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும். உபவாசம் இருப்பதால் சமிபாட்டுத் தொகுதி சுத்தியும், சில சமிபாட்டுக் கோளாறுகள் நிவாரணமும் பெறும் என்பது விஞ்ஞான உண்மை.

சிவசின்னங்கள்:-

விபூதி, உருத்திராக்கம் இரண்டுமே சிவசின்னங்களாகும்.''விபூதி'' என்பது மேலான செல்வம் எனப் பொருள் கூறப்படும். பசுவின் சாணத்திலிருந்து பெறப்படும் விபூதி உளநோய்; ஆன்ம நோய்க்கு மட்டுமில்லாது பல சரும நோய்களுக்கும் மருந்தாக வல்லது. இஃது பரவப்பூசுதலாகிய உத்தூளன முறையாகவும், நீரில் குழைத்து முக்குறியாக பதினாறு இடங்களில் பூசுதலாகிய திரிபுண்டரமாகவும் அணியப்படும். விபூதியானது காலை, மாலை, நண்பகல் உணவின் முன்னும், பின்னும் அணியப்பட வேண்டும் எனச் சொல்லப்பட்டுள்ளது.

உருத்திராக்கம் என்பது உருத்திரனுடைய கண் என கூறப்படும். இஃது ஒருமுகமணி முதல் பதினொரு முகமணிவரை பல வகைகளில் உண்டு. இம்மணிகள் ஒன்றொடொன்று படாதவாறு பொன், வெள்ளி, வில்வமுடு, சுரை ஓடு முதலியவற்றால் வில்லைகள் சேர்க்கப்படும். நீண்ட ஆயுளும் மறுமையில் பரகதியும் தரவல்ல இச்சின்னத்தை சிராத்த காலங்களின் போதும், சிவபூசை சந்தியாவந்தனம் என்பன செய்யும் போதும் அணிதல் வேண்டும். உருத்திராக்கமானது தலை, காது, கழுத்து, புயம், கைகள் ஆகிய இடங்களில் அணியத்தக்கது.

திருவைந்தெழுத்து:-

சைவர்களது வழிபாட்டில் பஞ்சாட்சர ஜெபம் தனித் தன்மையானது. இஃது சிகராதி, நகராதி என இருவகைப்படும். ''சிவாயநம'' என்ற சிகராதிபஞ்சாட்சரம் முத்தியை நாடியும், ''நமசிவாய'' என்ற நகராதி பஞ்சாட்சரம் இவ்வுலக இன்பம் நாடியும் செபிக்கப்படும். இந்த ஐந்து எழுத்தும் ஒவ்வொரு பொருளுடையது. அதாவது சி-சிவம், வா-திருவருள், ய-ஆன்மா, ந-திரோனசக்தி, ம-மலம் எனப்பொருள்படும். திருவைந்தெழுந்து எப்போதும் நினைக்கப்படவேண்டியது. சீவதீட்சை பெற்றோருக்கு அந்தி மந்திரமாகவும், நோய் தீர்க்கும் மருந்தாகவும், செபிப்போர்க்குத் துணையிருப்பதாகவும் இதன் சிறப்பு சொல்லப்பட்டு போற்றப்படுகிறது.

இவ்வாறு சைவ நெறி தன்பால் கொண்ட சிறப்பு மிக்க கடப்பாடுகள், சிந்தனைகள் ஆன் மீக விளக்கங்கள் எழுதிமுடிக்கவியலாத கேட்கத் தெவிட்டாதது. இவற்றின் விடயங்களில் சிறு கண்ணோட்டமாவது செலுத்தினால் மனிதத் தன்மையும், கடவுளியலும், அறிவியல் உண்மைகளும் நமது சிற்றறிவுக்கும், பூரண அறிவாக விருந்தளிக்கும். மனித மேம்பாடு வளரும் என்பதில் ஐயமில்லை.

''ஒரு பொல்லாப்புமில்லை''

TRICO MARITIME (PVT) LTD

HEAD OFFICE :
50. K. CYRIL C. PERERA MAWATHA,
COLOMBO 13.
TEL :

WHARE HOUSE
414 / 17,
K. CYRIL C. PERERA MAWATHA,
432236 TEL :431227
432237 433996
448270
432013
432016

அருள் செல்வத்தை தரிசிக்கும் தேடல்கள்

சுப்பையா பாக்கியராஜா
சுங்க அத்தியட்சகர்

தன் அறிவின் பலத்தையும் விஞ்ஞானத்தின் பலத்தையும் அறிந்து கொண்டு வரும் மனிதன் பல்வேறு இயக்கங்கள் மத்தியில் கடவுள் நம்பிக்கையைச் சிறிது சிறிதாக இழந்து கொண்டு வருகின்றான். இதனை நீட்சே என்ற சிந்தனையாளர் 'விளையாடும் விஞ்ஞானம்' என்ற கட்டுரையிலே விரிவாக விளக்கி யுள்ளார். இந்தக் கட்டுரையில் படிப்படியாக உருவாகி வரும் நம்பிக்கை இல்லாத் தன்மையையும் கடவுளிடமிருந்து மனிதன் பிரிக்கின்றான் என்பதையும் நீட்சே சுட்டிக் காட்டினார்.

''கடவுளை நாமே கொன்று விட்டோம்! நாமே கடவுளாக வேண்டும்'' என்ற சிந்தனைப் போக்கை நீட்சேயின் கருத்துக்கள் வெளிப்படுத்தின. கடவுளைத் தேடும் சிந்தனைகளும் கடவுளை மறுக்கும் உணர்வுகளும் வரலாற்றுக் காலம் முதலாகத் தொடர்ந்து கொண்டு இருக்கின்றன. விஞ்ஞானக் கருத்துக்களை அலசி ஆராய்ந்து கடவுளை ஒரு பரிசோதனைக் குழாய்க்குள் இருக்கும் பொருளாக்கிக் காணும் முயற்சிகளுக்கும் அதேநேரம் நடைபெற்று வந்துள்ளன. நம்பிக்கைகளையும் நல்லெண்ணங்களையும் இழந்து நிற்கும் தற்கால நாகரீகப் போக்கில் சமயத்தையும், வாழ்க்கை யையும் மறக்கும் நிலைமை தோன்றுகின்றது.

நம்பிக்கையீனங்கள், முரண்பாடுகள். வக்கிரங்கள் ஆகியவற்றால் பிளவுண்ட மனித சமுதாயம் பல்வேறு கோணங்களில் காலம் தோறும் செல்லத் தொடங்கியது. ரி.எஸ். இலியட் 'பாழ்நிலம்' என்ற தமது கவிதையில், ''பரம்பொருளை மறந்த பூமி பாழ் அடைந்த பூமி'' எனக் கூறினார். கடவுளை விட்ட மனிதன் பகுத்தறிவைப் போற்றிக் கோவிலை இடித்துக் கோபுரத்தைத் தகர்த்துச் செல்வதையிட்டு மனம் வருந்திய கவிஞர், பின் நோக்கி வேகமாக முன்னேறும் இந்த யுகத்தை, விசனத்துடன் நோக்கினார்.

இந்த வகையில் உலக சமுதா யத்தில் மனிதனைப் பற்றியும், வாழ்க்கையைப் பற்றியும், கடவுளைப் பற்றியும் மேற் கொண்ட பரந்த தேடல்கள் எண்ணில் அடங்காதவை. ஒரு சந்தர்ப்பத்திலே மகாத்மா காந்தியிடம் ஒரு குருடன் உலகம் போற்றும் உங்களைக் காண முடியவில்லையே என்ற ஆதங் கத்துடன் கடவுளை எப்படிக் காணமுடியும் எனக் கேட்டார். அதற்கு மகாத்மாகாந்தி இந்தக் கண்ணின் சக்தி மிகவும் அற்பமானது. நம் முன்னே இருக்கும் கடவுளைக் காணவேண்டு மானால் இந்தக் கண்ணால் பார்க்க முடியாது, அதற்கு அகக்கண்கள் திறக்கவேண்டும் எனக் கூறினார்.

''என்னிலும் இனியான் ஒருவன் உளன், அவன் என்னுள்ளே உயிர்ப்பாய்ப் புறம் போந்து புக்கு என் உள்ளத்துளே இருக்கும் இன்னம்பர் ஈசன்'' என அப்பர் சுவாமி மனமுருகிப் பாடினார். நாம் கண்களால் பார்ப்பது வெறும் மாயை வாழ்க்கையைத் தான். அது ஏமாற்றமும் புரட்டுக்களும் நிறைந்தது.

எப்பொழுதும் அகக்கண்களால் பார்ப்பதுதான் உண்மையான இறைவனின் சொரூபமாகும். நல்வாழ்க்கை ஒரு அழகிய கற்பனை எனக் கூறிய ஒரு பிரெஞ்சுத் தத்துவஞானி 'கண்களை மூடிக்கொள்ளுங்கள், அதுதான் தேவை, அப்போது வாழ்க்கையின் மற்றொரு பாகத்தைக் காண்பீர்கள், எனக் கூறினார்.

மகாகவி பாரதியார், ''என் கண்ணை மறந்து என் இரு கண்களையே என் அகத்தில் இசைத்துக் கொண்டு நின்கண்ணால் புவியெல்லாம் நீ எனவே நான் கொண்டு நிறைவு கொண்ட'' காட்சியைக் கூறியுள்ளார். உள்ளூவார் உள்ளத்து உளன் கண்டாய் என்ற பக்தர்களில் தேடல்கள் எல்லாம் இந்த வகையிலான இதயக் கண்கள் திறந்தமையால் ஏற்பட்டவையே ஆகும்.

அர்த்தமுள்ள மனிதவாழ்க்கை தொடரும்போது தான் உண்மையான தேடல்கள் உருவாகும். கபீர்தாஸ் என்ற மெய்ஞானி உள்ளத்தில் இருக்கும் பரம்பொருளைத் தேடிக்கொண்டு அதனைக் கண்டுபிடிக்கும் வரை வாழ்க்கைக்கே பொருள் இருக்காது என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார். ஒரு மனிதன் தன்னை எப்பொழுது முழுமையாக உணர்ந்து கொள்ள ஆரம்பிக்கின்றானோ, அப்பொழுது முதல் கடவுளைக் கண்டவன் ஆகிறான். நல்ல செய்கை செய்வதனால் மட்டுமே மனிதர்கள் கடவுளின் தன்மையை அடைகின்றார்கள். இதுவே சமயங்களின் அடி அத்திபாரமாகும்.

சமயங்கள் மனித தர்மத்தை அர்த்தமுள்ள வாழ்க்கைக் காண வழிப்படுத்துபவை. இதை உணர்வது அவசியமானது. மனிதன் உள்ளும் புறமும் ஒரு தன்மைக் காட்சினராக மாறும்போது தான் ஒளி தோன்று கின்றது. இந்த ஒளியை பொருட்ச் செல்வத்தால் பெறமுடியாது. அருள் செல்வத்தினாலேயே காணமுடியும். தொட்டதெல்லாம் பொன்னாக வேண்டும் என்ற வரத்தை ''மைதாஸ்'' என்ற மன்னன் கடவுளிடம் கேட்டுப் பெற்றான். இது பேராசையின் விளைவால் தோன்றியது. இதனால் அவனுடைய அருமை மகள், ஆகாரம் எல்லாமே பொன்னாயிற்று,. அப்பொழுது தான் மைதாஸ் மன்னன் உண்மையை உணர்ந்தான். பொன்னும் பொருளும் போகமும் வாழ்க்கையின் உறுதிப் பொருட்கள் அல்ல. அன்பும் அருளும் அறமும் தான் வாழ்க்கை என்ற உணர்வு அவனது மனதில் தோன்றியது. அவன் உண்மையான 'சமயி' ஆனான்.

பணத்தினால் எதனையும் சாதிக்க முடியாது. பொன்னும் பொருளும் வாழ்க்கையின் உறுதிப் பொருட்கள் அல்ல. என்ற உண்மையை எவனொருவன்

LANKA CONSOLIDATED AGENCIES (PRIVATE) LIMITED

AGENTS FOR

TATA STEEL

ANOTHER NAME FOR

QUALITY STEEL

95/5, HORTON PLACE,

COLOMBO - 7.

Telephone : 694585, 685900

Fax : 685676

உணர்கின்றானோ அவன் 'சமயி' ஆகி விடுகிறான். மனிதன் உழைத்த உழைப்பை அன்றைய தினத்திலேயே தீர்த்துவிடாமல் ஒதுக்கி வைத்துச் சேர்க்க ஆரம்பித்தான். இந்தச் சேகரிப்புக்கள் அவனை 'உடையவன்'' ஆக்கியது. இந்த நிலையிலேயே தான் 'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை'' என்ற தத்துவமும் தோன்றியது.

அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லைப் பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லாகியாங்கு

என்ற திருவள்ளுவர் கருத்து யாவரும் அறிந்த ஒன்று. மனிதன் பொருள் என்ற பொருளாதாரத் தேட்டத்தையும் அருள் என்ற ஆத்மீகத் தேட்டத்தையும் அடையும் முயற்சிக்கு சமயங்கள் காலம்தோறும் துணை கொடுத்து வந்துள்ளன. உலகிலே உள்ள சமயங்களின் வரலாற்றையும் ஞானிகளின் வரலாற்றையும் ஆழ்ந்து சிந்திக்கும் போது இந்த உண்மையை உணர்ந்து கொள்ளலாம்.

மனித வரலாற்றை ஒரு கணம் திருப்பிப் பார்க்க வேண்டும். புராதன கலாச்சாரங்களிலிருந்து இன்றுவரை மனித இனம் வளர்ந்து வந்த பாதையைப் பார்த்தால் சமயம் எவ்வளவு தூரம் வாழ்க்கை ஓட்டங்களில் ஒவ்வொரு கணதையும் பாதித்துள்ளது என்பதை உணரமுடியும். மனித வரலாற்றையும் வாழ்க்கையையும் விளங்கிக் கொள்வதற்கு சமயங்களை விளங்கிக் கொள்வது அவசியமானதாகின்றது. உலக நாடுகள் ஒவ்வொன்றினதும் கோட்பாடுகள், நம்பிக்கைகளைச் சமயத் தத்துவங்களின் உயிர்நாடி சரடாகப் பின்னிப் பிணைந்துள்ளது.

சமயங்களை வேறும் புறக்கண்ணால் பார்க்க முடியாது. கோவில்கள், சம்பிரதாயங்கள், சடங்குகள் வழிபாட்டு முறைகள் என்ற வரிசையிலே பலவற்றைக் காண முயன்றாலும் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த உண்மைகளை உள்ளார்ந்தமாக காண்பதிலேயே தங்கியுள்ளது. வெறும் சடங்கு சம்பிரதாயங்களுக்கு அப்பால் வாழ்வின் அர்த்தங்களைச் சமயங்களின் மூலமாகக் காண்பது சாதாரணமான ஒரு விடயமல்ல.

இங்கு தான் திருவள்ளுவர் கூறிய அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை; பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்ற ஞானத்தை உணரமுடியும். உமாபதிச்சிவாச்சாரியார் திருவருட் பயனில் கூறுகின்ற கருத்தும் 'அருட்செல்வம் செல்வத்துச் செல்வம், பொருட்செல்வம் பூரியார் கண்ணுமுளை'' என்ற குறளின் கருத்தும் இதனையே தெளிவுபடுத்துகின்றது. வரலாற்றுக்காலம் முதலாக மனித மனங்களின் தேடல்களை விளங்கிக் கொள்ளும்போது சமயங்களின் அர்த்தத்தையும் புரிந்து கொள்ள முடியும்.

அருள் உடைமை, பொருள் உடைமை ஆகிய இரண்டும் வாழ்க்கைக்கு இன்றியமையா தவை. மேலுலகத் திற்குச் செல்லவேண்டிய நாணயச் செலாவணி அருள் உடைமை, இந்த உலகத்திலே வாழ்வதற்குத் தேவையான நாணயச் செலாவணி பொருள் உடைமை. இதனாலே பணத்தினால் எதனையும் வாங்க முடியும். பணம் பாதாளம் வரையும் செல்லும், என்று சொல்லும் நிலையும் தோன்றியுள்ளது. மைதாஸ் என்ற மன்னன் தொட்டதெல்லாம் பொன்னாக வேண்டும் எனக்கேட்டுப்பட்டது என்ன என்பதை உணரத் தலைப்படும் போது அர்த்தம் புரியும். இன்று பொன், பொருள் என்று தேடல் முயற்சியில் ஈடுபடுபவர்கள் எல்லாம் சரியான பாதையில் செல்வதில்லை. சகல ஓட்டங்களின் பின்னர் இறுதியில் அவர்கள் அருளைத் தேடமுயலும் போது வாழ்க்கையின் அர்த்தமே விளங்க ஆரம்பிக்கும்.

'நீ கடவுளையும் காசையும் வழிப்பட முடியாது' என இயேசு நாதர் ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டார். பணத்தாசை தான் சகல பாவங்களுக்கும் காரணம் என்ற உண்மையை மறந்துவிடக் கூடாது. மனிதனுடைய பொருளாசை பல நிலைகளில் அகக்கண்ணை மறைத்துவிடுகின்றது. ''பொருள் தேடல் பொருள் தேடல்'' என்ற நிலையிலே அதுவே வெறியாகி மனிதன் தன்னை மறந்து விடுகிறான் இந்த நிலைமை மிகவும் ஆபத்தானது.

பொருட் செல்வம் தேடல் என்ற அடிப்படையில் தோன்றும் உடைமையைப் பற்றி சிந்திக்கும் போது பிரான்ஸ் தேச அறிஞரான ரூஸோவின் கருத்தை நினைவுபடுத்துவது நல்லது. எவனோருவன் நிலத்திற்கு வேலிகட்டி இது என்னுடையது என்று சொல்கின்றானோ அவன்தான் சமுதாயத்தின் முதல் குற்றவாளி; என அவர் கூறினார். இதனைத் தொடர்ந்து, பிரெளதான் 'என்ற அறிஞர்' சொத்து என்பது திருட்டு எனக் கூறினார். எவனொருவன் தனது உழைப்பின் பயனை சமூகத்திற்குக் கொடுக்காமல் தானே சொந்தம் கொண்டாடி உறுஞ்சுகிறானோ அங்கு தான் திருட்டு என்ற கருத்து அழுத்தம் பெறுகின்றது.

மகாத்மா காந்தி ஒரு சந்தர்ப்பத்தில் காசிப் பல்கலைக்கழகத்திற்கு உரையாற்றச் சென்றிருந்தார். இங்கு வைர வைடூரியங்களை நகைகளாக அணிந்த மன்னர்களும் பிரமுகர்களும், குழுமியிருந்தார்கள். அங்கு பேசிய மகாத்மா, ''உங்கள் நகைகளைக் கழற்றி மக்களுக்காகக் கொடுத்துவிடுங்கள். இல்லாது போனால் நமது தேசத்திற்கு விமோசனம் கிடையாது. ஏழைகளிடமிருந்து அவர்களது உழைப்பைப் பிடுங்கி நாம் சுயாட்சிக்குப் பாடுபடுவானேன். நாம் பேசிக்கொண்டே இருக்கின்றோம். நம் இதயத்தை நாமே திறந்து பார்க்க வேண்டும். இங்கு மகாத்மா ஆழமான கருத்தை வலியுறுத்தினார். ''மன்னர்களே உங்களிடம் உள்ள சொத்து உங்கள் சொந்தத் தேவைகளுக்கு அல்ல. அது தருமச் சொத்து அதற்கு நீங்கள் தர்மகர்த்தாக்கள். இங்கு நாம் பொருட்செல்வத்தின் தாற்பாரியத்தை உணரத் தலைப்பட வேண்டும். பொருட் செல்வம் வெறும் தேடல்களையே மிஞ்சவைக்கும்.

கீழத் தேயங்களுக்கு வந்த ஐரோப்பிய வல்லரசுகளும் வியாபாரிகளும் கொள்ளைக்காரர்களாகவே வந்தார்கள். வர்த்தகம் என்ற பெயரால் பாரம்பரிய கொள்ளைகள் நடைபெற்றன. பாரம்பரிய சமுதாயங்கள் இடிந்து அழிக்கப்பட்டன. பிரித்தானிய பொதுநல அமைப்பே பாரிய கொள்ளைகள், சுரண்டல்கள், கொலைகளால் தோன்றியது என்ற உண்மையை பலர் மனம் திறந்து சிந்திப்பதில்லை. உலகப் பேரரசுகளும் இவ்வாறு தான் தோன்றின பலரை ஏமாற்றி இம்மிசைப்படுத்தி திருடியே ஒருவன் பொருட் செல்வத்தை தேடுகிறான். இதனை யார் உணரத் தலைப்படுகின்றார்களோ அவர்கள் உண்மையான சமயியாகி விடுகிறார்கள். இதுதான் அருட்செல்வத்தின் ஆரம்பநிலை.

பல சமயவாதிகள் கார்ல்மார்க்ஸ் கூறிய கருத்துக்களையும், சித்தாந்தங்களையும் அருவருப்போடு நோக்கு வார்கள். மதம் மக்களின் போதை என கார்ல்மார்க்ஸ் கூறினார். சற்று ஆழ்ந்து நோக்கினால் பொருட்செல்வத்தினதும், அருட் செல்வத்தினதும்

With Compliments

from

Lalitha Jewellery Mart Ltd.

MANUFACTURERS OF FINE JEWELLERY SINCE 1951

105,
SEA STREET,
COLOMBO 11,
SRI LANKA.

TELEPHONE :- 323691, 431993
TELEX :- 21467 TX BURO CE ATTN : LALITHA.

தாற்பாரியத்தை உணர்ந்த கார்ல் மாக்ஸை ஒரு முனிவர் எனவே குறிப்பிடலாம். ''வாழும் மனிதனின் பெருமூச்சு மதம். இரும்பு இதயங்களைக் கொண்ட உலகத்தின் இரக்கம் மதம். ஆன்மிகமற்ற சந்தர்ப்பங்களில் அந்தராத்மா மதம்'' வறுமைகளையும் துன்பத்தையும் கண்டு குரல் எழுப்பிய ஏழைப் பங்காளனின் குரலே இந்த மாக்ஸின் குரல் என்ற உண்மையை ஆழ்ந்து சிந்திக்கும் போது தான் ஒருவன் புரிந்து கொள்ளமுடியும்.

ஏழைகளுக்கு முத்தியளிக்க வந்த முனிவராகிய கார்ல் மாக்ஸ் புறக்கோவில்களையும் வெறும் சடங்குகளையும் மறந்து மனிதனின் வயிற்றிலேயே கோவிலைக் கட்டினான். இந்த முயற்சி ஒரு வகையில் பொருட்செல்வத்திற்கு அப்பால் அருட்செல்வத்தை தரிசிக்க முயன்ற வழி என்பதையே பலர் சிந்திக்க முயலுவதில்லை.

பொருளாதாரத்தைத் தேடுபவர்கள் ஒருபோதும் பரம்பொருளைத் தேடுவதை மறந்துவிடக் கூடாது. உலக மக்கள் கூறும் உண்மைகளை தரிசித்து வரும்போது தான் பொருட்செல்வத் திற்கு எதிர்நிலையான அருட்செல்வத் தேடல்களின் அவசியத்தை உணர்ந்து கொள்ளமுடியும். மணிவாசகப் பெருமான் 'வேண்டேன், புகழ் வேண்டேன்' செல்வம் வேண்டேன், மண்ணும், விண்ணும் வேண்டேன் எனக் கதறுகின்றார். டால்ஸ்டாயின் 'ஆறடி நிலம்' என்ற புகழ் பெற்ற கதையும் இந்தவகையான தத்துவத் தரிசனத்தையே தருகின்றது.

பொருள் வேண்டாம் அருள் வேண்டும் என்ற நிலையை மனிதன் அடையும் போது அவன் ஞானி ஆகிறான். எதையும் இல்லையே என்ற நிலைமை தோன்றக் கூடாது. ஞானிகள் எப்பொழுதுமே தேவைகளைக் குறைத்துக் கொண்டவர்கள். தேவைகளில் நாட்டம் குறையும் நிலைமை தோன்றுவதையே எமது சைவ சித்தாந்தம் சிவன் முத்த நிலை எனக் கூறுகின்றது. மகாகவி சேக்ஸ்பியர் கழுதையை விழித்து 'நீ அழுக்கு மூட்டைகளை சுமக்கின்றாய். நீ போய் சேரும் இடம் வந்ததும் உன்மூட்டை உன்னிடம் இருந்து போய்விடும் என்று கூறினார்.

இது பொருள் பொதிந்த சிந்தனை யாகும். வேகமாக முன்னேறிவரும் இன்றைய காலகட்டத்தில் அழிவின் விளிம்பை நோக்கி யாவும் செல்வதாக விஞ்ஞானிகளும், மெய்ஞானிகளும் ஏங்குகின்றார்கள். விஞ்ஞானத் தேடலில் எல்லையில் மெய்ஞானி களான யாவரும் நிரம்பிய சமயிகள். இதனையே உலக சமயங்களின் தேடல்கள் எல்லாம் பொதுவாக விளக்குகின்றது.

மனிதன் அறியும் சக்தி நிரம்பியவன். அடைய வேண்டும் என்ற வேட்கை உடையவன். இதன் காரணமாக அடைந்த அனுபவம் என்ற பேற்றையும் பெற்றுக் கொள்கிறான். மனிதவாழ்வின் பண்பும் பயனும் அன்பும், அறமும் என்ற எல்லையிலே அன்பின் பயனாக தார்மீக பயன்களைப் பெற்றுக் கொள்கிறான். இந்தத் தார்மீகப் பயன்களின் அடிப்படையிலே ஆன்மீகப் பயன்களின் அடிப்படைகள் தோன்றுகின்றன என்ற உண்மையை உணரும் போது மனித வாழ்க்கை உயர்ந்து விடுகிறது.

வாழ்வின் மதிப்பு உண்மையான தேடல்களின் எல்லையிலேயே தோன்றுகின்றது. வாழ்க்கை ஒரு நாடகமாகும். 'நிழல்' என உணர்ந்து மனித வாழ்க்கையின் நிரந்தரங்களைப் புரிந்து கொள்வது சுவாமி விபுலானந்தர் கூறிய, உத்தமனார் வேண்டும் உள்ளக்கமலத்தைத் தேடுவதிலும் அதில் காணும் நிறைவிலுமே என்றும் தங்கியுள்ளது!



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின்

ஆசிச் செய்தி

கடவுள் என்பதற்கு கடத்தல் என்ற பொருள். அதாவது, பயம், வாழ்வு சாவு என்ற சுழற்சியாகிய பரம் பொருள் கடவுள் என்ற வழக்கப்படுகிறது. இக்கடவுள் உலகையே அருளாளர்களும் மானிடர்கள் தமது வழிபாட்டு தத்துவங்களைத் தாம் பயின்ற கருவிகளை எடுத்துக்கொண்டிருக்கிறார். இவற்றுள் இயலுமை படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களை நடத்துவதற்காக ரஜஸ், சத்வம், தமஸும் முக்குணங்களை அவற்றுக்கு பிரதானமாய்க் கொண்ட பிரம்மா, விஷ்ணு, ருத்ரர் ஆகிய முக்கியமானவை. பரம்பொருள் பராசக்தி வடிவமாகவும்பரம் இச்சக்தியே முதலில் மும்மூர்த்திகளது முத்தலைவராக வரங்களைப் பெற்று, இவர்களும், பராசக்தி என்னும் முன்று வடிவங்களுடன் விளங்குகிறார்.

இவர்களுள் விஷ்ணுவின் சக்தியாக இலக்குமி அழகும், செல்வத்தையும் தெய்வமாகும்

உலகை என்னும் பராசக்தி மேற்பெருமானின் சக்தியாகவும். இத்தேவியை இரண்டு வடிவங்கள் உண்டு. ஒன்று சாந்த வடிவம், மற்றொன்று பயங்கர வடிவம். இவற்றுள் உலகில் வாழும் உயிர்கள் வாழ்வு அருள் புரியும் சாந்தவடிவம் வழங்கும் தெய்வம் தும்மிக்கும் அரசர்கள் அறிந்தும்போது பயங்கரவடிவம் தோன்றுகிறது. இத்தெய்வம் துர்க்கை, சண்டி, காளி எனும் பெயர்களை கொள்கிறது.

வரங்களைப் பெற்றும்தேவர்களின் சக்தியாகவும், அவைகள் எனும் இச்சக்தியே அறிவுத் தெய்வமாய் புத்தகத்தையும், வெண்தாமரையும் கையில் தரித்துக் கொண்டிருக்கிறாள்.

துர்க்காதேவியாகவும் மதிவுள் முதலிய அரசர்களுடன் யுத்தம் செய்து அவர்களை வாழ்வித்த நிலைகளிலே தவராத்தி வேண்டிய கொண்டிருக்கிறோம் இத்தெய்வங்களின் இருவகை தேவிகளும் பூஜிப்பதை விரும்பும் பலன்களை அளிக்க வல்ல தாகும்.

இவ்வுண்மையை உணர்ந்து ஸ்ரீ வல்லி தனிபத்தில் அரசாண்டிருக்கும் நிலைக் காத்தில் வழிபாடு புரியும் இந்த சமயத்தினரைக் கொண்ட சக்தியை வரும் நவராத்ரி விழாவை சிறந்த முறையில் கொண்டாட முன்வந்திருப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்விழாவில் வந்த கொலுவும் சர்வோரும் பராசக்தியின் அருளைப் பெற்று மக்களனைவரும் அடைவார்களாக.

SAMAN GEMS AND JEWELLERS
&
RUN GARMENTS

205/1, CASTLE STREET,
COLOMBO 08,
SRI LANKA.

அப்பரின் அருள்விழிப்பு

கலாநிதி சோ. சண்முகசுந்தரன்
தலைவர், ஈழத்திருநெறி மன்றம்

உலகில் பிறவியெடுத்த உயிர்கள் இன்பப்பேற்றையே நாடுகின்றன. இஃது இயற்கை. பேரின்பம் செய்வதே மக்கட் பிறவியின் மாண்பயன். பேரின்பப் பேறு கருதி இறைவனை அடைய அடியார்கள் முயலும் மார்க்கங்கள் நான்காகும். அவற்றுள் ஒன்று தாச மார்க்கம். இதன் வாயிலாக சிவபெருமானைத் தம் அனுபவங்களால் நேரிற் கண்டு பேரின்பப் பெருவாழ்வு எய்தியவர் திருநாவுக்கரசு சுவாமிகள். இவர் சைவசமயாசாரியார் நால்வருள் ''திருநின்ற செம்மையே செம்மையாய்க் கொண்டு'' செல்வர். இவர்களும் இவர்களைப் போன்ற அடியார்களும் காலத்துக்குக் காலம் திருவாய்மலர்ந்தருளிய திருமுறைகள் இவர்களது அருளனுபவம் தேக்கிய, ஆன்மிக வெற்றி அடங்கிய ஞானத் தமிழ்ப் பெட்டகமாகத் திகழ்கின்றன. அவற்றுள்ளும் அப்பரடிகள் என்றழைக்கப்படும் திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய திருமுறைப்பாடங்களில் இன்ப அன்பின் முழுநிறைவு அனுபவம் பொலிந்து ஒளி வீசுகின்றது; தண்சுவை வழங்குகிறது.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் உலகிற்கு அளித்த தேவாரங்கள் அனைத்தும் முதன் மூன்று திருமறைகளாக வகுக்கப்பெற்றுள்ளன. நான்காம் ஐந்தாம் ஆறாம் திருமுறைகளாக திருநாவுக்கரசு நாயனாரின் தேவாரங்கள் இடம் பெற்றன. இவற்றில் நான்காம் திருமுறை பண்ணிசைப்பாடல்களும், திருவிருத்தம், திருநேரிசையும் கொண்டது. ஐந்தாம் திருமுறை திருக்குறுந் தொகைகளும் ஆறாந் திருமுறை திருத்தாண்டகமும் கொண்டதாக அமைந்துள்ளன. நான்காம் திருமுறைதான் சுவாமிகள் வாழ்க்கையிலே பெற்ற முக்கிய அனுபவங்களையும் திருவருளின் பங்களையும் காட்டுவனவாயுள்ளன. ஆன்மிக வாழ்வின் அடிப்படைக் குறிக்கோளை விளக்கி நிற்கின்றன. அத்தகைய உயிர்ப்பு- அருள் விழிப்பு- இப்பாடல்களில் மலர்கின்றதைக் காணலாம்.

மாண்புமிகு மனிதப்பிறவியை எடுத்ததன் கருத்தை ஆய்ந்தறிந்து நிறைவேற்றவேண்டும் என்ற கடமையுணர்வினால், திருநாவுக்கரசர் சைவநெறியினின்றும் பிரிந்து சமணநெறி புகுந்து, சமணர்க்குத் தலைவராகவும் புகழ்பெற்று விளங்கினார். இவ்வேளையில் சூலநோயினால் ''ஆட்கொள்ளப்பெற்ற'' திருநாவுக்கரசர் எவ்வளவோ முயன்றும் குணமடையாதவராய்த் தமக்கையாரை அண்டினார். அவரிடம் திருநீறு பெற்று ''கூற்றாயினவாறு விலக்ககிலீர்'' என்னும் திருப்பதிகம் பாடுகிறார். இதுவே அவர் திருவாய் மலர்ந்தருளிய முதலாவது திருப்பதிகம். இத்திருப்பதிகமும் திருநீறுமே சுவாமிகளின் நோயைத் தணிக்கிறது.

சூலை அகன்றதும் சிவபெருமானுக்கே முற்றாக அடிமையானார். முப்பொதித்தூய்மையராகி, சிவசின்னம் பூண்டு, சிவப்பணியிலும் சிவ வழிபாட்டிலும் இரவுபகலாய் ஈடுபட்டு உள்ளம் கசிந்து உருகி இன்புற்றிருந்தார். இவருடைய சிவபக்தியைக் கண்ட சமணர் இவரைப் பல இன்னல்களுக்கு உள்ளாக்கினர். அவ்வேளைகளிற்தான் ''சுண்ணவெண் சந்தனச் சாந்தும்'', சொற்றுணை வேதியன்'' என்பன போன்ற பண்ணிசைப் பதிகங்களைப் பாடிப் பரமன் அருள் பெற்றார். திருவாரூரில் திருவாதிரைத் திருநாள் திருவிழாவைச் சேவித்து மகிழ்ந்த திருநாவுக்கரசுநாயனாரை திருப்புகலூரிலே சந்தித்த திருஞானசம்பந்தர் திருவாரூர்ப் பெருமானது சிறப்பைச் சொல்லும்படி கேட்கிறார். ''முத்து விதான மணிப்பொற் கவரி'' எனத் தொடங்கும் அழகிய குறிஞ்சிராகப் பதிகம் பாடி சித்தம் நிலாவும் திருவாரூர் மார்கழித் திருவாதிரைத் திருநாளின் மகிழ்செல்வத்தை அருள்மொழிகின்றார். திங்களூரில் அப்பூதியடிகள் திருநாவுக்கரசருக்குத் திருவமுது செய்விக்க அழைத்தபொழுது மூத்த மைந்தனை வாழைக்குருத்து அரிந்துவர அனுப்புகிறார். அப்போ இளைஞன் பாம்புதீண்டி இறக்கிறான். இறந்தவனைக் கொன்றைச் சடையார் கோயிலின்முன் கொணர்வித்தார். மனம் கசிந்து உளம் உருகி, உடையான் சீர்பாடி உயிர் பெற்றெழச் செய்தார்.

பரமபதியாகிய சிவபெருமானை உண்மையான, உறுதியான உள்ளன்பொடு வழிபடுவோரை அவன் எக்காலத்தும் ஏமாற்றமாட்டான் கைவிடமாட்டான் என்பதற்குத் திருநாவுக்கரசு சுவாமிகள் ஓர் உதாரண புருஷராக விளங்கினார். சிவத்தலங்களைக் கால்நடையாகவே சென்றடைந்து பணிசெய்தும் பதிகம் பாடியும் உள்ளமுவந்த சுவாமிகள் கயிலை மலை காணக் காதல் கொண்டார். காடும் மலையும் கடந்து இரவுபகலாக நடந்தார். கால்தேய, கை சிதைய, ஊன்கெட்டு, உறக்கம் கெட்டு, நடந்தும் தவழ்ந்தும் உருண்டும் புரண்டும் சென்று கொண்டிருக்கையில் உணர்வும் கெடுகிறது. அவ்வேளையில் அவர் முன் சிவனாரே ஒரு முனிவ வடிவில் தோன்றி ''இனி உம்மால் கயிலை செல்வது அரிது; மீள்வதே சிறந்தது'' என்று பணிக்கின்றார். ஆனால் நாயனாரோ ''ஆளும் நாயகன் இருக்கை கண்டல்லால் மீளேன்'' என்று உறுதிபூண்டு நிற்கிறார். அவ்வுறுதியைக் கண்ட பரமன் நாயனாரை அங்கிருந்த ஒரு குளத்தில் மூழ்கச் செய்து திருவையாற்றுத் திருக்குளத்தில் தோன்றியெழுந்து சத்திசிவமான கயிலைக் காட்சியைக் காணும்படி செய்தார். இவ்வதியற்புதக் காட்சியைக் கண்ட நாயனார் அந்த ஆனந்தக் கடலைக் கண்களால் முகந்து முகந்து, ஆடிப்பாடி, உருகியுருகி அழுதார்.

With Compliments

ABANS LTD.,

SOLE AGENTS FOR

GOLD STAR

AUDIO VIDEO AND ELECTRICAL APPLIENCES

அவ்வேளையில் உருவெடுத்த பாடல்களே ''மாதர்ப் பிறைக் கண்ணியானை'' எனத் தொடங்கும் காந்தாரப் பண்ணில் அமைந்த திருப்பதிகம். அருள் செய்து எதிர்நின்ற அழியாத் தேனமிர்தமாகிய அம்மையப்பனை உண்டு களித்தார் நாவேந்தர்.

சைவப் பெருநெறியில் ஊறியிருந்த அப்பரடிகள் தமது பழைய சமண சமயத் தொடர்பை அடியோடு அறுக்க விரும்பி, தம்முடலின் மீது சிவனார் இலச்சினையாகிய இடபக்குறியும் சூல முத்திரையும் பொறிக்கப்பட வேண்டும் எனச் செந்தமிழ் மாலையொன்று பாடிப் பெண்ணாகடப் பெருமானைப் பணிந்தேத்தி இறைஞ்சுகின்றார். இதுசெய்யத் தவறினால் உயிர்தரியேன் என்று உரிமையுடன் வாதாடுவது இறைநெறிக்கண் நாட்டமுள்ளவர்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்கிறது.

பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம்
போற்றிசெய்யும்
என்னாவி காப்பதற் கிச்சையுண்டேல் இருங்கூற்றகல
மின்னாரு மூவிலைச்சூல மென்மேற்பொறி
மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுட் டுங்காலை மாடச்
சுடர்க்கொழுந்தே.

சோழ நாட்டிலும் பாண்டிநாட்டிலும் பரமன் எழுந்தருளியிருக்கும் பல தலங்களைத் தரிசித்துவிட்டு, திருப்பூந்துருத்தியில் அமர்ந்துள்ள செஞ்சடையனாகிய பொய்யிலியைக் கண்டு அவன் திருவடிக் கீழ் சிலகாலம் இருந்து பேரின்பம் நுகர்ந்தார். அங்கு பல சிவதொண்டுகள் புரிந்து, தம் பிரான் அருள் பெற்று ஓர் திருமடமும் அமைத்தார். அங்கிருந்து பல பாமாலைகளைப் பரமன் திருவடிகளிற் சூட்டிய அப்பர் சுவாமிகள் மனிதப் பிறவி எடுத்த மக்களாயுள்ள நம்மனோர் செல்கதியைக் காட்டிட ''தலையே நீ வணங்காய்'' எனத் தொடங்கும் திருவங்கமாலையைப் போற்றி இயம்பியருளினார். இப்பதிகத்தின் இறுதிப்பாடல் தன்னகத்தே கொண்டுள்ள பேருண்மை ஆழமாக நோக்கற்பாலது.

தேடிக் கண்டுகொண்டேன் -திரு
மாலொடு நான்முகனுந்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டுகொண்டேன்.

திருவருள் பொழிந்து நிற்கும் கருணைக் கடலாகிய தில்லைப் பெருமானைத் தரிசித்த அடிகளார் அவ்வானந்த மெய்த்தன்மையிற் பாடிய திருவிருத்தங்கள் அம்பலவாணனை அப்படியே எங்கள் கண்முன் கொணர்ந்து நிறுத்துகின்றன. ஆழ்ந்த இறையனுபவமும் அசையாத பக்தியும் இன்றேல் இவ்வற்புதக் காட்சி வெளிப்படமுடியுமா?

குனித்த புருவமுங் கொவ்வைச் செவ் வாயிற்
குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேலியிற்
பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்
பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

இதனைவிட ஆடலரசை உயர்வாக அளந்துகூற வல்லவர் எவருமே இல்லையெனலாம். இங்கே குறிப்பிட்ட அருட் பாடல்களனைத்தும் நான்காம் திருமுறைக்குள் அடங்குவன. திருவதிகை வீரட்டம் முதல் திருப்பூம் புகலூர் ஈறாக 125 சிவத்தலங்களைத் தரிசித்து 3066 திருப்பாடல்களைக் கொண்ட 312 திருப்பதிகங்களை வண்டமிழ் மாலைகளாகப் பாடியருளினார். திருநாவுக்கரசு நாயனார். சைவமும் தமிழும் மறுவாழ்வுபெற அன்றும் காரணமாயிருந்தவர் அப்பரடிகள்; இன்றும் காரணமாயிருக்கும் தகைமை பெற்றிருப்பவை அவர் வெளிப்பாடுகளாகிய திருமுறைகள். அன்பர் பணியிலே இன்பநிலை கண்டவர் அடிகளார். மனிதக்காதலை தெய்வக்காதலாக மாற்றிய புண்ணியர். அஹிம்சையே அவர் ஆயுதம். தொண்டே அவர் கடமை. பக்திப் பெருக்கினால் பெற்ற அனுபவங்களையே பாடிவைத்துள்ளார்கள். இவற்றைப் படிப்பதால் நம்மைச் சூழ்ந்துள்ள அக இருளும் புற இருளும் மறைந்தோடும் உள்ளத்தில் உண்மை ஒளி பிரகாசிக்கும்.

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.''

கொடுத்துத் தேறிய பாரதியார்!

ஒரு சமயம் பாரதியாரின் பெண் தங்கம்மாளை அவரது பாட்டி சீக்கிரம் குளித்துவிட்டு வரும்படி கூறினார். அதற்கு தங்கம்மாள் ''குளிக்காவிட்டால் என்ன பாட்டி! எனக்கு உடம்பு சரியில்லை. என்னவோ போல இருக்கிறது'' என்றாள்.

''என்னம்மா இப்படிச் சொல்லுகின்றாய்! குளிக்காவிட்டால் உடம்பு சரியாகி விடுமா? ''குளித்துத் தேறு! கொடுத்துத் தேறு'' என்று தெரியாம்லா ஔவையார் சொல்லியிருக்கிறாள்?'' என்றாள் பாட்டி.



பாரதியார் அடுத்த அறையிலிருந்து, ''ஆம், வாஸ்தவம். அம்மா சொல்வது உண்மை, மிகவும் உண்மை! சோர்ந்த உடலுக்கு ஸ்நானம் ஆரோக்கியம் அளிக்கும். நைந்த மனத்துக்கு தானம் ஆறுதலளிக்கும்'' என்றார்.

உடனே பாரதியாரின் மனைவி, வந்தது வினை. ஏற்கனவே வாங்கி வைத்த சாமானை வீட்டிலிருக்க விட மாட்டார். நீ வேறு தானத்தின் உயர்வைப் பற்றிப் பேசினால் கேட்க வேண்டுமா? என்றார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு பிச்சைக்காரன் வந்து ''ஐயா. ஒரு கினிஞ்ச வஸ்திரம் கொடுங்க'' என்றார்.

உடனே பாரதியார் தான் அணிந்திருந்த வேஷ்டி, கோட்டு, டர்பன் உள்பட எல்லாவற்றையும் அவனிடம் கொடுத்துவிட்டு லங்கோட்டுடன் உள்ளே வந்தார்.

இதைக் கண்ட அவரின் மனைவி, ''என்ன இது?'' என்றார்.

''கொடுத்துத் தேறினேன்!'' என்றார் பாரதியார் அமைதியாக.

''பாரதியாரின் கவையான அனுபவங்கள்'' என்ற நூல்

With Compliments

QUALITY COLOR

GEMS & MINERALS

LAPIDARISTS & EXPORTERS

562 / 8, LOWER BAGATALA ROAD
COLOMBO 03
SRI LANKA.

WITH BEST COMPLIMENTS

FROM

RICHARD PIERIS & CO. LTD.

69, HYDE PARK CORNER,
COLOMBO 2.

Tel : 687301 (2 Lines)
687169, 687174

Fax: 687175

WITH BEST COMPLIMENTS

FROM

LALITHA JEWELLERS (PRIVATE) LTD.

60, SEA STREET,
COLOMBO - 11.
Telephone : 422300, 446886, 324780

With Best Compliments

From

DEVI TRADING COMPANY
IMPORTERS & EXPORTERS

No. 125, BANKSHALL STREET,
COLOMBO 11,
SRI LANKA.

Telephone : 320314, 432443, 423444, 437453
Fax : 94 - 1 - 432444

வெள்ளி விழாப் போட்டிகள்

பாடசாலைப் போட்டிகளில்
கலந்து கொண்டோரின்
ஒரு பகுதி

WITH BEST COMPLIMENTS

FROM

AKBAR BROS GROUP OF COMPAINES

334, T.B. JAYAH MAWATHA,
COLOMBO - 06,
SRI LANKA.

Telephone : 697151
Telex : 21105 Akbaf CE
Fax : 699029

WITH BEST COMPLIMENTS

FROM

ALMAR TRADING COMPANY

FIRST FLOOR,
STANDARD CHARTED BUILDING,
COLOMBO 01,
SRI LANKA.

T'phone: 20481, 546748
Telex : 21337 Altraco CE
Cable : Almartraco

WITH BEST COMPLIMENTS

FROM

UNILINK FREIGHTERS

126/3/10/G, 3rd FLOOR,
Y. M. B. A. BUILDING
COLOMBO 01.
SRI LANKA.

Sri Lanka. Telephone : 448902

With Best Compliments

From

PEE BEE FASHIONS LTD

55, CHATHAM STREET,
COLOMBO - 01,
Sri Lanka.

Telephone : 324127, 436118

WITH BEST COMPLIMENTS

FROM

GREEN TRADERS

General Rice Merchants & Commission Agents
Dealers In Sri Lanka Produce

132, DAM STREET,
COLOMBO 12,
SRI LANKA.

Telephone : 423289

BEST COMPLIMENTS

FROM

SHOW BIZ VIDEO CLUB

For English, Tamil & Hindi
Video Cassettes

166 B, GALLE ROAD,
DEHIWALA,
SRI LANKA

BEST COMPLIMENTS

FROM

CAMBRIDGE TRADERS.

H. M. S. FARZAN

Office :
22E, QUARRY ROAD,
COLOMBO 12,
SRI LANKA.
T. Phone : 432187
422206
437785

Res :
25, 42nd LANE,
COLOMBO 06
SRI LANKA
T. Phone : 582852

WITH BEST COMPLIMENTS

FROM

SIVASAMY & CO.,

Wharf Clearing and Forwarding Agency

A G 3, SANCHI ARACHCHI GARDENS,
COLOMBO 12.
SRI LANKA.

Telephone : 449371, 24615

BEST COMPLIMENTS

FROM

LINGAM SILK HOUSES

JAFFNA.

DEALERS IN TEXTILE AND READY MADE GARMENTS

SRI LANKA.

WITH BEST COMPLIMENTS

FROM

KALUTOTA TRADING CO. (PVT) LTD.

IMPORTS OF MOTOR VEHICLES

HEAD OFFICE :
04, PARKWAY,
COLOMBO - 05.

Telephone : 582902
Fax : 01-584468

SHOW ROOM :
486, KANDY ROAD,
KELANIYA.

Telephone : 520310

WITH BEST COMPLIMENTS

FROM

UNITED CLEARING AGENCY

CUSTOMS HOUSE AGENTS, CLEARING & TRANSPORTING AGENTS

PROP :
M. M. M. NAWZER
119/A, Sri Sangaraja Mawatta,
Colombo - 10.

Telephone : 442383

BEST COMPLIMENTS

FROM

CEYLON PAPER SACKS LIMITED

47, MALIGAWA ROAD,
ETUL KOTTE.

Telephone; 56/2579, 56/2009, 56/3033

WITH BEST COMPLIMENTS

FROM

B. Ananda Jayasekara & Co.

IMPORTERS OF BRAND NEW & RECONDITIONED VEHICLES

"VOUGE BUILDING"
528 1/3, GALLE ROAD,
COLOMBO - 03.
SRI LANKA.

Telephone : 575042, 575044, 573942
Fax : 94 - 1 - 575252

WITH BEST COMPLIMENTS

FROM

Subasinghe Trading Company

IMPORTERS OF NEW & RECONDITIONED JAPANESE MOTOR VEHICLES

59, D. S. SENANAYAKE MAWATHA,
COLOMBO 08.

Telephone : 697666
Fax : 94 - 1 - 686110
Telex : 22246 SUBSIN CE

Branch :
218, COLOMBO ROAD, NEGOMBO.
Telephone : 031 - 3313

BEST COMPLIMENTS

FROM

CONCORD HARDWARE ENTERPRISES

GENERAL HARDWARE MERCHANTS

FOR YOUR REQUIREMENTS IN

- FERROUS & NON - FERROUS METALS
- WIRE MANILA POLYPROPLENE ROPES AND TACKLES FOR SAME
- ASBESTOS PRODUCTS: YARN, SHEETS, METALIC, NONMETALIC PACKINGS, LAGGING & CLOTH
- COPPER, STAINLESS STEEL, STEAM, SEAMLESS & G. I. PIPES.

MARINE SUPPLY A SPECIALITY

261, OLD MOOR STREET,
COLOMBO 12.
SRI LANKA

T'phone : 447243, 423526
Telex : 21583 TELECO CE

WITH BEST COMPLIMENTS

FROM

THE

SAREE MUSEUM

DEALERS IN TEXTILES

No. 119, MAIN STREET,
COLOMBO - 11,
SRI LANKA.

BEST COMPLIMENTS

FROM

CITYTEX TRADERS

DEALERS IN TEXTILES & FANCY GOODS

No. 87, MAIN STREET,
COLOMBO 11,
SRI LANKA.

T'phone: 24852, 448413

WITH BEST COMPLIMENTS

FROM

KOSALA AGENCIES LTD.

P. O Box 1770,
211, Cotta Road,
Colombo - 08,
Sri Lanka.

Telephone : 699635, 699636
Fax : 699637
Telex : 21703 KOSALA CE

With Best Compliments

From

K. K. Krishnapillai & Co.

(IMPORTERS, EXPORTERS AND GENERAL MERCHANTS)

No. 171, 4th Cross Street,
Colombo 11.
Sri Lanka.

Telephone : 29325, 438558

WITH BEST COMPLIMENTS

From

NINE HEART

NINEHEARTS (PTE) LTD.

99, STACE ROAD,
COLOMBO - 14.
SRI LANKA.

Phone : 432338, 449907
Telex : 21314 HEARTS CE
Telefax : 94 - 1 - 449907

பஞ்சாங்கம் ஒரு சிறு விளக்கம்

மயில்வாகனம் இராமகிருஷ்ணன்
ஆயர்பாடி ஜோதிட ஆய்வு மையம்
தெல்லிப்பளை.

பஞ்சாங்கம், கிரகங்களின் அசைவு பற்றிய காலங்களைத் தரும் ஒரு அட்டவணையாகும். இதனை ஆங்கிலத்தில் ''அல்மனக்''(Almanac) என்று கூறுவார்கள்.

வானியல் பற்றிச் சொற்பமாவது புரிந்துகொண்டால் தான், பஞ்சாங்க விபரங்களைப் பற்றி விளங்கிக் கொள்ள முடியும்.

கிரகங்களும் ஜோதிடமும்

சூரியன் நிலையாக நிற்க அதை இதர கிரகங்கள் சுற்றிவருகின்றன. பிரபலோக கணித தத்துவத்தின்படி பூமிசார்பாக பூமியை சூரியன் முதல் இதர கிரகங்கள் யாவும் சுற்றிவருகின்றன என்று கொள்ளலாம்.

நாம் பூமியில் வாழ்ந்து கொண்டிருப்பதால், பூமிசார்பாக ஏனைய கிரகங்கள் எப்படிச் சஞ்சாரம் செய்கின்றன என்பதைப் பற்றியே சோதிட சாஸ்திரங்கள் ஆராய்துள்ளன.

எல்லையில்லாது பரந்து விரிந்த வான வெளியை பிரபஞ்சம் என்று கூறுவர். இந்த பிரபஞ்சத்தில் கோடான கோடி சூரியர்கள் அவ்வவற்றுக்குள்ள கிரகங்களுடன் சேர்ந்து, ஒவ்வொரு சூரியக்குடும்பங்களாக இருக்கின்றன.

இரவில் நாம் வானத்தைப் பார்க்கும் போது எமக்குத் தெரிகின்ற நட்சேத்திரங்கள் எல்லாம் உண்மையில் ஒவ்வொரு சூரியர்களே. இதே போன்ற ஒரு சூரியனது குடும்பத்தில்தான் எமது பூமியும் இருக்கின்றது.

எமது ஜோதிட பஞ்சாங்கங்களில் கிரக அசைவுகளைக் கணக்கிடுவதற்கு இந்த நிலையான நட்சத்திரக் கூட்டங்களையே அடிப்படையாக அதாவது மைல் கற்களாகக் கொண்டிருக்கிறார்கள் எமது பண்டைய ஜோதிட ஞானிகள்.

திருக்கணிதமும் வாக்கியமும்

இலங்கையில் தமிழ் மக்கள் மத்தியில் இரண்டு விதமான பஞ்சாங்கங்கள் புழக்கத்தில் இருக்கின்றன. ஒன்று வாக்கிய பஞ்சாங்கம் மற்றையது திருக்கணித பஞ்சாங்கம் ஆகும்.

ஆரம்பம் முதலே இருந்து வருவது வாக்கியமென்றும் பின்னர் அதிலிருந்து பிரிந்து திருக்கணிதம் உண்டாகிய தென்றும் அறிய முடிகிறது.

திருக்கணிதம் உண்டாக் கப்பட்டமைக்கான காரணம், வாக்கியம் உண்டாகி பல வருட காலம் சென்று விட்டதென்றும், ஆனால் வாழ்க்கை முறையில் பல மாற்றங்கள் உண்டாகியுள்ளது ஆதலால் திருத்தங்கள் இல்லாது பழைய வாக்கிய கணிதங்களையே திரும்பத் திரும்ப உபயோகிப்பது தவறு என்பதால், புதிய சில கணித விற்பன்னர்களால் தோற்றுவிக்கப்பட்டதே திருக்கணிதம் என்றும் அக் கணிதர்கள் கூறுகிறார்கள்.

தற்கால திருக்கணிதர்கள் தமது கணிதப்படி கிரக அசைவுகள் சமாகமங்கள் கண் பார்வைக்கு ஒத்துவருவதால் அவையே சரியானது என வாதிடுகின்றனர்.

வாக்கிய கணிதர்களோ தமது கணிதம் பன்னெடுங் காலமாக ரிஷிகளின் வழிவழி வந்த முறைப்படியே கணிக்கப்படுகின்றன ஆதலால் அதுதான் சரியானது என்கின்றனர்.

உரியவர்கள் எப்படித்தான் சொன்னாலும் அதைப்பின் பற்றும் மக்கள் சற்று அவதானமாகச் சிந்திக்கத் தவறுகிறார்கள்.

தற்கால மேல்நாட்டு விஞ்ஞான வானியல் கணிதமும் திருக்கணிதமும் கிரக சஞ்சாரங்களில் ஒத்துப் போகின்றது. அல்லது திருக்கணிதர்கள் மேல் நாட்டுக் கணிதத்தைப் பின்பற்றிக் கணிப்பவர்களாகவும் இருக்கலாம். அவர்கள் பாவிக்கும் சில ஆங்கிலச் சொற்கள் இதனை நிரூபிக்கின்றன.

வாக்கியம் என்றால் வாய்ப்பாடு கொண்டு கணிப்பது போன்றதாகும். இதில் கணிதர்களின் கவனயீனப்பிழை இல்லாது விட்டால் கணிதத் தொடர் பிழைக்க வேண்டிய அவசியமில்லை.

திருக்கணிதம் பல திருத்தங்கள் செய்யப்பட்டது. திருத்தங்களைச் செய்தவர்கள் பலன்கூறும் புதிய ஜோதிட விதிகளை உண்டாக்கியவர்களல்ல. பழைமைக்கும் புதுமைக்கும் சொல்லின் வடிவம் மாறுபடலாமேயல்லாது பதம் மாறுபட முடியாது.

பாஞ்சாங்கங்களைப் பாவிக்கின்ற சாதாரண மனிதாகளால் எந்தப் பஞ்சாங்கம் சரியானது என்பதைக் கண்டு கொள்ள முடியாமல் உள்ளது. சரி பிழையை நீண்ட கால அனுபவத்தின் மூலமே உணரக்கூடியதாக இருப்பதால் மக்கள் திண்டாடுகிறார்கள்.

கண் திருஷ்டிக்கு கிரக அசைவுகள் சமாகங்கள் ஒத்துப் போகின்றன என்ற ஒரே நம்பிக்கையினால் அனேகமான கல்விமான்கள், கோவில் நிர்வாகிகள் கூட திருக்கணிதத்தையே பின்பற்றுகிறார்கள்.

தற்காலத்து நவீன விஞ்ஞானம் வளர்ச்சியடையாத அக்காலத்திலேயும் ரிஷிகளின் மெஞ்ஞானம் வளர்ச்சியடைந்திருந்ததென்றும் அதன் மூலம் தரப்பட்ட தரவுகள் அத்தனையுமே வியக்கத்தக்க முறையில் உண்மையாக இருக்கின்றன என்பதையும் உணரும் போது அந்த ரிஷிகளின் பழைய கணித முறையை இலகுவில் தவறு எனக் கூறமுடியாமல் உள்ளது.

ஒரு சிறிய உதாரணம் சூரிய பகவான் ஒற்றைச் சில்லுக் கொண்டு ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் பவனி வருகிறார் என்பது மிகப் பழைய புராணக் கதை. ஆனால் இன்றைய விஞ்ஞானக் கண்டுபிடிப்பு யாதெனில் சூரிய னுடைய ஒரு

JANATHA GARMENTS MFG. LTD.
UNION STRAND LTD.
CLIFTEX INDUSTRIES LTD.

17, VIVEKANANDA HILL,
COLOMBO 13,
SRI LANKA.

TELEPHONE : 432239, 435711, 320458
FAX : 448903

பஞ்சாங்கம் - ஒரு சிறு விளக்கம்

ஒளிக்கதிர் ஏழு நிறங்களாகப் பிரிகின்றன என்பது. இங்கே கூறப்பட்ட முறை வித்தியசமானதாக இருக்கலாம். ஆனால் உண்மை ஒன்றாகவே இருப்பது வியக்கத்தக்கதே.

கிரக அசைவுகளில் இலகுவாக எம்மால் கண்டு பிடிக்கக் கூடியது அமா வாசையும் பூரணையும் தான். அமாவாசையில் சந்திரனும் சூரியனும் ஒன்றாக இருக்கும். பூரணையில் சூரியனுக்கு 180 பாகையில் சந்திரன் இருக்கும் இதர கிரக அசைவுகளில் தாராளமான வித்தியாசத்தைக் காட்டும் இரண்டு பஞ்சாங்கமும் அமாவாசை பூரணைகளின் வித்தியாசத்தை ஒரு சில மணித்தியாளங்களில் தான் காட்டுகின்றன. வித்தியாசம் 24 மணித்தியாளங்களுக்கு மேற்பட்டால் எந்தப் பஞ்சாங்கம் சரியானது என்பதை மக்களால் இலகுவாகக் கண்டுபிடிக்கக் கூடியதாக இருக்கும்.

பஞ்சாங்கம் என்றால் என்ன?

இனிப் பஞ்சாங்கம் என்றால் என்ன என்பதைக் கவனிப்போம். பஞ்ச என்றால் ஐந்து என்பது பொருள். ஐந்து விதமான அங்கம் பஞ்சாங்கமாகும். ஒரு நாளுக்கு ஐந்து விதமான ஜோதிட தரவுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு நாள் கணிப்பானது வாரம், திகதி, நட்சேத்திரம், யோகம் கரணம் இவையே பஞ்சாங்கத்தின் ஐந்து அங்கங்களுமாகும். ஆனால் நாங்கள் இன்று ஒரு நாளிற்கு அவதானிக்கும் ஐந்து அங்கங்கள் ஆண்டு மாதம் திகதி, கிழமை, நட்சேத்திரம் என மாற்றமடைந்துள்ளன. உண்மையில் பஞ்சாங்கம் என்பது வார திகதி நட்சேத்திரயோக கரணங்களேயாகும்.

நாள் என்பதும் ஒரு பகலையும் ஒரு இரவையும் கொண்ட காலப்பகுதியாகும். இந்நாளை உலகம் மூன்று விதமாகக் கைக் கொண்டு வருகின்றது.

ஒன்று தமிழ்த் திகதி அதாவது ஜோதிடத்தேதி அல்லது கிழைத் தேசத் தேதி, இரண்டாவது ஆங்கிலத் தேதி, மூன்றாவது அரபுத் தேதி என்பனவாகும்.

தமிழ்த் தேதி என்பது சூரியன் உதித்தது முதல் ஆரம்பமாகி இரவு வந்து அடுத்த சூரிய உதயம் வரையுள்ள காலப்பகுதியாகும்.

ஆங்கிலத் தேதி என்பது இரவு 12 மணி முதல் ஆரம்பமாகி பகல் வந்து அடுத்த இரவு 12 மணி வரையுள்ள காலப்பகுதியாகும்.

அரபுத் தேதி என்பது மாலை சூரியன் மறைந்தது முதல் ஆரம் பமாகி பகல் வந்து அடுத்த சூரியன் மறைவு வரையுள்ள காலப்பகுதியாகும்.

தமிழ் அரபுத் தேதிகள் கிரக அசைவை அடிப்படையாகவும் ஆங்கிலத் தேதி அப்படியில்லாமல் இருப்பதும் கவனிக்கத்தக்கதாகும். தமிழ் அரபு நாட்களின் பரிமாணம் கூடியும் குறைந்தும் இருக்க ஆங்கில நாட்களின் பரிமாணம் நிலையாக 24 மணித்தியாளங்களாகவே இருப்பது குறிப்பிடத்தக்கது. எனவே ஆங்கில நாட்கணிப்பிற்கும் ஜோதிட சாஸ்த்திரத்திற்கும் எதுவித தொடர்பும் இடையாது.

வாரம் (முதலாவது அங்கம்)

வாரங்கள் ஏழு ஆகும். அவை ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி என கிரகங்களது பெயரிலேயே அழைக்கப்படுகின்றன. அப்படியாயின் ராகு கேது கிரகங்களுக்கு ஏன் வாரங்கள் கொடுக்கப்படவில்லை என்ற கேள்வி எழக்கூடும். ராகு கேதுக்கள் உண்மையில் கிரகங்களே அல்ல. அவை சாயாக் கிரகங்கள் அதாவது நிழல் கிரகங்கள் என்றே ஜோதிடத்தில் அழைக்கப்படுகின்றது.

சூரியனது சுற்றுப் பாதையும் (ஒழுக்கும்) சந்திரனது சுற்றுப் பாதையும் (ஒழுக்கும்) ஒன்றையொன்று வெட்டுகின்ற இரண்டு புள்ளிகளும் தான் ராகுவும் கேதுவும் எனப் பெயர் பெறுகின்றன.

இந்துசமயத்தின் வேதங்களான இருக்கு யசுர், சாமம், அதர்வணம் என்பவைகளின் ஆறு பிரிவுகளுள் ஜோதிடமும் ஒன்றாகும்.

இந்து சமயத்தில் கூறப்பட்டுள்ள வேள்விகள் யாகங்கள் திருவிழாக்கள் விரதங்களைச் செய்வதற்குரிய கால நோக்கங்களைக் குறிப்பிடுவது தான் ஜோதிடம், இக் கால நேரங்கள் கிரக அசைவுகளைக் கொண்டுதான் கணிக்கப்படுகின்றன என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

விரதங்களுக்கு பின்பற்ற வேண்டிய திகதி தமிழ்த் திகதிகளே அதாவது ஜோதிடத் திகதிகள் தான் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். ஜோதிடரீதியாக சூரியன் உதித்த பின்பு தான் நாள் ஆரம்பமாகிறது என்பதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். வாரங்கள் ஏன் ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்ற வரிசைப்படி வரவேண்டும் மாறிவந்தால் என்ன? என்ற கேள்வியும் எழக்கூடும்.

ஓரை அறிந்து நடத்தல் லாபம், என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்த ஓரையின் அடிப்படையில் தான் வாரங்களின் ஒழுங்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஞாயிற்றுக் கிழமையாயின் அன்று சூரய உதயம் முதல் ஒரு மணித்தியாலம் வரை சூரிய ஓரையாகும். அடுத்து வரும் ஒவ்வொரு மணித்தியாலயமும் முறையே சுக்கிரன், புதன், சந்திரன், சனி, குரு, செவ்வாய், ஓரைகளாக மாறிமாறி நிகழும்.

இப்படி ஞாயிற்றுக் கிழமையின் முடிவு புதன் ஓரையில் முடிந்து அடுத்த சூரிய உதயம் சந்திர ஓரையில் ஆரம்பமாகும். இதனால் அடுத்தநாள் திங்கள் கிழமையாகிறது. இப் படியே வரிசைக் கிரமத்தில் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளும் வருகின்றன.

ஒவ்வொருநாளும் இவ் ஓரைகளுக்கிடையில் பகலிலும் இரவிலும் ராகு கேதுவின் காலங்கள் வந்து போகின்றன. ஒவ் வொருநாளும் சாதாரண கருமங்களுக்குக் கூட ராகுகாலம் பார்த்துச் செய்வது துன்பத்தை வரவிடாமல் தடுக்கக் கூடியதாகும்.

திதி (இரண்டாவது அங்கம்)

திதி என்பது சூரியனிலிருந்து சந்திரன் விலகிச் செல்கின்ற கால அளவாகும். அமாவாசையன்று சூரியனுடன் இருக்கும் சந்திரன், சூரியனிலிருந்து திதி ஒன்றிற்கு 12 பாகை வீதம் விலகிச் செல்லும் காலப் பகுதியாகும்.

திதிகள் பதினைந்து . இவை பூர்வ பக்க திதிகள் அபர பக்க திதிகளாக மொத்தம் முப்பது திதிகளாகும்.

அவை பிரதமை, துதியை திருதியை சதுர்த்தி, பஞ்சமி, ஷஷ்டி, ஸப்தமி, அட்டமி, நவமி, தசமி, ஏகாதசி,துவாதசி, திரயோதசி, சதுர்த்திசி, பூரணை அல்லது அமாவாசை எனப்படும்.

அமாவாசை முடிய ஆரம்பிப்பது பூர்வ பக்கம் அல்லது சுக்கில பக்கம் அல்லது வளர்பிறை எனப்படும். பூரணை முடிய ஆரம்பிப்பது அபரபக்கம் அல்லது கிருஷ்ண பட்சம் அல்லது தேய் பிறை எனப்படும்.

மனித வாழ்விற்கு சந்திரனது அசைவே முக்கிய மானதாக இருப்பதால், கருவில் இருக்கும் சிசுவின் 10 மாத வளர்ச்சி கூட 280 நாள்களாகவே இருப்பது இங்கே கவனிக்கப்பட வேண்டியதாகும். இந்து சமயத்தின் விரததினங்கள், இறந்தவர்களுடைய சிராத்த தினங்கள் இந்த திகதிகளின் பெயரால் தான் அழைக்கப்படுகின்றன.

பஞ்சாங்கத்தை புரட்டுங்கள்

பஞ்சாங்கத்தைத் திறந்து அதனது மாதாந்த அட்டவணையைப் புரட்டினீர்களேயானால், உங்களுக்கு இடதுபுறமுள்ள பக்கத்தில் இருப்பதுதான் மாதாந்த விபரங்களாகும். இதில் அரபுத்திகதி, ஆங்கிலத்திகதி, தமிழ்திகதி, கிழமை திதி, நட்சேத்திரம், யோகம், கரணம் என்பவை கொடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

POLHENA TRADING PTE LTD

55/15, SWARNA ROAD,
COLOMBO 05,
SRI LANKA.

பஞ்சாங்கம் - ஒரு சிறு விளக்கம்

ஒரு திகதிக்கு நேரே அத்திகதிக்குள்ள விபரங்கள் தரப்பட்டுள்ளன. நாடி விநாடி வரை மணிமனிற் வரை என்று இருப்பது யாதெனில், அந்த நாடி விநாடி வரையோ அல்லது குறிப்பிட்ட திதி, நட்சேத்திரம், யோகம் கரணம் என்பவை இருக்கின்றன என்பதையே அவை குறிக்கின்றன.

ஒரு மணித்தியாலம் இரண்டரை நாடிகளுக்கும் ஒரு நிமிடம் இரண்டரை விநாடிகளுக்கும் சமமானது. இது ஜோதிட கால அளவுகளாகும்.

சிரார்த்த அல்லது விரத திதியை தெரிந்து கொள்ள விரும்புபவர்கள் உங்களுக்கு வலதுபுறம் உள்ள பஞ்சாங்கப் பக்கத்தைப் பார்க்க வேண்டும். இதில் தமிழ்த் தேதி, சுபாசுபயோகம், விரதாதி நிரூபணம் என்பவை கொடுக்கப்பட்டிருக்கும்.

பூர்வ அபர பக்கங்களைச் கவனித்து உங்களுக்குத் தேவையான திதியின் எதிரே என்ன திகதி கொடுக்கப்பட்டுள்ளதோ, அத் தமிழ்த்திகதிதான் நீங்கள் சிராத்தம் மேற்கொள்ள வேண்டிய நாளாகும். சிரார்த்தம் என்பது இறந்தவர்களது ஆத்மா சாந்தியடைய வீடுகளில் செய்யப்படும் திவஷம், மாளயம் போன்றவையாகும்.

அமாவாசை பூரணை விரதங்களைக் கூட இப்படி, விரதாதி நிரூபணம் என்ற அட்டவணையில் பார்த்தே நீங்கள் சரியான நாளைத் தெரிந்து கொள்ள வேண்டும். இரண்டு பஞ்சாங்கங்களையும் பார்த்தால், விரததினங்கள் சிலவேளை வேறுபடலாம் நீங்கள் நன்கு சிந்தித்து ஆராய்ந்து முடிவெடுத்துள்ள உங்கள் நம்பிக்கைக்குரிய ஒரு பஞ்சாங்கத்தையே தொடர்ந்து கடைப்பிடிப்பது நல்லது. பஞ்சாங்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள சுப அசுபயோகம் என்பது, அவ்வத் திகதிகளின் வாரம், திதி, நட்சேத்திரம் இவைகளின் சம்பந்தத்தினால் ஏற்படும் யோகங்களாகும். அவை அமிர்தம், சித்தம், மரணம் என்று மூன்று வகைப்படும்.

அமிர்த சித்த யோகங்களில் நல்ல கருமங்களைச் செய்யலாம். மரணயோகம் தீமையானது. கரிநாள் என்று போடப்பட்டிருந்தால் அது அந்த மாதத்தில் சுப கருமங்களுக்கு விலக்கப்பட்ட நாளாகும்.

அவமா என்பது ஒரு நாளில் மூன்று திதிகள் கலந்திருக்கும் தினமாகும். இதுவும் சுபகருமங்களுக்கு விலக்கப்படும்.

இராமா, திவாமா என்பவைகளை மாதத்தியாச்சியம் என்று கூறுவர். இராமா என்றிருக்கும் தினங்களில் பகலும் சுபகருமங்களுக்கு விலக்கப்பட்டவைகளாகும்.

இதில் கொடுக்கப்படும் சுபநாட்கள் சாதாரணமான வையே. இவற்றை முகூர்த்த நாள்களாகக் கொள்ள முடியாது. விவாகம் போன்ற உயர் சுப முகூர்த்தங்களை நாள், நட்சேத்திரம், கிரக அமைப்பு, சுபக் கிரக பார்வையுள்ள சுப லக்னம், இவைகளின் அடிப்படையிலேயே நிர்ணயிக்க வேண்டும்.

அமாவாசை, பூரணை இரவிற் குரியவைகளாக இருப்பதால், எந்த இரவில் அத்திதிகள் வருகின்றனவோ அத்தினங்களிலேயே அவ்விரதங்கள் கைக்கொள்ளப்படுகின்றன.

இதேபோன்று வைகுண்ட ஏகாதசி சிவராத்திரி, நவராத்திரி போன்ற விரதங்களும் இரவிற்கே முக்கியத்துவமானவைகளாக இருப்பதால், இத்திதிகள் வருகின்ற இரவுகளையே அந்த விரத தினங்களாக கொள்வது சரியானதாகும்.

நட்சேத்திரம் (3 வது அங்கம்)

வானத்தில் கோடானகோடி நட்சத்திரங்கள் இருக்கின்ற போதிலும், மனித வாழ்விற்கு மிக முக்கியமானவை என ஜோதிட சாஸ்த்திரங்களால் கைக் கொள்ளப்பட்டுபவை இருபத்தேழு ஆகும்.

அவை அச்சுவினி, பரணி, கார்த்திகை, ரோகினி, மிருகசிரீடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம், உத்தரம், அத்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை மூலம் பூராடம். உத்தராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி என்ற இருபத்தேழுமாகும்.

நட்சத்திரங்களால் எமக்கு தாக்கம் உண்டாவதில்லை. உண்மையில் இவை கிரகங்களின் அசைவைக் கணிக்க உதவுகின்ற மைல் கற்களாகும். அதாவது இவற்றை வைத்தே கிரகம் தற்போது எங்கே இருக்கின்றது என்பதை அறிய முடியும்.

பூமியைச் சுற்றியுள்ள 360 பாகையிலும் 27 நட்சத்திரங்கள் இருப்பதால், இரண்டு நட்சேத்திரங்கள் 13 பாகை 20 கலையில் இருக்கின்றன.

மேலும் பூமியைச் சுற்றியுள்ள பகுதியை 12 சம பங்குகளாகப் பிரிப்பதால் அவை ராசிகள் என பெயர் கொடுக்கப்பட்டு ஒரு ராசி 30 பாகைக் குரியதாகிறது.

எனவே ஒரு ராசிக்கு இரண்டேகால் நட்சத்திரம் உரியதாகிறது. ஒரு நட்சேத்திரத்திற்கு நாலு பாதம் அல்லது கால்கள் உண்டு. இதனால் அச்சுவினி பரணி கார்த்திகை 1ம் கால் கொண்ட வானவெளியை மேட ராசியின் பரப்பு என்கிறோம். இதேபோல ஏனைய நட்சேத்திரங்களுக்கும் ராசிகள் இருக்கின்றன.

சந்திரன் கிரகம் அச்சுவினி பரணி கார்த்திகை 1ம் கால் ஆகிய நட்சேத்திரங்களில் சஞ்சரிக்கும் போது நீங்கள் பிறந்திருந்தால் உங்களது ராசி மேடம் என்றோம்.

சந்திரன் எந்த நட்சேத்திரப்பரப்பில் சஞ்சரிக்கும் போது நீங்கள் பிறந்தீர்களோ அதுவே உங்களது பிறப்பு நட்சேத்திரமாகும். இதன் அடிப்படையிலேயே உங்களுக்கு நடக்கவிருக்கும் பலன்களை அறுதியிட்டுக் கூறும் கால அளவுகளை மகாதிசை புத்தி என பெயரிட்டு கணித்துக் கொடுக்கிறது ஜோதிடம்.

யோகம் (4 வது அங்கம்)

யோகங்கள் 27 அவையாவன விஷ்கம்பம், பிரீதி, ஆயுஷ்மான், சௌபாக்யம், சோபனம், அதிகண்டம், சுகர்மம், திருதி, சூலம், கண்டம், விருத்தி, துருவம், வியாகாதம், ஹர்ஷணம், வச்சிரம், சித்தி, வியதீபாதம், வரியான், பரிகம், சிவம், சித்தம், சாத்தியம், சுபம், சுப்பிரம், பிராம்மம், மாகேந்திரம், வைதிருதி

கரணம் (5 வது அங்கம்)

கரணங்கள் 11. அவையாவன, பவம், பாலவம், கௌலவம், தைதுலை, கரசை, வணிசை, பத்திரை, சகுனி, சதுஷ்பாதம், நாகவம், கிம்ஸ்துக்கனம், என்பவையாகும்.

இந்த யோகம், கரணம் என்பவைகளில் முக்கியமாக ஜோதிட பலன்கள் சொல்லப்படுவதைக் காணவில்லை. இருப்பினும் கரணங்களுக்கு ஒவ்வொரு மிருகங்களது பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இவைகள் பற்றி இதுவரை விளக்கமில்லாதிருப்பதால் இவை மேலும் ஆராயப்பட வேண்டியவைகளாகும்.

மனித வாழ்விற்கு மிக முக்கியமானது சந்திரகி ரகமாகும். ஜோதிட சாஸ்திரங்கள் சந்திரனையே பிரதான கிரகமாகக் கொண்டு பலன் கூறுகின்றன. பூமிக்கு மிக அண்மையில் சந்திரன் இருப்பது இதற்குக் காரணகாக அமையலாம்.

ஒரு நட்சேத்திரத்தில் சந்திரன் சஞ்சரிக்கின்ற காலம் அனேகமாக, ஒரு நாளானது 24 மணித்தியாலத்திலும் சற்றுக் கூடியதாகவே பெரும்பாலும் காணப்படும். இதன் காரணமாக நட்சேத்திரத்து பெருநாள் என்றும் கூறுவார்கள். நீங்கள் என்ன பெருநாளில் பிறந்தீர்கள் என்று எமது முன்னோர் கேட்பது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

27 நட்சேத்திரங்களையும், அதாவது பூமியை சந்திரன் சுற்றி வர எடுக்கும் நாட்கள் 28 ஆகும்.

ஏன் கமத் தொழிலில் கூட மூன்று மாத பயிர் என்று கூறும் போது அது 84 நாட்களாகவே இருப் பதை அவதானிக்கலாம்.

ஜோதிட சாஸ்திரங்கள். மிகமிக உண்மையான விஞ்ஞான சாஸ்திரமேயாகும். இவற்றை அறிவதாக இருந்தால் அதிகமாக கற்க வேண்டியிருக்கும். முயற்சிப்போமாக.

With Compliments

LUCKY HARDWARE STORES

221, MAHAVIDYALAYA MAWATHA,
COLOMBO 13
SRI LANKA.

T. PHONE : 325094

சனீஸ்வரனை சந்தித்த தசரதன்

தெரிந்த புராணம் தெரியாத கதை

சனீஸ்வர பகவானைப் போல கொடுப்பவரு மில்லை, கெடுப்பவருமில்லை. திரிலோகசஞ்சாரியான நாரத மகரிஷி, ஒரு சமயம் கையிலங்கிரி நாதனிடம் சனி பிடிப்பதனால் விளைகின்ற உபாதைகளிலிருந்து மீள்வது எவ்வாறு? என்று கேட்க, அண்டபகிரண்டத் தையும் தமது அருட்பார்வையினால் ஆட்சிபுரிந்து வரும் அகிராண்டேஸ்வரன் சனி பிடிப்பதால் ஏற்படும் துன்பங்களையும், அதனை விலக்க வேண்டிய முறைகளையும் நாரத மகரிஷிக்குத் தெளிவாக விளக்கியருளினார்...

அதாவது: அயோத்தி மன்னனான தசரத சக்கரவர்த்தி தம்மை சனீஸ்வரர் பிடிக்கவிருந்த வேளையில் எந்த மந்திரத்தைச் சொல்லி சனிபார்வையிலிருந்து மீண்டாரோ, அந்த மந்திரத்தைச் சொல்ல வேண்டும் என்றார்.

ஆம்: தசரத மன்னனும் சனீஸ்வரரின் பார்வைக்குள்ளான வேளை ஒன்றிருந்தது. அதாவது...

சூரிய வம்சத்தின் வழி வந்த மன்னர்களில் அயோத்தியை ஆண்டு வந்தவன் மிகுந்த பராக்கிரமசாலியான தசரதன். சப்த த்வீபங்களையும் அறம் வழுவாது அரசாட்சி செய்து வந்ததால் 'சக்கரவர்த்தி' என்ற பட்டத்தைப் பெற்றவன். அப்படி அவன் அரசாட்சி புரிந்து வருகின்ற போது, சனீஸ்வரர் கிருத்திகை நட்சத்திரத்திலிருந்து ரோகிணியைப் பிளந்து கொண்டு செல்ல இருப பதை தனது சோதிடர் மூலம் உணர்ந்தான்.

'இதனால் என்ன நேரும்? நன்மையா? தீமையா? நன்மை விளைந்தால் நாட்டிற்கு நல்லது. ஒரு வேளை தீமை ஏற்பட்டால் இதற்கு என்ன செய்வது? என்று பல வாறாக மனம் குழம்பித் தவித்தான் தசரதன். இறுதியில் தமது தற்சமயம் கிருத்திகை நட்சத்திரத்திலிருந்து ரோகிணியைப் பிளந்து கொண்டு சனி சென்றால் நாட்டில் பெரும் வற்கடம் (பஞ்சம்) ஏற்படும். அவை பன்னிரண்டு ஆண்டுகள் நீடிக்கும். மக்கள் மட்டுமன்றி விலங்குகள், பறவைகள் போன்றவைகள் கூட அவதியுறும். இவைகள் நிச்சயம் நடக்கும்.

''இதனை மாற்றவோ, அன்றி தடுக்கவோ ஏதாவது வழிகள் உண்டா?''

''உண்டு தசரதா... உடனடியாக சனீஸ்வரனை நீ நேரில் சந்தித்துத் தான் இதனைத் தடுக்க முயற்சிக்க வேண்டும்!''

மந்திரங்களால் உண்டாக்கப்பட்ட அஸ்திரங்கள், திவ்யாயுதங்களை எடுத்துக் கொண்டு, உயர்ந்த தேரில் ஏறி, சூரியமண்டலத்திற்கு மேலேயுள்ள நட்சத்திர மண்டலத்தை அடைந்து, ரோகிணி நட்சத்திரத்தை நெருங்கினான் தசரத சக்கரவர்த்தி.

அப்போது வெண்மையான குதிரைகள் பூட்டிய தேரில் எதிரில் வந்த சனீஸ்வர பகவானைக் கண்ணுற்ற தசரத சக்கரவர்த்தி, அதிவேகமாக நாண் பூட்டி, ஸம்ஹாரஸ்திரத்தைத் தொடுத்துப் பிரயோகம் செய்ய ஆரம்பித்தான்.

சனீஸ்வர பகவான் தசரதனின் தைரியத்தையும் தன்னம்பிக்கையும் கண்டு உள்ளூர வியந்தபடி, தனது பார்வையை தசரதன் பூட்டிய நாண் மீது செலுத்தினார். அந்த நாண் இரண்டாக உடைந்தது.

இதனைக் கண்டு மிகவும் கோபமுற்ற தசரத சக்கரவர்த்தி, ''சனீஸ்வரா! மாயப் பார்வையால் மந்திரீக வேலைகள் செய்வதை நிறுத்தி விட்டு, நேருக்கு நேர் போரிட வா!'' என்று அழைக்கலுற்றான்.

சனீஸ்வர பகவான் தசரதனின் கோபத்தைக் கண்டு சிரித்தபடி, ''தசரதா! உன்னுடைய ஜாதகத்தில் சுபபலன்கள் நடப்பதனால் தான் நீ இவ்வளவு தூரம் வரமுடிந்தது. அது மட்டுமன்றி என்னைக் கண்டால் அசுரர்களும் அஞ்சுவார்கள். அப்படியிருக்க, அரசனான நீ என்னை எதிர்க்க வந்திருப்பதைக் கண்டு சந்தோஷப்படுகிறேன். நினது வீரத்தை மெச்சி இரண்டு வரங்கள் தர விருப்பப்படுகிறேன். கேள்'' என்று அன்புடன் கூறியதைக் கேட்டு தசரத சக்ரவர்த்தி வியந்து, முன்பிருந்த சினம் மாறி, இருகரம் கூப்பி தொழுதபடி கண்ணீர் மல்க சனீஸ்வர பகவானிடம் பேச ஆரம்பித்தான்.

'' பகவானே தாங்கள் கருணை கூர்ந்து தரும் இரண்டு வரங்களும் எனது நாட்டு மக்களுக்காவே நான் பெற்றுக் கொள்ள இருக்கிறேன். முதலா வது தாங்கள் ரோகிணியைப் பிளந்து செல்லாமல் இருத்தல் வேண்டும்...இரண்டாவது, ஒருவேளை காலக்கதியால் ரோகிணியைக் கடந்து செல்வ தானால், எனது அயோத்தியில் பன்னிரண்டு ஆண்டுகள் வற்கடம் ஏற்படாமல் இருக்க அருள்பாலிக்க வேண்டும்.''

''தசரதா! சுயநலமில்லாமல் நீ கேட்டுக் கொண்டதற்கிணங்க நானும் அவ்வாறே நடப்பேன் என்பது உறுதி!''

சனீஸ்வர பகவானின் அன்பு மழையில் நனைந்த தசரத சக்ரவர்த்தி பகவானைக் குறித்து ஸ்தோத்திரம் செய்தான். அந்த ஸ்தோத்திரத்திற்கு மகிழ்ந்த சனீஸ்வர பகவான் மேலும் பல அருள்களை வழங்கிதசரத சக்ரவரத்தியை அயோத்திக்கு அனுப்பி வைத்தார்.

தசரத சக்ரவர்த்தியால் சொல்லப்பட்ட ஸ்தோத்திரத்தை சொல்லி, சனி பகவானை வழிபடுகிறவர்களுக்குத் தோஷங்கள் விலகும். சுபபலன்கள் உண்டாகும். கோசாரத்திலும், தசையிலும், புத்தி-அந்தரத்திலும் அவர்களுக்கு நன்மைகளே கிடைக்கும்.

இவ்வாறு நாரத மகரிஷிக்கு இந்தக் கதையைச் சொல்லி முடித்தார் உமா மகேஸ்வரப் பெருமான்.

நன்றி. ''ஞானபூமி''

With Compliments

from

ELLAWALA EXPORTS (PVT) LTD

14, CARWILL PLACE
COLOMBO 03
SRI LANKA

மனத்தகத்தான்

டாக்டர். க.வேலாயுதபிள்ளை,
M.B.B.S. (Ceylon) D.B. (Toronto) DHP (Liverpool)
தலைவர், கொழும்பு விவேகானந்த சபை.

''மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங் கொன்றைப் போதினுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத் தான் கயிலாயத் துச்சியுள்ளான்
காளத்தி யானவனென் கண்ணுளானே''

இத் தேவாரம் திருநாவுக்கரசு நாயனாரால் அருளப் பட்டது. இத் தேவாரத்துள் இறைவனை எவ்விடத்தும் உள்ளானாகவும் பார்க்கும் இடமெங்கும் ஒரு நீக்கமற நிறைந்த பொருளாகவும் எமது நாயனார் காணுந் தன் மையைக் குறிக்கின்றது. காண்பவையும் நினைப்பவையும் இறைவனாக இருந்தாலன்றி இவ்வுயர் நிலை கிட்டாது. இது இவ்வடியாரது ''நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்'' என்றமற்றை ஒரு வாக்கால், இவரது நெஞ் சத்துள் இறைவனுக்கன் றி வேறெவருக் கோ எப் பொருட் கோ இடமில் லை என்ற நிலையைக் குறிக்கின்றது. இவரின் நெஞ்சகத்தே நிறைந்தது ஒரே ஒரு பொருள். அது ஒரு தனிப்பொருள். அதுவே சிவபெருமான் என்ற பரம்பொருள். இந் நிலையில் இறைவனைச்சிக்கெனப் பிடித்துத் தம் உள்ளத்துள்ளே, ஒருவரும் அறியாவண்ணம் தான் சிறைவைத்துள்ளதாகவும் வாசேப் பெருந்தகை,'' ''ஒருவருமீங் கறியா வண் ணம் என் னுள்ளத்துள் ளே யொளித்து வைத்த சிறையானைத் திருநாகேச்சரத்துளானை'' என் பதாற் தெரியத் தந்தது மன் றித் தேடிக் கண் டு கொண் டேன்'' திருமாலொடு நான் முகனுந் தேடித் தேடொணாத் தேவனை என் னுள் ளே தேடிக் கண் டுகொண் டேன் என்று இறுமாந்து கொண்டார். இது மட் டுமா! பிறிதோர் தேவாரத்துள், திருமாலும் தான்முகனும் என்னுள்ளே இருக்குந் தேவனை எப்படிக் காண்பர் என்று வீராவேசமுங் கொண்டார்.

நினைப்பவர் மனங் கோயிலாக் கொண் டவர் சிவபெருமான். ஒவ் வொருவருடைய மனமுமே அவரவரை வழி நடத்திச் செல்கிறது. அந்த மனத் திலே இறை நினைவு மட் டுமே இருக்குமானால், நம்மை வழி நடத்திச் செல்வதும் இறைவனே யாவான். இதன் பொருட் டே எக்காரியமும் நாம் செய் யத் தொடங் கும் போதும் இறை வழிபாடு செய் தே ஆரம்பிக்கிறோம். இறை வழிபாட்டுடன் ஆரம்பிக்கும் எச் செயலிலும் நிறைவும் நீதியும் நிரம்பியிருக்கும் என்பது சிவனடியாரின் துணிபு. இறைவனை மனிதிற் கொள்ளாது இயற்றப்படும் எக்காரியத்துள்ளும் உய்தி கிட்டாதென்பதும் இவர்களின் நம்பிக்கை இதனாற்றான் அப்பரடிகள்.

''நீதியை நிறைவை மறை நான்குடன்
ஓதியை ஒருவருக்கு அறிவொண்ணாச்
சோதியைச் சுடர்ச் செம்பொனின் அம்பலத்
தாதியை அடியேன் மறந்துய்வனோ''

என்றார். மனம் போனபோக்கெல்லாம் போகின்றது. புன்னெறியிலும் நம்மை இட்டுச் செல்லும், நல்வழியிலும் நம்மை நடத்தும். நல்வழியே நாம் நடந்து கொள்ளத் துணை திற் பது, மாசு கடிந்த மனத்தே இறைவனுக்கு இருப்பிடமமைக்கும் நிலை ஒன்றே. இதனாலேயே,

புன்னறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி ஒழுகச்செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடியனாக்கி இருவினை நீக்கி ஆண்ட
பன்னிரு நடந்தோள் வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி
போற்றி''

எனக் கச்சியப்ப சிவாசிரியர் பாடினர். புலன்களைத் தடுத்து உறுதியாய் நிலைப்பாடு செய்வது மனமாகும். அந்த மனமாகிய உள் ளத் திற் கும் உறு தி வேண் டப் படின் உள் கவேண் டி ய பொருள் இறைவனே. இதனை மாணிக் கவாசக சுவாமிகளின் ''மாறி நின் றெனைக் கெடக்கிடந் தனையையெம் மதியிலி மட நெஞ்சே'' என்ற வற்றாலும், ''மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின் வழியடைத்தமுதே ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி உள்ளவா'' என்பவற்றாலும் நமக்குத் தெரியத்தந்தமை உறுதிப்படுத்தும்.

''இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்
வாழ்க''

என்று மணிவாசகர் மேலுங் கூறுகிறார். ''சிந்தனை நின்தனக்காக்கி நாயினேன் தன் கண்ணினை நின் திருப்பாதப் போதுக்காக்கி வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்கு உன் மணிவார்த்தைந் காக்கி ஐம்புலனுமார வந்தென் உள்ளே புகுந்த இச்சைமாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத் தந்தனை''

இவற்றால் திருநாவுக்கரசர் நிலையும் மாணிக்கவாசகர் நிலையும் ஒன்றாக அமைவதையும் அவ்விருவரும் தத்தமது உள்ளக் கோயிலிலே இறைவனை அலங்கரித்தமையும் நாம் காண்கிறோம். இறைவனோடு அத்துவித நிலையில் நின்று அந்தமில்லா ஆனந்தம் பெற்றவர்கள் இவ்வடியவர்கள். இவர்களைப் போன்றே மார்க்கண்டேயரும் இறைவனுடன் ஐக் கியப் பட்ட நிலையில் தான் வேறு இறைவன் வேறு என்ற தனித்துவம் நீங்கப் பெற்று அத்துவிதமாய் இருந தார். அத் துவிதநிலை மனத்தாற் பெறுவதேயன்றி உட லாற் பெறுவது ஒன்றல்ல, இந நிலையில் மார்க்கண்டேயரைத் தகர்க்கவந்த மறலி இறை வனையே தாக்குவதாக அமைந்ததால் இறைவனால் உதைக்கப்பட்டான்.

உள்ளத்தைத் தூய்மை செய்து நையாத மனத்தினை நைவித்து அழுதால் இறைவனை அடையலாம் என்பது ஆன்றோர் கூறுவதாகும் ''வினையேன் அழுதால் உனைப் பெறலாமே'' என்ற மணிவாசகம் இதனை உணர்த்துகின்றது. மேலும்,

''நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுகளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்பர் அவர் தம்மை நாணியே''

என்ற தேவாரத்தாலும் அறியலாம்,

C. MOOLCHAND

375, GALLE ROAD,
COLOMBO 03,
SRI LANKA.

இதனையே விபுலானந்த அடிகள்

''வெள்ளைநிற மல்லிகையோ வேறந்த மாமலரோ

வள்ள லடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ?

வெள்ளைநிறப் பூவுமல்ல வேறந்த மலருமல்ல

உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது''

என்பதாற் தெரியத் தந்தார். உள்ளக்கமலத்தே இறைவனைக் கொலுவிருக்கச் செய்வோரே இறைவனின் உண்மைத்தொண்டரவர். இதனைச் சேக்கிழார் சுவாமிகள்,

''நின்றாலும் இருந்தாலுங் கிடந்தாலும்

மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்

ம ாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை

கு உணர்வுடையார் தொண்டராங் குணமிக்கார்''

என்ற திரு மூலநாயனார் திருமந்திரத்துள் இக்கருத்துக. ா

''உள்ளம் பெருங் கோயில் ஊனுடம் பாலயம்

வள்ளற் பிரானார்க்கு வாய் கேர புரவாசல்

தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்

கள்ளப் புலனைந்துங் காளாமணி விளக்கே''

என்பதால் எம்மகத்தே புகுத்தியுள்ளார்.

இத்தருணத்திலே உள்ளத்திலே கோயில் சமைத்து அங்கே இறைவனை எழுந்தருளச் செய்ததாகப் பெரியபுராணத்தில் இயம்பப்பட்ட பூசலார் நாயனாரைப் பற்றியும் சிறிதாவதல் சிந்தித்தல் சாலவும் பொருந்தும் . சேக்கிழார் சுவாமிகள் பூசலார் புராணத்தை

''அன்றினார் புரமெரித்தார்க் காலயம் எடுக்க எண்ணி

ஒன்றும் அங் குதவாதாக உணர்வினால் எடுக்குந் தன்மை

நன்றென மனத்தினாலே நல்லஆ லயந்தான் செய்த

நின்ற ஊர்ப் பூச லார்த்தம் நினைவினை உரைக்க

லுற்றாம்''

எனவே உள்ளத்தே கோயில் சமைத்த இவ்வடிகளை தினையத் தந்தார். பண வலிமையற்ற பூசலார் மனத்தினாற் பணஞ் சேர்த்து மனதினாற் இட்டமிட்டு மனதினாற் கோயில் வரைந்து அதனை மனதினாலே நிறைவேற்றி மனத்தினால் சுபவேளை தேர்ந்து சிவபெருமானை மனதினாற் பிரதிஷ்டை செய்ய முடிவு செய்தார். அந்தச் சுபவேளையே தான் சமைத்த கற்கோயிலில் சிவபெருமானை எழுந்தருளச் செய்ய பெருவிழா எடுக்க முயன்றான் பல்லவ அரசனான இராசசிம்மன் சுப வேளைக்கு முன் இரவிலே பல்லவேந்தனின் கனவில் தோன்ற எம்பெருமான் கூறியவற்றை சேக்கிழார் மொழியிற் கூறியவை பின்வருமாறு,

''நின்ற ஊர்ப் பூசல் அன்பன் நெடிதுநாள் நினைந்து செய்த நன்று நீ டால யத்து நாளை நாம் புகுவோம்; நீ இங்கு (கு) ஒன்றிய செயலை நாளை ஒளிந்து பின் கொள்வாய்'' என்று கொன்றைவார் சடையார் தொண்டர் கோயில் கொண்ட

ருளப்போந் தார்

இறைவன் தன்தொண்டரை உலகறிய எடுத்து விளக்கச் செய்த திருவிளையாடல் இதாகும். இந் நெறி

''கற்போலும் நெஞ்சம் கசிந்துருகக் கருணையினால்

நிற்பானைப் போலஎன் நெஞ்சின் உள்ளே புகுந்தருளி

நற்பாற் படுத்தென்னை நாடறியத் தான் இங்ஙன்

சொற்பால தானவா தோள் நோக்கம் ஆடாமோ''

என்ற திருவாசகத்திலும் அமிழ்ந்திருப்பது காணலாம்

பல்லவேந்தன் கண்விழித்தெழுந்து பூசாலர் அமைத்த ஆலயத்தைக்காணச் சென்று காணமுடியா நிலையிற் பூசலாரிடம் சென்று அன்று இறைவன் எழுந்தருளும் அவர் அமைத்த ஆலயத்தைக் காட்டுமாறு வேண்ட, பூசலார் தம் உள்ளக் கோயிலை விபரித்தார். அரசன் பூசலாரின் அடிகளை வணங்கி பூசலாரின் அன்புத்திறனையும் இறைவன் பூசலாரின் பக்திநெறிக்குக் கொடுத்த உயர்வையும் நினைந்து மெய் சிலிர்ந்தான்

''பொய்யா நாவதனால் புகழ்வார்கள் மனத்தினுள்ளே

மெய்யே நின்றெரியும் விளக்கே ஒத்த தேவ பிரான்

செய்யா னுங்கரிய நிறத்தானும் தெரிவரியான்

மையார் கண்ணியொடு மகிழ்வான் கழிப் பாலையதே''

என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரமும், பத்தியால் இறைவனைப் பற்றியே திருப்புகழ்பாடும் அடியவர் மனத்தே கன்றாபூர் நடுதறியைக் காணலாம் என்பதையே நமக்குத் தெரியத் தருகின்றது.

''வேறு தோளியங்கள் விட முண்ட கண்டன் மிக நல்ல வீணை தடவி மாசலு நிங்கள் கங்கை முடிமேலணிந் தென் உளமே புகுந்த அதனால்'' எனத் தொடங்குங் கோளறு பதிகத்தின் ஒவ்வொருபாடலிலும், உள்ளமே புகுந்த அதனால் சிவனடியாரை நாளுங் கோளும் ஏனைய கெடுதலைத்தரக் கூடியவையும் துன்பமியற்றா என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டமை, உள்ளகக் கோயிலிலே இருக்கும் இறைவனால் நாம் பாதிப்பின்பெறுவோம் என்ற கருத்தைப் புலனாக்கவே சமணருடன் வாதிற்குச் செல்லும் போதும் திருஞானசம்பந்தர், தம் மனத்தகத்தே நிலவும் பரம்பொருளையே, ''சித்தனே திரு ஆலவாய் மேவிய அத்தனே யஞ்சலென றருள்செய்யெனை'' என வேண்டினார்.

அன்பர்தஞ் சிந்தையுள் உறைபவன் இறைவன், அவன் மனத்தகத்தான் என இவற்றாற் றிடமுடன் கொள்ளலாம். இதனாலேயே யோகமாமலையும், ''அருந்தவர் நெஞ்சில் நிசிக்குங் கரும்பாம் பெருவாழ்வு'' என இறைவனைவழுத்தினார் அவர் ''ஆளான அன்பர் அகநிறைந்த பாக்கியமே!'' என்றும் ''ஆளான மெய்யடியார் அகங்கோயில் கொண்டவனே'' என்றும் ஆண்டவனை அழைக்கின்றார். யோகர் சுவாமிகள் ''அன்பர்தஞ் சிந்தையுள் உறைவானே, அரகர சிவ சிவ மறையோனே''என்று நற்சிந்தனையுள் நம்மைப் பிராத்தனைக்கு அழைத்தமையும் நினைவிற் கொள்வோம்.

ஆலயம்

ஆலயம் என்பதை ஆ+லயம் என்று பிரிக்கலாம். "ஆ" என்பது ஆன்மா என்றும், லயம் என்பதற்கு சேருவதற்குரிய இடம் என்றும் பொருள்.

ஆகவே ஆல்யம் என்பதற்கு, கடவுள் திருவடியில் ஆன்மா லயித்திருப்பதற்குரிய இடம் என்று பொருள்.

ஆலயத்தை 'கோயில்' என்றும் சொல்வது மரபு.

கோ+இல்=கோயில். ''கோ'' என்ருல் கடவுள் என்றும், ''இல்'' என்ருல் தங்குமிடம் எனவம் பொருள்.

ஆகவே, கடவுள் நிலைத்திருக்கக் கூடிய இடத்திற்குக் கோயில் எனப் பெயர்.

ஆதாரம்: ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்.

With Compliments

from

STONE "N" STRING (PVT) LTD

30, DE VOS AVENUE,
OFF DUPLICATION ROAD,
COLOMBO 04,
SRI LANKA.

WITH BEST COMPLIMENTS

FROM

MANCO SUNDRY STORES

158, BANKSHALL STREET,
COLOMBO - 11.
SRI LANKA.

WITH BEST COMPLIMENTS

FROM

SILVER LINE AGENCIES LTD.

(IMPORTERS & DEALERS IN BRAND NEW AND
RECONDITIONED VEHICLES)

No. 257 G, KATUGASTOTA ROAD,
KANDY.
SRI LANKA.

Telephone : 08–25631
Fax : 32052

BEST COMPLIMENTS

FROM

MIDDLE ASIA TRADING COMPANY PRIVATE LTD.

(IMPORTERS OF RECONDITIONED VEHICLES)

No. 31, FIRST CROSS STREET,
COLOMBO - 11,
SRI LANKA.

Phone : 422047
Fax : 508640

WITH BEST COMPLIMENTS

FROM

ALHAJ. A. R. M. ABDUL CARDER

AUTHORISED IMPORTERS & DISTRIBUTORS FOR TATA VEHICLES

105, AMBAGAMUWA ROAD,
GAMPOLA,
SRI LANKA.

SHOW ROOMS :-

"TATA" HOUSE
579, PERADENIYA ROAD,
KANDY,
SRI LANKA.

Telephone : 08 - 52425
Fax : 94832294

WITH BEST COMPLIMENTS

FROM

SUBRAMANIAM & CO.

(IMPORTERS, EXPORTERS, GENERAL MERCHANTS, COMMISSION AGENTS & ESTATE SUPPLIES)

No. 198, 4th Cross Street,
Colombo 11.
Sri Lanka

Telephone : 23844, 545096
Cables : " MONEYCO "
Telex : 21692 RAHMAN CE

WITH BEST COMPLIMENTS

OF

VICTORY AUTO CENTRE

(IMPORTERS & DEALERS IN QUALITY MOTOR VEHICLES FROM JAPAN)

No: 272/B, High Leval Road,
NUGEGODA,
SRI LANKA.

Telephone : 552995, 5111311
Celtell : 444528
Facsimile : 556868

WITH BEST COMPLIMENTS

FROM

LAKSIRI SEVA (PVT) LTD.,

31, St. Anthony's Mawatha, Colombo 3. Sri Lanka.
Tele : 575576, 574180, Telex : 22082, 22291 X Point Ce.
Attn : Lakseva Fax : 574180

U. P. B. Bonded Warehouse
235/3, Avissawella Road,
Orugodawatta.

Bankers : Bank of Ceylon
Bank of Credit and Commerce

Laksiri Worldwide Freighters
Dubai
Halila Freight
P. O Box : 52337
Bur Dubai
UAE
Tel : 512264/515626
Fax : 520341

Abudhabi - Tel : 729478
Sharjah - Tel : 393829
Ajaman - Tel : 455935

Kuwait
Hameed Essa Al Rujaib Est.
Muththahida Complex,
37, Ground Floor,
P. O Box 23775
13098 Safai
Kuwait.
Tel : 2468741, 2468742
Fax : 2405936

Bahrain

Sara-
P. O Box 5165
Manama
Bahrain
Tel ; 293161

London
Glen Carriers Ltd.,
14, Allied Way,
off Warple Way,
Acton,
London W3 ORO
Tel : 01 - 7408379,
7490595
Fax : 01 - 7404229

Saudi Arabia
Al Ekhwa For
Travel & Cargo
Sahary center
Palestine Street,
P. O. Box 5853
Jeddah 21432
Saudi Arabia
Tel : 6601021, 6659690
6605614
Fax : 6694753

Swallow Cargo Services,
P. O. Box 15353
Riyadh 11444
Saudi Arabia
Tel : 4028757
4022400
Fax : 4028257

ABT Cargo
P. O. Box 2631
Riyad 11461
Saudi Arabia
Tel : 4793960
Fax : 4774376

Qatar
Concord Cargo
P. O. Box 8180
Doha Qatar
Tel : 424131
Fax : 423959

WITH BEST COMPLIMENTS

FROM

AGRO MARINE LIMITED
LANKA MARINE EXPO (PVT) LIMITED
AGRO PAK LANKA (PVT) LIMITED

HANDALA, WATTALA.
SRI LANKA
Telephone : 530496, 531131
Fax : 531131

WITH BEST COMPLIMENTS

FROM

ELECTRO SERV (PVT) LTD.

- ★ Plug in Basbar Trunking
- ★ Motor Control and Starters
- ★ Complete Automation Priducts
- ★ Programmable Logic Controllers

235/2, Galle Road,
Colombo 11.
Sri Lanka

Telephone : 580287, 582484

வெளிவிழாப் போட்டிகள்

கட்டுரைப் போட்டி முடிவுகள்

கீழ்ப்பிரிவு :

தலைப்பு: "இந்து சமயக் கடவுளர்"

முதலாம் பரிசு	(ரூ 2500/-)	செல்வி	மோகனா பேரம்பலம்	- யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
இரண்டாம் பரிசு	(ரூ 1500/-)	செல்வி	திருலோக ஜெயந்திதிருநாவுக்கரசு	- கொ/சைவ மங்கையர் வித்தியாலயம்
மூன்றாம் பரிசு	(ரூ 1000/-)	செல்வி	கலாரூபி யோகநாதன்	- யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

மேற்பிரிவு

தலைப்பு: "அறிவியல் ஆய்வுகளின் பின்னணியில் இந்து சமயத் தத்துவங்கள்"

முதலாம் பரிசு	(ரூ 5000/-)	செல்வன்	திருவாவுக்கரசு திவாகரன்	- யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை
இரண்டாம் பரிசு	(ரூ 2500/-)	செல்வி	சாந்தி ஜெயகிருஷ்ணன்	– கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி
மூன்றாம் பரிசு	(ரூ 1500/-)	செல்வி	பூர்ணிமா குழந்தைக் குமரன்	- கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி

அகில இலங்கை ரீதியில் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் பங்குபற்றிய பின்வரும் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்க்கும் அவர்களின் அதிபர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக!

1. இ. கி. ச. இந்துக் கல்லூரி, திருகோணமலை
2. ஸ்ரீ சண்முக வித்தியாலயம், திருகோணமலை
3. இரத்தினபுரி தமிழ் மகாவித்தியாலயம், இரத்தினபுரி
4. மட்/ கோட்டைக் கல்லாறு மகா வித்தியாலயம், கல்லாறு
5. கார்மேல் பாத்திமாக் கல்லூரி, கல்முனை
6. யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
7. யா/ யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை
8. ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை
9. யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வல்வெட்டித்துறை
10. யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக் கோட்டை
11. யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி
12. யா/ இணுவில் சைவப் பிரகாச மகாவித்தியாலயம், இணுவில்
13. யா/ மகளிர் வித்தியாலயம், சாவகச்சேரி
14. யா/ இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்
15. கொ/ கொட்டாஞ்சேனை அரசினர் தமிழ் வித்தியாலயம்
16. கொ/தொண்டர் வித்தியாலயம்
17. கொ/ சைவ மங்கையர் வித்தியாலயம்
18. சாந்த பீற்றர்ஸ் கல்லூரி, கொழும்பு
19. கொ/ இந்துக் கல்லூரி
20. கொ/ இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி
21. மகளிர் கல்லூரி, கொழும்பு
22. பரி. சாந்த கிளயர் மகளிர் மகாவித்தியாலயம், கொழும்பு

UNIQUE GEM STONES LTD

446, R. A. DE MEL MAWATHA,
(DUPLICATION ROAD)
COLOMBO 03
SRI LANKA.

TELEPHONE : 573267
FAX : 94 1 573480

அகில இலங்கை ரீதியில் பாடசாலைகள் மத்தியில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் மேற்பிரிவில் முதல் பரிசான ரூ 5000/- பெறும் கட்டுரை.

செல்வன் திருநாவுக்கரசு திவாகரன்
யாழ்/யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

அறிவியல் ஆய்வுகளின் பின்னணியில் இந்துசமயத் தத்துவங்கள்



அறிவியல் என்பதற்கான வட மொழிப் பதம் ''விஞ்ஞானம்'' விஞ்ஞானம் என்றால் மேலான ஞானம் (வி+ஞானம்) என்று பொருள். இம்மேலான ஞானமே இந்து மதத்தின் சாரம். இந்துமதத்தின் பிராமண நூல் வேதம். வேதம் என்றால் அறிவு. எமது சமயம் அறிவு பூர்வ மானது. அது ''அன்பே சிவம்'' என்று மட்டு மல்ல ''அறிவே மதம்'' என்றும் வலியுறுத்தும். இவ்வாறு உண்மையான ஞானத்தின் (மெய்யியல்) அடிப்படையில் மேலான ஞானத்தை (அறிவியல்) வளர்த்து உருவாக்கப்பட்ட வையே எமது சமயத் தத்துவங்கள். உலகில் உயிர்கள் நிலை பெற்ற காலம் தொட்டு இயற்கையோடு ஒட்டி னவையாக இவை வளர்ந் துள்ளன. காலந்தோறும் விஞ்ஞானக் கொள் கைகள் மாறுகின்றன. மனித சிந்தனைகள் புத்தாக்கம் பெறுகின்றன; பரிணாம வளர்ச்சியால் மனிதனே மாறலடை கிறான். ஆயின் இந்து மதம் இவற்றுக் கெல் லாம் வளைந்து கொடுக் கின்றது; அதேவேளை நிமிர்ந்தும் நிற்கின்றது.

இவ்வெற்றிக்குக் காரணமான இந்துமதத் தத்துவங்களுட் சிலவற்றைப் பின்வரும் அம்சங்களைக் கருத்திற் கொண்டு அறிவியல் ரீதியில் ஆராய்வோம்.

1) உலகப்படைப்பு
2) அணு விஞ்ஞானம்
3) பௌதிக விஞ்ஞானம்
4) வான சாஸ்திரம்
5) பரிணாம வாதம்.
6) மனித நாகரீக வரலாற்றுப் பின்னணி
7) மனித உளவியல் விஞ்ஞானம்
8) விஞ்ஞானம் விளக்கும் சில விந்தைகள்
9) அறிவியல் கூறும் அடிப்படை உண்மை

இவ்வுலகும் அதன்கண் வாழ்கின்ற உயிர்களும் எவ்வாறு தோன்றின? எப்போது தோன்றின? எந்நிலையிற் தோன்றின? இவ்வினாக்களுக்கு விடைகளாகப் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இவற்றைச் சுருக்கிப் பெறும் பொதுமைப் பாட்டையும், இந்துமதம், கூறுவதையும் ஒப்பிடுவோம்.

''அண்ட வெளியில் அக்கினிக் கோளங்களாக அமையும் சூரியரைத் தலைமை யாகக் கொண்டு ஐலகோ ளங்கள் (கிரகங்கள்) சுற்றி வரும். இவ் வேளை இவற்றிடையே ஏற்படும் குளிர்ச்சி நெகிழ் ச்சி முதலிய வற்றாலும், திடப்பொருட்களின் மூலவஸ் துவாம் உப்புச் சத்தாலும், சூரியனின் ஒளி உஷ்ணத் தாக்குத லாலும் பிராண வாயுச் சேர்க்கையாலும் கோளங்களின் புறப்பாகத் தில் மலினப் பிண்டம் (மண்) ஒன்று சேர்ந்து நீர் மட்டத்திற்கு மேல் எழும் பிற்று.''

இதுவே புவித்தோற்ற அமைவு பற்றிய அறிவி யற் பொதுமைப்பாடு. மேற்கூறிய பூதபேத செயல்களின் முழு மூல தத்துவத்திற்குத் தான் ''அருவம்'', ''அண்டம்'' எனப் பொருட் பொருத் தமுறுமாறு ''பிரம்மம்'' என இந்துமதம் பெயரிட் டது. இது ''பிரமன்'' எனும் படைத்தல் செய் யும் மூர்த்தியாக உருவாக் கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் புவியில் பிரகிருதிகள் உற்பத்தி யாகின. இதைப் பிண்டம் (உருவம்) எனக் கொண்டு ''விஷ்ணு'' என வழங் கினர். புவி உருவமுடை யது. இங்கு ''சர்வம் விஷ்ணுமயம்'' என்ற கூற்றுச் சிந்திக்கத் தக்கது. இப் புவியே உயிர்க் கோளத்திற்குக் காப்பு. காக்கும் தொழில் விஷ்ணுவுக்கே வழங்கப் பட்டது. இப்பிண்டம் மூலம் ஜீவணுக்களை உண்டு பண்ணுமத்தத்துவத்திற்கு ''அருவுருவம்'' ''ஜீவன்'' என்ப் பொருள் கொண்டு ''சிவம்'' என்று இந்துமதம் கூறும் உலகம் நீர்ப் பிரளய காலத்தில் (ஊரி) ஜீவன் (உயிர்) வெளிப் படாமலிருப் பதும் பின் உயிரினங்களாக வெளிப்படுவதும் சைவ சித்தாந்தம் கூறும் சிவனுடைய சொரூப, தடத்த இலக்கணங்களுடன் ஒப்புநோக்கிக்

With Compliments

from

RAINBOW GEMS INTERNATIONAL LTD

DEHIGAHAPITIYA,
GETAHATTA,
SRI LANKA.

கூர்ந்தது சிந்திக்கற்பாலன. இவ்வடிப்படையிலேயே எமது மதத்தின் முப்பெரும் கடவுட் கொள்கை உருவாகியது.

இனி, வேறொரு வகையிற் பார்ப்போம். இன்றைய அறிவியலில் அணு முக்கிய இடம் பெறுகின்றது.

''அவனின்றி அணுவும் அசையாது'' என்கிறது எமது மதம். இந்த ''அவன்'' என்பது யாரை? அணுவினுள் நியூத்திரன், புரோத்தன், இலத்திரன், என மூன்று துணிக்கைகள் உள. இவற்றை விஷ்ணு, சிவன் பிரம்மா எனக் கொண்டால் ஒரு பொருத்தப்பாட்டை உணரலாம்.

இவ்வாறு மூலப் பொருட் சித்தாந்தம், உயிரின்தன்மை, தெய்வத்தன்மை மாயாகன்மாணவங்கள் ஆகியவற்றுடன் அணுக் கொள்கை, அமைப்பு, கருக்கவர்ச்சி, அணு உறுதி, தாக்கங்கள் என்பவற்றை ஒப்பிட்டு ஆராயலாம். சடத்துவம் மூலம் இறைவனுடன் இணைந்த உயிர் ஏனையவை மலபந்தம் பெற்ற உயிர்களை ஒப்பவை. இறைவனை அடைவதற்கு அவை தனது கன்மங்களான இலத்திரன்களைத் துறந்தும், பெற்றும் தாக்கம் எனப்படும் வாழ்க்கையில் ஈடுபட வேண்டும். தாக்குதிரன் குறைந்த உலோகமொன்றான பாசத்தைப் பற்றிய ஒரு சேர்வை தாக்குதிறன் கூடிய இறைவனால் பிறிதோர் மூலகத்தினால் இடம்பெயர்க்கப்படும்.

இனி அணுக் கருவை சிவமாகவும், இலத்திரனைச் சக்தியாகவும் உருவகிக்கலாம். அணுவிற்கு ஆதாரம் கரு. உலகிற்கு ஆதாரம் சிவம்/ அணு இயங்குவது இலத்திரனால். உலகு இயங்குவது சத்தியால்/ இச்சிவசக்தித்தத்துவம் எமது சமயத்தின் உயிர்நிலை. விஞ்ஞானிகள் கூட உலகிலுள்ளவற்றை

1)சடப்பொருள்

2) சத்தி

என இரண்டாகப் பகுப்பர். சடத்துடன் சிவம், சத்தி சேரும் போழும் உலகு இயங்கும்.

அறிவியல் 105 மூலகங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. எதிர்காலத்தில் மேலும் பல கண்டுபிடிக்கப்படலாம். ஆயின் எம்மதம் உலகம் பஞ்ச பூதங்களால் ஆனது எனச் சுருக்கமாக வரைவிலக்கணம் வகுக்கின்றது.

நிலம்- திண்ம நிலையிலுள்ள பொருட்கள் அனைத்தும்
நீர்- திரவப் பொருட்கள்
வாயு- வாயுக்கள்
தீ- சத்திகள் அனைத்தும்
ஆகாயம்- யாதும் அற்ற வெற்றிடம்

எனக் குறிப்பதாகக் கொண்டால் அற்புதமான விளக்கமொன்று அமைவதைக் காணலாம்.

இனி, நடராசரின் ஆனந்தத் தண்டவத்திற்கும், இப் பிரபஞ்சத்தில் சூரியனின் நிலை, கோள்களின் இயக்கம், உடுக்களின் அசைவு என்பவற்றிற்கும் இடையில் காணப்படும் சூக்குமத் தொடர்பை மறுத்தல் இயலாது. இன்று பிற கோள்கள் புவியில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக அறியப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் நவக்கிரக வழிபாட்டை ஆராய்ந்தால் புதிய உண்மைகள் பெறப்படலாம்.

எமது இதிகாசங்கள் எடுத்துரைக்கும் மகாவிஷ்ணுவின் தசாவதாரத்துடன் சார்ளஸ் மார்வினின் பரிணாமவாதக் கொள்கையை ஒப்பிடுவோம்.

முதல் ஐந்து அவதாரங்களைப் பார்ப்போம். டார்வினின் கூற்றுப்படி தசைப் பிண்டமான முக்கிய வளர்ச்சிகள் கூர்ப்புற்று நீரிலேயே அங்கிகள் முதலியன தோன்றின. இவ்வமைப்பையே மகாவிஷ்ணுவின் முதலாவது அவதாரமாகிய ''மச்சாவதாரம் (மீன்) குறிக்கின்றது. இவ்வாறு தொடர்ந்து கூர்மாவதாரம் (ஆமை), வராகாவதாரம்(பன்றி), வாமனாவதாரம் (குறள் வடிவான யானை அல்லது கரடி), நரசிம்ம அவதாரம் (மனீதச்சிங்கம்) என்பன பரிணாம வளர்ச்சியின் பல்வேறு படிநிலைகளைக் கடந்து செல்கின்றன. தேனனைய திருவாசகம் மணிவாசகப் பெருமான் தனது கூற்றில்

''புல்லாகிப், பூடாகிப், புழுவாகி, மரமாகிப், பல்மிருகமாகிப், பதவையாய்ப் பாம்பாகிக் கல்லார் மனிதராய்ப்''

என்பதுவும் நவீன அறிவியல் ஒப்புக்கொள்ளும் உயிர்களின் பரிணாம வளர்ச்சிப் பங்கில் அமைந்திருப்பது நினைந்து இன்புறத்தக்கதாகும்.

மேலும் வில்வீரான இராமன், இடையனான கண்ணன், கலப்பை ஏந்திய பலராமன் ஆகிய பாத்திரங்கள் மனித நாகரீக வளர்ச்சியில் வேடுவர், இடையர், விவசாயக் காலங்களைக் காட்டுகிறது. மனித நாகரிக வளர்ச்சியை ஆராயும் வரலாற்றுயசிரியர்கள் இது பற்றிக் கூர்மையாக ஆராய்ந்ததால் பல உண்மைகளை உணரலாம். இவ்வாறு இராமாயணத்தில் வரும் அனுமர் (குரங்கு மனிதன்) என்னும் பாத்திரங்களும் குரங்கு-மனித கூர்ப்புக்கும் தொடர்பு உள்ளதா? என்றும் ஆராய்ந்து பார்க்கலாம். இவ்வாறு எமது சமய உண்மைகளும், அவற்றை விளக்கும் தத்துவங்களும், ஆதித்தத்துவங்களை கூறுவதற்காக எழுந்த கதைகளும் இவை வாயிலாக உணரப்பட்டு வணங்கப்படும் இறைவனின் மூர்த்தி பேதங்களும் முற்றுமுழுதாக அறிவியல் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளன என்பது வெள்ளிடைமலை.

இந்து சமயம் ''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளர்ந்த மறைமொழி மந்திரம்'' என்று வரைவிலக்கணம் வருகிறது. இம்மறைமொழி உள்ளத்தை இறைவனின் பால் இசைவிக்கும் என்றும், வேண்டியதைத் தரும் என்றும் கூறப்படுகிறது. இன்றைய மனித உளவியல் விஞ்ஞானிகளும் இதை ஏற்கின்றனர். குறித்த இவ்விடயத்தில் எம்சொல், செயல், நினைவு மூன்றும் ஒருமித்து தொடர்ச்சியாக ஈடுபடும்பொழுது நாம் அதில் லயித்துவிடுகிறோம். அவ்விடயம் சம்பந்தமான காரியங்களை ஆற்ற எமக்குப் பிறக்கும் புதிய மனோபலமே காரியத்தின் வெற்றியைப் பெரும்பாலும் தீர்மானிக்கும் என அவர்கள் கூறுவர். இதனால் இந்து மதம் பூசை வழிபாடு. விக்கிர வழிபாடு என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கான காரணம் புலனாகின்றது.

இனி, எமது சமய நடைமுறைகள் பல இன்றைய அறிவியலாளருக்கு ஆச்சரியம் விளைக்கின்றன. ஒரு உதாரணங்களை இங்கே பார்ப்போம். திருநீறு பூசுதல் ஒரு சைவ நடைமுறை இத்திருநீரு உடலுக்கு தீங்கு பயக்கும்

With Compliments

CADILLAC GARMENTS LTD.,

EXPORTERS OF QUALITY GARMENTS

111/2 STATION ROAD, ANGULANA,
MORATUWA,
SRI LANKA.

TELEPHONE : 605291, 607443, 607445

அறிவியல் ஆய்வுகளின்....

நச்சுக் கதிர்களைத் தன்னகத்தே அடக்கி உடலைப் பாதுகாக்கும் என அறியப்பட்டுள்ளது. ஒரு நாட்டில் அணு ஆயுத உற்பத்திக் கிடங்கேயே புலனாய்வாளருக்குத் தெரியாது சாணத்தினால் பாதுகாத்தார்களாம். சூரியவழிபாடு இந்து மதத்தின் ஒரு கூறு. காலையும், மாலையும் சூரிய வழிபாடும் யோகாசனப் பயிற்சியும் செய்வதனால் எமது கண்ணின் தூரப்பார்வை பார்க்கும் ஆற்றல் விருத்தியாகின்றது என்றும், சூரியனின் இளங்கதிர்களால் உடலில் கிருமிகள் அழிக்கப்படுகின்றது என்றும், உடலில் விற்றமின் ''டீ'' தொகுக்கப்படுகின்ற தென்றும் இன்று அறியப்பட்டுள்ளது. இவை இந்து சமயப் பெருமைக்குச் சில எடுத்துக்காட்டுகளாகும்.

இனி சைவ சித்தாந்தத்தின் உயிர்நாடி ''சற்காரியவாதம்'' எனப்படும் ''உள்ளது அழியாது இல்லாது தோற்றது'' எனும் கொள்கை இதனையே பிற்காலத்தில் ''லவொய்சியர்'' என்ற விஞ்ஞானி

''தாக்கமொன்றின் மூலம் எதனையும் அழிக்கவோ புதிதாக உருவாக்கவோ முடியாது. கட்டமைப்பையே மாற்றலாம்.'' எனக் கண்டறிந்தார். இது அறிவியலின் அடிப்படை நிற்க.

''வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்'' எப்படுகிறது. பதியின் அருளிற் பசு ஆட்படப் பாசம் வலியிழக்கும்'' என்கிறது சித்தாந்தம். இவ்வொன்று கூடலை

''தாடலைபோற் கூடியவை தானிகழா வெற்றின்பக்

கூடலை நீ ஏகமெனக் கொள்'' என்பார் பண்டிதமணி இக்கூடலே அத்துவிதம். இங்கு இரண்டன்மை இல்லை; உலகமே ஒரேமயம் இதைத் ''தத்துவமசி'' (''அந்த பிரம்மம் நீயே'') என வேதோபநிடதம் விளக்கும்.

பகவான் ஸ்ரீசத்திய சாய்பாபா ''ஆத்மா ஒன்றே உள்ளது. அதை உணரப் பழகவேண்டும்'' என்கிறார். இறைவன் இவ்வாறு இருப்பதை உணராத உலகவாதிகள் ''இறைவன் இல்லை'' என்கின்றனர். இறைவன் உலகமே, உயிர்களே தன் சொருபங்களாக ஒன்றி இருக்கின்றான். பாசத் தளைகளால் நாம் ஆத்மனாகிய அவனை உணர்வதில்லை. உணர்வோமாயின் அன்நிலையில் அன்பு விஞ்சப் பேரானந்தம் சித்திக்கும் எனவே, விஞ்ஞானம் இயற்கை என்று கூறுவதையே இந்து மதம் ''இறைவன்'' என்கிறது. அது இறைவன் ஒருவனே என்கிறது. யாதொரு தெய்வமாகியும் மாது ஒரு பாகனாரே வருவார் என்கிறது. இயற்கைப் பொருட்களை வடிவமைத்து அறிவியல் செயற்கை உருவாக்குவது போல, இறைவன் பல்வேறு மூர்த்தி பேதமாகிறான். இது அறிவியலுக்கும் இந்துமெய்யியலுக்கும் பொதுவான அடிப்படை உண்மை.

இதுகாறும் கூறியவை கைமண்ணளவு உதாரணங்களே. எனின் இந்துமத அறிவியல் உலகளவிலும் பரந்தது. அது அள்ள அள்ளக் குறையாத அமுத சுரபி போன்ற அறிவியற் சுரங்கம். அறிவொளி பரப்பும் அரிய தத்துவங்களைக் கொண்ட இந்துமதம் என்றும் நந்தா விளக்கு என்பது கற்றறிந்தோரின் முடிந்த முடிவு என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

சிவன் சிரசில் சிவகங்கை

'தஷனே! ஸ்ரீ மகேஸ்வர் தம் பக்கத்திலும், சிரசிலும் இரண்டு பத்தினிகளை வைத்துக் கொண்டிருப்பதாக நீ இகழ்ச்சியாகக் கூறினாயே, அதைப் பற்றியும் நான் உனக்கு இப்போது தெளிவாகக் கூறி விளக்குகிறேன். கேட்பாயாக!

''முன்பொரு சமயம் கைலையங்கரியில் சிவமெருமானின் இருவிழிகளையும், பார்வதி தேவி பிரணய கோபத்தோடு தனது இரு கரங்களினால் பொத்தினார். அச்சமயம் இந்த உலகம் முழுவதும் இருட் கடலில் மூழ்கி விட்டது. அதைக் கண்டதும் பீதியடைந்த பார்வதி தேவி, தம் நாயகரின் கண்களைப் பொத்திருந்த தன்கைகளை எடுத்துக் கொண்டு விட்டாள். அப்போது அவளுடைய இரண்டு கைகளிலிருந்தும் அதிகமாக வியர்வை பெருகியோடியது அந்த வியர்வை வெவ்வேறாக பிரிந்து சென்று பத்துப் பிரவாகங்களாகப் பெருக்கெடுத்தோடி உலகம் எங்கிலும் வியாபித்து விட்டது. அதைக் கண்ட விஷ்ணு முதலான தேவர்கள் அனைவரும் பயந்து நடுநடுங்கி, 'நீது என்ன? காலமில்லாத காலத்தில் பிரளயம் ஏற்பட்டிருக்கிறதே! என்று மனம் வருந்தி, மஹா தேவனிடம் முறையிட்டார்கள். ''கருணாமூர்த்தியே! மஹா தேவனே! அகாலத்தில் ஏற்பட்டிருக்கும் இந்த பிரளயத்தால் அழிந்துவிடக்கூடிய ஸ்தாவரஜங்கம ரூபமாகிய இந்த உலகத்தைத் தாங்கள் தான் காத்தருள வேண்டும்! என்று அவர்கள் வேண்டினார்கள். மகாதேவனும் மனமிரங்கி அந்தத் தண்ணீர் வெள்ளப் பெருக்கை அப்படியே எடுத்துத் தம் ஜடையிலுள்ள ஒரு மயிர்க் காலில் சிறிய ஜலத் திவிலைபோல் தரித்துக் கொண்டார். இத்தகைய அற்புதத்தைக் கண்டதும் பிரும்மா, விஷ்ணு இந்திரன் முதலான தேவர்கள் அனைவரும், பரமசிவனின் திருவடிகளில் விழுந்து வணங்கி, அவரைப் பலவிதமான ஸ்தோத்திரங்களினாலும் துதித்து மகிழ்ந்தார்கள். ''பகவானே! தேவதேவனே! கௌரி தேவியின் கரங்களிலிருந்து உற்பத்தியான அதிதூய்மையான இந்த நதியானது தங்கள் ஜடையில் தரிக்கப்பட்டதால், அதைப் பார்த்தாலும், தொட்டாலும்: அருந்தினாலும் அதில் நீராடினாலும், எல்லா ஜீவராசிகளும், தங்கள் பாபங்களிலிருந்து விடுபட்டவர்களாவார்களாக! தேவேசனே! அப்படிப்பட்ட அந்த நதியின் நீரில் கொஞ்சம் எங்களுக்கு தர வேண்டும்!'' என்று கேட்டுப் பெற்றுக் கொண்டார்கள். பிறகு பிரம்மா, விஷ்ணு முதலான தேவர்கள் அனைவரும் அந்த நீரை தங்கள் தங்கள் உலகங்களில் வைத்துக் கொண்டார்கள். விஷ்ணுவின் உலகத்தில் அந்த நதி வைஷ்ணவீ என்ற பெயரில் பிரக்யாதி பெற்றது பிரும்மதேவனோ அந்த நீரை எந்நேரமும் தம் கமண்டத்திலேயே நிரப்பி வைத்துக் கொண்டிருந்தார். இந்திரன் தன் உலகத்தில் அந்த நீரை கொண்டு வைத்ததால், அது ஆகாசகங்கை என்று வழங்கப்படுகிறது. நீண்டகாலத்திற்குப் பிறகு பிரம்ம லோகத்தில், பிரும்மதேவனால் கொண்டு போகப்பட்ட அந்த நதியை, பகீரதன் பெரும் முயற்சியோடு பூமிக்கு கொண்டு வந்து சேர்த்தான். அப்போது ஏராளமான அலைகளோடு அதியாவேசமும், திமிரும் கொண்டிருந்த அந்த நதியை ஸ்ரீ சம்பு தமது ஜடையில் தரித்து வற்றச் செய்தார். அதன் பிறகு பகீரதனின் பிராத்தனைக்கு இணங்கி, அவர் அந்தக் கங்கை நதியைக் கீழேவிட்டார். உடனே அந்த கங்கை நதி அதிவேகத்துடனும் பிரும்மாண்டமான அலைகளோடும் பூமியை நோக்கிப் புறப்பட்டுச் சென்று, ஸம்சாரக் கடலிருந்து கரையேற முடியாமல் தவித்துக் கொண்டிருந்த ஸகர புத்திரர்களைக் கரையேற்றியது. அந்த கங்கையில் எவனொருவன் நீராடுகிறானோ, அவன் தன்னுடைய பாபங்களிலிருந்தும் விடுபட்டு மோஷத்தை அடைந்து விடுவான் என்பதில் சந்தேகமே இல்லை.

நன்றி: கந்தபுராணம்- அரு. ராமநாதன்.

With Compliments

from

CEYLON SAPPHIERES INTERNATIONAL

235, THIRD FLOOR,
GALLE ROAD,
COLOMBO 04,
SRI LANKA.

இந்துசமயக் கடவுளர்

அகில இலங்கை ரீதியின் பாடசாலை மாணவரிடையே நடைபெற்ற
கட்டுரைப் போட்டியில் கீழ்ப்பிரிவில் முதற்பரிசான
ரூ 2,500/= ஐப் பெறும் கட்டுரை

செல்வி மோகனா பேரம்பலம்

யாழ் மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

சிவமயம்

"ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றிலுன் நான்குணர்ந்தான் ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் எழும்பர்ச்
சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே"

மக்களாகப் பிறந்தோர் பிறப்பில் இருந்து ஈடேறுவதற்கு சமயம் இன்றியமையாதது. மனிதரின் அறிவு, குணம், நிறம், தோற்றம், கொள்கை ஆகிய வேறுபாடுகளுக்கேற்ப சமயமும் பலவாயின. இது மேல் மடத்திற்கு இட்டுச் செல்லும் பல வகைப் படிகள் போன்றன. மக்களின் கருத்து வேற்றுமையினால் பலவாறாகக் கட்டப்பட்டாலும் கடவுள் ஒருவனே. வழங்கப்படும் எல்லாப் பெயர்களும் ஒரு கடவுளையே காட்டுகிறது. கட+உள் - கடந்து உள்ளிருப்பவன். ''சிவ'' என்னும் சொல்லால் வியாபகமாக்கப்படுகிறது. சிவ சம்பந்தம் சைவம் என்ப, சிவத்தின் மேம்பட்ட பொருள் வேறில்லை. எனவே மரத்தில் கிளை, பூ, காய், கனி, போன்ற அவயவம் மரத்துள் அடங்குவது போல் இந்து சமயக் கூறுகளும் வகைகளும் சிவத்தின் அகத்தே அடங்குவது திண்ணம்.

இந்து சமயத்தின் உள்ளே மூலக்கடவுளாக வைத்து வணங்கப்படும். இறையின் அடிப்படையில் ஆறு சமயங்களாக வகைப்பாடு மக்களால் ஏற்படுத்தப்பட டுள்ளது. எவை எப்படி இருந்தாலும் ஆறு சமயங்களும் முத்தி இன்பத்தின் வழியையே இயம்பி நிற்கின்றன.

சைவம், சிவனை முழு முதற் கடவுளாகவும் இருபத்தெட்டு, மூல ஆகமங்களையும் இருநூற்றெட்டு உப ஆகமங்களையும் கொண்டு விளங்குகின்றதென,

"பெற்றநல் ஆகமம் காரணங் காமிகம
உற்றநல் வீரம் உயர் சிந்தம் வாதுளம்
மற்றவ் வியமான மாகுங்கா லோத்தரந்
துற்றநற் சப்பிரஞ் சொல்லு மகுடமே."

என்று திருமந்திரத்திலே திருமூலர் விளக்குகிறார்.

சக்தியே முதற் பொருள் என்னும் கொள்கையே சாக்தமதக் கோட்பாடு ஆகும். உலக மாதாவாகிய சக்தியை கருதி வழிப்படும் இம்மதம் வேதகாலம் முதல் இருந்தமையை மொகஞ்சதாரோ கரப்பா புதைபொருள் ஆராய்ச்சி சான்று பகர்கிறது. இது மட்டுமன்றி சைவத்தைப் போன்று சரிகை, கிரிகை, யோக, ஞான மார்க்கங்களும் அறுபத்து நான்கு வகைப்பட்ட தந்திர பேதங்களும் உள்ளடங்குகின்றன. இத் தந்திர பேதங்கள் சாக்த ஆகமம் ஆகவும் கொள்ளப்படும்.

விஷ்ணுவின் தத்துவங்களையும் வழிபாட்டு முறைகளையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்த சமயம் வைஷ்ணவ சமயம் ஆகக் கொள்ளப்படுகிறது. இங்கு விஷ்ணுவாகிய நாராயணனே முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபாடு செய்யப்படுவர். இங்கும் சைவத்தைப் போன்று ஆலய அமைப்புக்களையும் வழிபாட்டு முறைகளையும் போதிக்கின்ற ஐந்து சங்கதைகளும் தந்திரங்களும் உள்ளன. இவை சைவ பேத நூற்கருத்தை ஒத்தவை. இங்கும் இறைவன் பர, வியூக, விபக, அந்தர்யாமி, அர்ச்சாரூபங்களில் தன்னை வெளிப்படுத்தி அருளுவான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் கணபதி என வழங்கப்படும் விநாயகரை முழுமுதற் தெய்வமாகக் கொண்டு வழிபடும் சமயம் காணபத்தியம் என அழைக்கப்படுகிறது. ஆனாலும் சைவ சமய கடவுள்களுள் ஒருவராகவே சைவர் விநாயகரை வணங்குவர். அசுரர்களை அழிப்பதற்கு எடுத்த வேவ்வேறு

MULTICOMP

Your link to every computer need





690, GALLE ROAD, COLOMBO 3.
TEL : 502924, 502464

With Compliments

SHALIKA TRADERS

17, 2ND FLOOR,
SUPER MARKET,
NUGEGODA,
SRI LANKA.

TELEPHONE : 554046

வடடிவங்களுள் ஒன்றாகவும் கணபதியை கருதுவர். இங்கும் சைவபேத ஆகமங்களை ஒத்த ஆகமப்பிரிவுகள் பல உண்டு. சிவம்,சக்தி இரண்டும் சேர்வதால் பெற்ற வடிவிது என திருமந்திரம் ஒதுகின்றது.

குமரப் பெருமானை ஆதித் தெய்வம் எனப் போற்றிக் குறிக்கப்படுவது கௌமாரம் எனும் சமயம் ஆகின்றது. ஆனால் இந்து மதத்தின் பிரதான பிரிவான சைவம் முருகனைத்தன் உப வடிவமாக ஆன்ம ஈடேற்றத்திற்கென அமைத்துக்காட்டுகின்றது. சூரபத்மனாகிய அரக்கர் குழாம் அழிக்கப் படுவற்கென சிவனின் நெற்றிக்கண் பொறியிலிருந்து தோன்றிய தெய்வ மூர்த்தமாக முருகப் பெருமான் வணங்கப்படுவர். முருகனும், சக்தியும் சேர்ந்த சிவமூர்த்தம் சோமஸ்கந்தர் என அமைவது காண்க.

இறுதியாக இயற்கை முதல் என்னும் ஆரியனை ஆதிக்கடவுளென்றும் முதற்கடவுளென்றும் கொண்டு அமையும் சமயம் சௌரம் எனப்படகிறது. இதில் மற்றைய சமய வகைக்கு உரிய முக்கியத்துவம் காணப்படவில்லை என்றே கூறலாம். ஏனெனில் மற்றைய சமய வகைளினுள் இவரின் சமய வழிபாடு அமைந்துவிடுகின்றது.

"அறுவகைச் சமயத்தோர்க்கு மவ்வவர் பொருளாய் வேறாங்
குறியது உடைத்தாய் வேதா கமங்களின் குறியிறந்தங்
கறிவினி வருளால் மன்னி யம்மையோ டப்பனாகிச்
செறிவொழி யாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம்"

என சிவஞான சித்தியார் மூலம் அருணந்தி சிவாச்சாரியார் வெளிப்படுத்துகின்றார். இவர் இப்பாடலில் குறிப்பிடும் கருத்து யாதெனில், சைவம், வைஷ்ணவம், சாக்கதம், கௌமாரம், சௌரம், காணபத்தியம் என வகைப்பாடு பல இருந்தாலும் இவற்றின் வேதாகமங்கள் பல வகையாக குறிக்கப்பட்டிருந்தாலும் முடிவில் இறைவன் ஒருவனே அவன் சிவனெனப்படும் ஒளிமிகு கடவுளே எனக்குறிப்பிடப்படுகிறது.

"யாதொரு தெய்வம் கொண்மூர் அத்தெய்வ மாகி ஆங்கே
மாதொரு பாக னார் தாம் வருவர்."

எனும் கருத்திற்கமைய எவ்வடிவை இறைவனெனக் கொண்டு வணங்கினும் அவ்வடிவில் வருபவர் மாதொரு பாகனாகிய சிவனே படைத்தல் முதலான பஞ்ச கிருத்தியங்களை ஆற்றுதற் பொருட்டு இவ்விறைவன் பல்வேறு மூர்த்தங்களாக அமைகின்றன.

உயிர்களுக்கு மலபாகம்செய்தற் பொருட்டு ஐந்தொழில் செய்தலைக் குறித்து சிறப்பு வகையால் வியாபரிக்குங்கால் இச்சா, ஞானா கிரியை என முத்தி பெறப்படும். இச்சக்திகளை சிவன் பொருந்திய போது சக்தி காரியமான அருட்திருமேனி உருவாகும். அஃதாவது சிவனுக்கு முறையே நிஷ்கள, நிஷ்கள சகள திருமேனி உண்பாம். அம்மூர்த்தி சதாசிவன் உத்தியுத்தன் போக சிவன் எனப் பெயர் பெறுவான். சகளத்திருமேனியில் இம்மூர்த்தி மகேஸ்வரன், பிரவிந்தன். ஆதிகாரசிவன், சகள சிவன் எனப் பெயர் பெறுவான். சிவம், சதாசிவம், மகேஸ்வரம் இம்மூன்றுக்கும் தம்முட் பேதமில்லை. சக்திகளின் தொழில் வேறுபாட்டால் இப்பேதங்கள் உண்டாம்.

ஆன்ம விடுபேற்றைப் பெற தனுகரணபுவன போகங்களைப் படைத்தருளிய இறைவன் அத்தொழில்களை மேற்கொள்ள பல்வேறு வடிவங்களையும் எடுக்கிறான். இது தில்லைக் கூத்தனாகிய நடராசப் பெருமான் ஆடும் திருநடனம் செப்புகின்றது. இதையே பஞ்சகிருத்தியத் திருநடனம் என்று வழங்குவர்.

இறைவன் பிரம புத்திரர்களாகிய சனகர், சனாதனர், சனந்தனர், சனற்குமாரர் ஆகிய முனிவர்களுக்கு மறைகளை மெய்யறிவு உண்டாகும் வண்ணம் போதிப்பதற்கு தெற்கு நோக்கி கல்லால மரநிழலில் ஞானத்தை உரைத்து சித் முத்திரை அடையாளம் கட்டி நின்ற வடிவமே தென்முகக்கடவுள் எனப்படும் தெட்சினா மூர்த்திவடிவமாகும்.

பெரியோர்களை அவமதித்துக் காரியமாகலாமா? இதை விளக்குமுகமாக திமிர் கொண்ட தக்கனின் யாகத்தை சிதைத்து அவனுக்கும் அவனுடன் இணைந்திருந்த தேவர் குழமுக்கும் நல்லறிவு புகட்டுமுகமாகவும் அவர்களைத் திருத்துமுகமாகவும் வீரபத்திரர் வடிவம் ஏந்கியமை சைவ மக்களால் போற்றப்படும் இறைவனின் திருவிளையாடல்களுள் ஒன்றே.

"பரமனை மதித்திடா பங்கையாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவன்"

என்று திருப்புராணம் சொல்வது போல் பரப்பிரம்மமான சிவனை மதிக்காத நான்முகனின் ஒருதலை கிள்ளிட உதித்தவரே வைரவக் கடவுள் என்கிறது புராண வரலாறு.

சிவனுக்குரிய சிவமூர்த்தங்கள் உருவாகும் வரலாறு போன்று இந்து சமயத்திலுள்ள மற்றைய ஆறுவகை சமய கூறுகளிற்கும் உபதெய்வங்கள் உண்டு. மக்கள் காவல் தேவைப்படும் போது காவல் தெய்வங்களையும் மழை வேண்டி நிற்கையில்மாலி யென்றும் காற்றுத் தருகையில் வாயுபகவான் என்றும் முறையே வருணன் தெயு போன்று ஐம்புதங்களையும் வணங்குகின்ற வரலாறு உண்டு. இதைவிட சக்திகளின் பல்வேறு வகைப்பட்ட வடிவங்கள் மக்களின் தேவை, கலாச்சாரம், பாரம்பரியம், சமூக சூழல்பொருத்தப்பாடுகளுக்கேற்ப வணங்கப்படுகின்றன. உதாரணமாக செல்வம் தேவைப்படுபவன் சக்தியை இலக்குமி என்கிறான். கல்வியை நாடுபவன் கலைவாணி என சக்தியை கலைத்தாயாக கண்டு வணங்குகிறான். அதேபோல் துர்க்கை வீரம் வேண்டி நிற்பவனுக்கு ஆதரவு நல்கின்றான். இது ஒரு பெண் ஒருவனுக்குத் தாயாகவும் இன்னொருவனுக்கு மனைவியாகவும் வேறொருவனுக்கு மகளாகவும் இருப்பதைப் போன்றது. அப்பெண் ஒருத்தியே தாயாய், சேயாய், மனைவியாய் காண்பதுபோல், சக்தி கலைமகளாய், அலைமகளாய், மலைமகளாய் எடுக்க வேண்டிய நிலை மக்கள் வழிபாட்டு முறையால் ஏற்பட்டது எனக்கூறலாம்.

நால் வேதங்கள் நான்கு திருமுகங்களிலிருந்து உபதேசிப்பதால் ஈசானம் முதல் காமிகம் ஆகிய இருபத்தெட்டு ஆகமங்களை அருளிச் செய்கிறான். இவ்வாறு ஒருவனே தெய்வம் எனினும் கிருத்தாங்களின் பொருட்டும், சக்தி வேறுபட்டாலும் மக்களின் வழிபாட்டு முறைகளாலும் இறைவன் வடிவங்களையும் அதற்குரிய திருநாமங்களையும் பெறுகின்றான்.

இறைவன் அன்பின் திருவுருவம் அன்பைக் காட்டி இறைவனை காணலாம். அதையே திருமூலர் திருமந்திரத்திலே பின்வருமாறு எமக்கு அருளுகிறார்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாரும் அறிகிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே."

With Compliments

from

NILWALA AGENCY

157 1 /2 A, MAHAVIDYALAYA MAWATHA,
COLOMBO 13
SRI LANKA.

T. PHONE : 326144

WITH BEST COMPLIMENTS

FROM

ALI BROTHERS

IMPORTERS OF MOTOR VEHICLES
DIESEL CARS FOR PROFESSIONAL 25%
DUTY CONCESSIONARY PERMIT HOLDERS

No. 228, LAYARDS BROADWAY,
COLOMBO 14,
SRI LANKA.

Tel : 541104, 439493
Telex : 22722 ALIBRS CE
Fax : 94-1-541104

WITH BEST COMPLIMENTS

FROM

MARINA RADIO ENTERPRISES LTD.

No. 70, BANKSHALL STREET,
COLOMBO - 11.

WITH BEST COMPLIMENTS

FROM

SUWAIRA CLEARING AGENCY

"CUSTOMS HOUSE AGENTS"
CLEARING & FORWARDING AGENTS

No: 33, Modera Street,
Colombo-15

Phone : 522403

அன்றோர் சொல்வழி வித்துவான் வேண்டும் நிற்பதுவோ?

உலகம் முன்னேறத் தோன்றிய அருளாளர் பலவகையினர். அவர்களுள் இறையருள் பெற்று உண்மையுணர்ந்த உணர்த்திய ஞானிகள் ஒரு வகையினர் வேதகால இருடிகளிகளிலிருந்து யேசுபெருமான், நபிகள் நாயகம், பகவான் இராமகிருட்டினர், யோக சுவாமிகள் வரை இக் கொடிவழி நீண்டுவருகின்றது.

மற்றொரு வகையினர் கல்வி அறிவும் ஞானமும் பெற்றுத் தம் புலமையாலும் திருவருட் செல்வத்தாலும் உலகு வாழ வழி அமைத்தவர்கள். இக் கொடிவழி சங்கரர், இராமனுசர் விவேகானந்தர், அரவிந்தரென நீண்டு செல்கின்றது.

இன்னொரு வகையினர் வாழ்வின் இயக்க விதிகளை விஞ்ஞான அறிவியல் ரீதியாக உணர்ந்து பகுத்தறிவுப் பாதையில் சமூக வளர்ச்சிக்கு வழிகாட்டியவர்கள். போதி மாதவன், சார்வாகர், கால் மாக்ஸ், பெரியார் ஈவேரா என்போர் இப்பிரிவில் அடங்குவர்.

இவர்கள் எல்லோரும் அவதார புருஷர்களே, இறையருள் பெற்றவர்களே. இவர்கள் அருளிய ஞானச் செல்வமெல் லாம் சரஸ்வதி கடாட்சமே. மதம் அபின் என்றுகூறிய கால் மாக்ஸ், வேதவேள்வியை நிந்தனை செய்து இறைவழிபாட்டைப் பொருட்படுத்தாத உலோகாய்த பௌத்த சமணர், கடவுளைக் கும்பிடுகிறவன் காட்டுமுராண்டி எனக்கூறி, இராம விக்கிரகத்தையும் பிள்ளையார் சிலையையும் அவமானப்படுத்திய ஈவேரா போன்றவர்களும் இறையருள் பெற்ற ஞானிகளே என்னும் கூற்று, சிலருக்கு வேம்பாகலாம்.

''எது எம்மைப் பணி கொள்ளுமாறு எம் பெருமான்'' என்று பக்தர்கள் வினவுகிறார்கள். ''ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதிமாண்பும் கேட்பான்புகில் அளவில்லை'' என்று வியக்கின்றார்கள்.

உருளும் தேரின் வடம் பிடித்து இழுப்பவர்கள் மாத்திரமல்ல, கட்டை போட்டுச் சக்கரத்தைத் திசைதிருப்புகிறவனும் பக்தனே.

கட்டிடத்தைக் கட்டி எழுப்பியவன் மட்டுமல்ல; அத்திவாரமிட நிலத்தைத் தோண்டியவனும் கட்டிடம் பெலமாக எழும்ப உதவியவனே. முரண்பாடு தடைச் சக்தியல்ல, வளர்ச்சிக்கு உதவும் ஒரு சக்தியே.

Our greatest benefectors are our enemies என்னும் வினோபாவின் அமுத வாக்குச் சிலருக்கு நஞ்சாகலாம். ஆனால் அது அமுதவாக்கே. தடுத்தாட்கொள்ளல் என்பதும் கோபபிரசாதம் என்பதும் சைவ சமயத்தில் பெரிதும் பேசப்படும் உண்மை.

சுந்தரரைத் தடுத்த போது, தடுத்தாரை முதியர் என்றும் பாராது பித்தன், பேயன் என்று பேசிவிட்டார். அந்தணர்க்கு அடிமையாவ தில்லை என ஆணவம் பேசிய அவரே,தில்லை வாழ் அந்தணருக்கு மாத்திரமன்று, அவர் தம் அடியாருக்கும் அடியேன் என்றார். அடுத்து திருநீலகண்டத்துக் குயவனார்க்கு அடியேன்'' என்று பாடினார். வேதகால ஞானச் செல்வத்தைத்தம் நலத்துக்குப்பயன் படுத்திச் சமுதாயக்கேடு சூழ்ந்தபோது, சார்வாகம், சமணம், பௌத்தம் எல்லாம் தோன்றின. தோன்றுவது காலத்தின் தேவையாயிற்று, அது கடவுளின் கருணை, கோபப் பிரசாதம்.

பக்தி சிதைந்து, அறிவு வரண்டு தன்னலம் மிகுந்து மேகதல் கலந்த போது சணமதம் காணச் சங்கரர் வந்தார். அதுவும் காலத்தின் தேவையாயிற்று. அறிவுமிகுந்து சமநிலை பிறழ்ந்த போது, தென்னாட்டில் தோன்றிய பக்தி வெள்ளம் வட நாடெல்லாம் வெள்ளமெனக் கரை புரண்டது.

அறிவை அறிவால் வென்ற சங்கரர் பின் வந்தோர் அன்பை மறந்த காரணத்தால், திருவரங்கக் கோபுரத்தில் நின்று மூல மந்திரத்தை எல்லோர்க்கு கூறினான். ஒரு ஞானி, ''பாவி நரகத்துக்குப் போவாயே'' என்ற போது, மூலமந்திரத்தைக் கேட்டவர் மோட்சம் புகுவராயின், கூறிய நான் ஒருவன் நரகில் வீழ்ந்தால் என்ன? என்றான் அந்த அருளாளன். சரணாகதியே தத்துவம் என்றான். அவனே இராமானுசன்.

இருந்த தத்துவங்களுக்கும் இந்த நாட்டின் வறுமையையும் அறியாமையையும் பயன்படுத்திப் புகுந்த தத்துவங்களும் மக்களை கூறுபோட்டுக் குழப்பிய வேளையில், சமரசத் தத்துவம் ஒருதேவையாயிற்று. தாயுமானவர், இராமலிங்கர் போன்றோர் தென்நாட்டிலும் இராமகிருட்டினர் வட நாட்டிலும் தோன்றினர்.

இந்து தத்துவ சமயப் பிரிவுகளை மாத்திரமல்ல, இந்திய சமய தத்துவங்களையும் நிச்சித வாதத்தையும் ஏற்றுச் சமரசம் தொடங்கியது. ''அப்பாலும் அடிசார்ந்த அடியார்க்கும் அடியேன்'' எனச் சுந்தரமூர்த்தி நாயனார் தமிழ் நாட்டில் தொடக்கி விட்டார். நிரீருச் சுரவாதத்தையும் புறபுறச் சமயங்களுள் ஒன்றாகச் சைவ சித்தாந்தம் ஏற்றுக் காண்டது.

இராமகிருட்டினரும் இந்து சமய இயக்கங்கள் பலவும் காந்தியடிகள் தாகூர் போன்ற அரசியல் ஞானிகளும் ஞானக் கவிஞர்களும் சமரசமே பாடினர்.

ஈழத்தில் நாம் செய்த தவத்தால் வந்த யோக சுவாமிகள், ''வேதாந்த சித்தாந்தம் வேறாகக் காணோம்'' என்றார்.

சமரச முயற்சிகள் ஒரு புறமிருக்க, பருநதாத சமுதாயத்தை திருத்த ஒரு வேகம் தேவைப்பட்டது. கால் மாக்ஸ் புரட்சி ரூசியாவில் ஆகா வென்று எழுந்தது. அவ் வழியில் ஈவேரா தமிழ் நாட்டில் இயங்கினார். நாய் வாலை நிமிர்த்தப் பலர் முயன்றனர். முயன்று கொண்டே இருக்கின்றனர். இன்னும் பலர் முயல்வர் நாய் வால் நிமிருமா?

PUREGENTA (PVT) LTD

SRI KATHIRASAN STREET
COLOMBO 11
SRI LANKA.

TELEPHONE : 446886

மக்கள் பணியில் பெறும் மாதவப் பேறு

செல்வி வ. கணபதிப்பிள்ளை

செயலாளர்
''சாரதா குடீர்''
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சமிதி,

நம் பண்டை மாமுனிவர்கள், இருஷிகள், உலகின் அநித்தியத்தை உணர்ந்திருந்தனர். மனம் போன போக்கில் வாழ்ந்து புலனின்பத்தில் காலம் கழிப்பதனால் திரும்பத் திரும்ப உலகில் பிறந்திருந்து உழல்வதே அன்றிப் பிறப்பில்லாப் பெருநிலை கிட்டாது என்பதை உறுதியாக நம்பினர். எனவே புலன்களைப் பொறிவழிச் செல்லவிடாது தடுத்து, ஆமைபோல் ஐந்தடக்கி இறைதியானத்தில் மனதை நிறுத்தி உள்முக தரிசனம் பெற்று பேரின்பத்தில் திளைத்தனர். இறைவனே உள்நின்று உணர்த்த பல மெய்ஞ்ஞான உண்மைகளை அறிந்து வெளிப்படுத்தினர். அவ்வாறு வெளிவந்த உண்மைகளே இறைவனே அருளிச் செய்தனவான எமது சமய சாஸ்திரங்கள்- வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள், தரிசனங்கள் ஆதியன.

இவ்வாறு வெளிப்போந்த எமது சமய சாஸ்திர- மெய்ஞ்ஞான உண்மைகள் தற்கால விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் கண்டறிகின்ற விஞ்ஞான உண்மைகளோடு ஒத்து இருப்பதை பல விஞ்ஞான மேதைகளே பாராட்டுகின்றனர். இவ்வாறு எமது பண்டைப்பெரு ஞானிகள் காட்டிய வழியில் நின்று சமய சாஸ்திர உண்மைகளை உணர்ந்து, தனிமையில் இருந்து தவம் பெரிது இயற்றி வீடுபேறு அடையக்கூடிய மக்கள் உலகில் மிகமிகச் சிலரே. அவ்வாறு வாழ விரும்புவோர்க்கு ஏற்ற ஞானகுரு கிடைப்பதும் அரிது. ''தூய நன்மணிகளை அள்ளி வீதிகளில் வீசக்கூடாது'' என்ற கருத்தினால் உயர்ந்த சாஸ்திர உண்மைகளை மறைத்து வைக்கின்ற வழக்கமும் நம்மவரிடம் இருந்து வந்திருக்கின்றது.

பாரதநாட்டு மெய்ஞ்ஞானத்தை நம்நாட்டு மக்கள் மட்டுமன்றி அகில உலக மக்களுமே அறிந்துகொள்ள வேண்டும்; நம்நாட்டு மக்கள் பலரும் எமது சமய சாஸ்திரங்களைக் கற்கவேண்டும்; ஆன்மார்த்த வாழ்க்கை வாழ்வதற்கேற்ற உடற் பெலமும் உள்ள வலிவும் பெறவேண்டும்; அதற்கான உலோகாயத வாழ்வில் பூரணமான நிறைவு பெறுவதற்கு நாட்டு வறுமை ஒழிய வேண்டும்; இதற்கான மேலை நாட்டு விஞ்ஞான பொருளாதார வளர்ச்சியைப் பாரதநாடு பெறவேண்டும்; பாரதநாட்டு மெய்ஞ்ஞான உண்மைகளை மேல்நாட்டவர் அறிந்தொழுக வேண்டும் என்று எல்லாம் ஓர்ந்துணர்ந்தார் வங்கநாடு தந்த தவப்புதல்வர் சுவாமி விவேகானந்தர். உலோகாயதக் கல்வியே வேண்டாம் என்று ஒதுக்கித் தள்ளி இறைதரிசனத்துக்காகவே ஏங்கி இருந்து கடவுட்காட்சி பெற்று அதன் பயனாக மெய்ஞ்ஞான அறிவினை ஐயந்திரிபற உணர்ந்து தெய்வமாகவே நடமாடிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் பாதக்கமலங்களில் சரணடைந்து தெய்வீக அனுபவம் பெற்று சகல சாஸ்திர அறிவும், அதீதமான செயல் திறமையும் பெற்றார் நரேந்திரநாதர்.

இதன் பயனாக எமது சமய வரலாற்றிலே துறவியர் வாழ்க்கை முறையில் ஒரு திருப்புமுனை உதயமாயிற்று. தனித்திருந்து தவம்புரிந்து ஆன்ம விடுதலை பெறும் நிலைமாறி, மக்கள் மத்தியில் உறுதியான உள்ளத் துறவு நிலையில் நின்று பற்றற்ற, பயன் கருதாத, பூரண சரணாகதியுடனான விடுதலையைத் தாம் மட்டுமன்றி பிற மக்களும் அடையச் செய்வதான ஒரு புதிய துறவு வாழ்க்கை மேற்கொண்டொழுகும் துறவியர் சங்கம் ஒன்று உருவாயிற்று. இதுவே உலகின் பல பாகங்களிலும் கிளைகளைப் பரப்பிப் பணிபுரியும் இராமகிருஷ்ண சங்கமாகும்.

எமது நாட்டில் இச் சங்கத் துறவியர் ஆற்றும் பணிகளில் பங்குகொள்ளும் வாய்ப்புப் பெற்றதனால், பூரண மனநிறைவும் இன்பமும் எனது அனுபூதியாகும். என்போன்றோர் உள்ளங்களில் அதற்காக ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத்துக்கும் அச் சங்கத்தின் கொழும்புக் கிளைத் தலைவராகப் பல்லாண்டுகள் பணிபுரிந்த ஸ்ரீமத் சுவாமி பிரேமாத்மானந்த ஜீ மஹராஜ் அவர்களுக்கும் என்றென்றும் நன்றி நாதம் ஒலித்துக் கொண்டே இருக்கும். இராமகிருஷ்ண மிஷன் செய்து வரும் மக்கட் பணிகள் பலவற்றிலும் பங்கு கொண்டு முக்கியமாக அவர்கள் நடாத்தும் சமயப் பாடசாலைகளில் சித்தசுத்தியோடு பணிபுரிவது பெரும் பாக்கியம் என்றே கருதவேண்டும். இப்பணி எனது சமய சாஸ்திர அறிவை வளர்ப்பதற்கு உதவியதோடு, உள்ள உயர்வையும், ஆத்ம திருப்தியையும் நாம் பெறுவதற்கு ஏற்ற சாதனமாக அமைந்தது. பெயரோ,புகழோ, பதவியோ, பொருளோ என்று எந்தவிதமான பிரதிபலனையும் கருதாத, முறையில் சேவை செய்ய அந்த ஸ்தாபனம் அளிக்கும் பயிற்சி மனிதனை முழு மனிதனாக்குகின்றது. பணி செய்யும் கால் தோன்றிய இடையூறுகள் யாவும் இறைவனிமிருந்து வந்த உந்து சக்திகளாகவே அமைந்தன. இடையூறுகளைக் கண்டு பின்னடையாத மனோநிலை இடையூறு நேரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இறைவனுக்கு அண்மையிற் செல்லும் பழக்கம், பொறுப்பு முழுவதையும் இறைபாதங்களில் அர்ப்பணித்து சுமையேதுமற்ற தெளிந்த உள்ளத்துடன் கருமங்களை ஒழுங்குறச் சிந்தித்துச் செயலாற்றும் இயல்பு, செயலினால் வரும் வெற்றி தோல்வியினால் மனநிலை தடுமாறாமை, புகழ் இகழ் இவற்றில் கருத்துச் செலுத்தாத உள்ளம், செயலின் பயன் அனைத்தையும் இறைவன் பாதங்களில் அர்ப்பணம் செய்துவிடுதல்- இவை எல்லாம் பணி செய்ததனால் மனநிறைவைப் பெறுவதற்கு உற்ற உபாயங்களாயின. யார் எதைச் சொன்னாலும் செய்தாலும் அவற்றைப் பொருட்படுத்தாது குறிகோளை அடையும் நோக்கில் மட்டும் உறுதியாயிருக்கும் உள்ளப்பாங்கு பெரும்பயன் விளைத்தது. பகவான் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அருச்சுனனுக்குப் புகட்டிய கர்மயோகம் எவ்வாறு ஆத்மீக விழிப்பைத் தருகிறது; ஆன்மீக விடுதலைக்கு வழிவகுக்கிறதென்பதை அநுபவத்தில் உணரும் பேறு கிடைக்கின்றது.

இராமகிருஷ்ண சங்கத்தில் சேர்ந்து கொண்டதினால் பெண் துறவியர் சங்கமாகிய சாரதா சங்கத் தொடர்பு கிடைக்கும் பாக்கியம் பெற்றோம். எமது நாட்டிலும் பெண் துறவியர் சங்கம் ஒன்று தோன்ற வேண்டும் என்ற குறிக்கோளுடன் 1970 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் பிறந்தநாளன்று ஸ்ரீ ராமகிருஷ்ண 'சாரதா சமிதி' என்ற பெண்கள் சங்கம் ஒன்று ஸ்ரீமத் சுவாமி பிரேமாமானந்த ஜீ மஹராஜ் அவர்களால் கொழும்பில் ஆரம்பித்து பெண்கள் அன்னை சாரதா பணி!

With Compliments

TWYFORDS - BATHROOMS,

THE BEST OF BRITISH

SOLE AGENTS :

ARMZ EXPORTS & IMPORTS

HEAD OFFICE :
4- G/2 REGENT BUILDING
SIR CHITTAMPALAM A..
GARDINER MAWATHA,
COLOMBO 02
SRI LANKA.
PHONE : 434664, 24374

STORES & SALES CENTRE
123-125 ABDUL HAMEED STREET
COLOMBO - 12
PHONE : 327374, 422088

25, LAURIES PLACE
DUPLICATION ROAD
COLOMBO - 4
PHONE : 587480, 581275

மக்கள் பணியில் பெறும் மாதவப் பேறு

வழிச் சென்று சேவை செய்ய உதவியமை அந்த அமைப்பின் செயலாளராகக் கடமையாற்றும் பொழுது ''நான்'' என்ற நினைப்பற்று தொண்டுகள் செய்யும் பேருணர்வின் சிறந்த அனுபூதியாகும். சாரதா தேவியின் பெயரால் எதை நாம் செய்ய முன்வந்தாலும் அவரே உள்நின்று உணர்த்தி முன்னின்று செயற்பட, செய்யும் பணிகளெல்லாம் சிறப்பாகவே நிறைவுறுவதை நினைக்கும் தோறும் உள்ளம் பூரிப்படைகிறது.

